பூவரசி இணைய அரையாண்டிதழ்
ஜனவரி 2013

# பூவரசி

நிஜமும் புனைவும்

விலை : 100
இதழ் : 3

ச மூ க இ ல க் கி ய சி னி மா அ ர சி ய ல்

ஈழக்குழந்தைகளின் அவலத்தின் அடையாளம் - "அம்மா வருவா"
- யாழ்தர்மினி






"நாட்டில இருக்கப் பயந்தவர்கள் ஏன் பேச வேண்டும்? இலக்கியத்தில் என்ன பெரிசா கிழித்துவிட்டார்கள்...? "
- டொமினிக் ஜீவா

"இத்தனை ஆண்டுகள் தமிழகத்தில் தமிழன் அகதியாக, அடிமையாக வாழ்வதென்பதுதான் வேதனையைத் தருகிறது"
- பத்திநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் ஆணியின்

# விந்தையாய் விரியுதடி




**கிடைக்குமிடங்கள்**

டிஸ்கவரி புத்தகநிலையம்
K.K. நகர்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
கொழும்பு, இலங்கை.

மித்ர
வெளியீடு

விலை
ரூ. 150

www.aani.co

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டுரைகள்**

தாய் நிலத்தைப் பிச்சை....

-திமிரன்

13வது திருத்தச்சட்டத்தை....

-தீபச்செல்வன்

ஈழம் - பெண்கள்

-கிளிநொச்சியிலிருந்து ஜெரா

பாரதியாரின் கல்விச்...

-தமிழ்த் தென்றல் தம்புசிவா

அரங்கச் செயற்ப்பாடு

-எஸ். ரி. அருள்குமரன்

ஈழக் குழந்தைகளின்.... "அம்மா வருவா..."

-யாழ் தர்மினி பத்மநாதன்

**பேட்டி**

நான் தாழ்த்தப்பட்டவன்...

-டொமினிக் ஜீவா

மக்களின் வரிப்பணம்...

பத்திநாதன் பேட்டி

புலம் பெயர் படைப்புகள் மீதான
விவாதங்கள்

-அக்கினி 77

**சிறுகதைகள்**

சிகப்பு சப்பாத்து அணிந்த குழந்தையும்...
(மொழிபெயர்ப்பு)

-பியல் காரியவசம்

வாடகை வீடு

-யாழ் தர்மினி பத்மநாதன்

நந்திக்கடல் தந்த நம்பிக்கை

-செங்கை ஆழியான்

விழுங்கப்பட்ட விதைகள்

-அ. மயூரன். லண்டன்

**கவிதைகள்**

தஜீன்
தீபச்செல்வன்
நிலா (லண்டன்)
பாலகணேசன்
திருமவளவன் கனகசிங்கம்
கு. றஜீபன்
அகரமுதல்வன்


# பூவரசி

அரையாண்டு இதழ் - 3
2013 - ஜனவரி

**சூரியன் பப்ளிகேசன் (பி) லிமிடெட்**

ஆசிரியர்
**ஈழவாணி**
eezhavani@gmail.com
0091 9600131346

உதவி ஆசிரியர்
மரீனா
யாழ்தர்மினி பத்மநாதன்

நிர்வாக தொடர்புகளுக்கு
K.S. மதீரன்
91 44438 06382

email:
editor@poovarashi.com
pouvarashi@gmail.com

**நெ.6. முதலாவது மாடி,**
**27-வது தெரு,**
**பிள்ளையார் கோவில் முன்பாக,**
**கிருஷ்ணா நகர்,**
**மதுரவாயில், சென்னை-95.**
**தமிழ்நாடு,இந்தியா**

**இல 371 மதவடிலேன்**
**மன்னார் வீதி, வேப்பங்குளம்**
**வவுனியா, இலங்கை**

ஓவியம்
**ஞானபிராகாசம் ஸ்தபதி**
**மணிவண்ணன்**
அட்டை
**செந்தில்குமார்**
வடிவமைப்பு
**தீபக்**
**இணையம்**
www.poovarashi.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணங்கள்



பயணங்கள் வாழ்க்கையில் பல தெளிவுகளையும் சில விடயங்களைச் சரிவரத் திட்டமிடுவதற்கான இடை வெளிகளையும் தருகின்றன. சென்ற ஆண்டின் பயணங்கள் என் மூளையின் பகுதிகளில் உறைத்துகொண்டே இருந்தன.

ஆனால் நான் சென்ற இலங்கைப் பயணம் இரண்டு தடவையிலேயும் மிகுந்த வருத்தத்தையும் தாழ்வுணர்ச்சி யையும் எரிச்சலையுமே தந்தன. இலங்கைக்குச் செல்லக்கூடிய இந்திய விமானத்தில் தமிழ் முகங்களைத் தேடிப்பிடிக்க வேண்டிய நிலமை. எங்கு காணினும் சீனரும் சிங்களருமே.

இமிக்றேசனில் கூட அவர்களுக்காக தனியாக ஒரு வரிசை விசேடமாக வேறுபக்கத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது. தவிர மற்றவர்களுக்கு அதிகூடிய பரிசோதனை இந்தியத் தமிழர் உட்பட, இந்தியத் தமிழராயின் இப்பொழுது சிறப்புப் பிரிவின் விசாரணையோடுதான் அனுமதிக்கிறார்கள் (V.V.I.Pகள் இதில் அடக்கமில்லை).

இணையங்களிலும் செய்திகளிலும் கேட்பதைப் பார்ப்பதைவிட நேரடியாகப் பல செய்திகள் கிட்டும்போது உண்மையிலேயே அதிர்ச்சியடையத்தான் வைக்கிறது. இலங்கைக்குச் சென்று வந்த இரண்டு பயணங்களிலேயும் மிகவும் வருந்தத்தக்க சம்பவங்கள் நிகழ்வுகளைத்தான் என்னால் எதிர்கொள்ள முடிந்தது. பெண்கள் சீரழிப்பும், சிறுவர் பாலியல் கொடுமைகள் என்பதும் எண்ணிக்கையற்று அன்றாடக் காரியங்கள் போலவே நிகழ்ந்து வருகிறது.

இந்த இதழில் ஈழம்-பெண்கள் என்ற பகுதியில் இடம்பெறும் கட்டுரை யில் கூறப்படுவது முற்றிலும் அங்கே தினம் தினம் இடம்பெற்றுக் கொண்டிருக் கும் கொடூரங்கள். நான் நேரடியாக சந்தித்த சம்பவம் ஒன்று. வெள்ளவத்தை யில் இருக்கக்கூடிய பிரபலமான பெண்கள் கல்லூரிக்கு மாணவர்களை ஏற்றிச் செல் லும் றோஸா பஸ்சில் 5ம் ஆண்டு படிக்கும் மாணவியை ஓட்டுனர் பாலியல் இச்சைக்குப் பயன்படுத்தியிருக்கிறார். பிள்ளை வீட்டிற்குச் சென்றபின் பெற்றோரை உடுப்பைக் கழற்றவே, குளிப்பாட்டி விடவே அனுமதிக்கவில்லை. இரண்டு மூன்று நாட்கள் இது தொடர, தாய் சந்தேகப்பட்டு பார்த்த போதுதான் தெரிந்தது. அந்தச் சிறுமியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சு பெண்ணுறுப்புப் பகுதிகளில் எல்லாம் கடித்துக் கண்டிப்போய் சிவந்து, சில இடங்களில் புண்ணாகவும் கண்டிப்போய் சிவந்தும் இருந்தது. பிள்ளையை அதட்டி விசாரித்த போதுதான் விடயம் தெரிந்தது. ஓட்டுனர் குறித்த சிறுமியை வண்டியில் ஏற்றி, சிறிது தூரம் சென்றபின் ஓட்டுனர் இருக்கைக்கு அருகில் அமர்த்தி வைத்துக் கொள்வதாகவும், சில நாட்கள் அவளைக் கல்லூரியில் இறக்கிவிடாமல் டெகிவல பீச்சிற்கு கூட்டிப்போய் இப்படி உறுப்புகளில் கடித்தும் கிள்ளியும் காம இச்சையைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார். பெற்றோர் இதை அடுத்த நாள் கண்டுபிடித்தும் வெளியில் யாரிடமும் சொல்லாமல் மறைத்துக் கொண்டார்கள். தம் பிள்ளைக்கும், குறித்த கல் லூரிக்கும் அவமானம் நேர்ந்திடும் எனப் பயந்து.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டே இருக்கிறது. அதைத் தடுக்கவே குறைக்கவே எந்த நடவடிக்கையை எடுப்பது என்பதிலும் தடுமாற்றமே.

அண்மையில் கிளிநொச்சி பொதுவைத்திய சாலையில் இடம்பெற்ற சம்பவம். பதற்றமான ஒரு சூழ்நிலையை வன்னித் தமிழ்ப் பெண்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது.

பல வருமானமின்றிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த குடும்பங்களின் சிறுபிள்ளைகள் தொட்டு கணவனை இழந்த பெண்கள் பெண் போராளிகள் எனப் பல பெண்களையும் ராணுவத்தில் இணைத்திருக்கிறார்கள். இவர்களைத் தையல் நிறுவனம் ஒன்றில் வேலை வாங்கித் தருவதாகக் கூறியே இணைத்திருக்கிறார்கள்.

பாவம் வறுமையின் நிமித்தம், வேலை கிடைப்பதனூடாக வருமானத்தைப் பெறலாம் என்ற எண்ணத்திலே முன்புலம் - பின்புலம் எதையுமே நோக்காமல் சென்றிருக்கிறார்கள் இதில் பரிதாபத்திற்குரிய விடயம் என்னவென்றால் முன்னால் பெண் போராளிகள் பெரும் எண்ணிக்கையிலே இதில் இணைக்கப்பட்டமையே. குறிப்பிட வேண்டிய விடயம் என்னவெனில் இதுவரை காலமும் ஸ்ரீலங்கா ஆர்மி படையில் தமிழர்கள் யாரும் இணைக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் இப்படிப் பெரும் தொகையாக இணைக்கப்பட்டதன் அரசியல் உள்நோக்கங்கள் யாதோ? எனப் பல கேள்விகள் பலர் மத்தியில் எழுந்தாலும், கேட்பதற்கு யாருக்கும் தைரியம் இல்லை.

கிளிநொச்சி போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இந்த பெண்களின் நிலைகளுக்கு யார் பதில் சொல்வது. பேய்பிடித்து விட்டதாகக் கூறி அனுமதிக்கப்பட்ட இந்த பாதிக்கப்பட்ட பெண்களை அரசு என்ன செய்திருக்கிறது என்பது மர்மமாகவே உள்ளது.

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகிதா பதிப்பகம்,

*காவியங்கள் பூக்கும் காகிதச்சோலை...*

கோவை




4/833 - தீபம் பூங்கா,
கே. வடமதுரை,
கோயம்புத்தூர் - 641017.
தமிழ்நாடு, இந்தியா. dhakitha@gmail.com, ☎ 919443751641

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் நிலத்தைப் பிச்சை கேட்கும் சம்பூர் மக்களின் தொடரும் அவலம்

திமிரன்

இலங்கையில் மூழும் நெருப்பாக பற்றியெரிந்த இனப்போராட்டம் ஒடுக்கப் பட்டதன் பின்னர் தமிழர் இன்னுமொரு வகையான அடக்குமுறைக்குள் தள்ளப் பட்டுள்ளனர். ஆயுதப்போராட்டத்தின் போது ஏற்படுத்தாத அபத்தத்தை இப்புதிய அடக்குமுறை தமிழர் வாழ் பகுதிகள் எங்கும் ஏற்படுத்தியிருக்கிறது. அதுதான் நில ஆக்கிரமிப்பு என்னும் அரசின் புதிய அழிப்பு முறையாகும். தமிழர் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வந்த தாயகப் பகுதிகளை திட்டமிட்டு ஆக்கிரமிப்பதன் மூலம் அம்மக்களது பண்பாடுகளைச் சிதைத்து வரலாறுகளைப் புதைத்து முடிவில்லாத அவலத்துக்குள் அவர்களைத் தள்ளிவிடும் சாணக்கியத்தையே இன்றைய அரசு கைக்கொள்கின்றது. நிலமே ஒரு மனிதனின் அடிப்படையாதலால் அவ்வடிப்படையைச் சிதைத்தல் அந்த இனத்தை அழிப்பதற்கு சிறந்த வழி முறையாகும். இந்நில ஆக்கிரமிப்பானது அடுத்த சந்ததிக்கு மாறுபட்ட வரலாற்றைத் தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த நடவடிக்கை இலங்கையில் வடக்குத் தொடங்கி கிழக்கு வரை இன்னும் நீண்டுகொண்டே செல் கின்றது. இத்தகைய ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட எமது பண்பாட்டு பாரம்பரிய நிலமே கிழக்கில் சூறையாடப்பட்ட சம்பூர் கிராமமாகும்.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேச செயளாளர் கிராமத் திற்குட்பட்ட மூதூர் கிழக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள அழகிய கிராமமே சம்பூராகும். திருகோணமலை மாவட்டத் தில் வரலாற்றுப் பாரம்பரிங்களோடு தமிழர் வாழ்ந்த பிரதேசங்களில் முக்கிய மான பிரதேசம் சம்பூர் பிரதேசம். கொட்டியாரக்குடாவை மேற்கும், வடக்கு மற்றும் கிழக்கில் வங்காள விரிகுடா வையும், தெற்கே தோப்பூர், சேருவில போன்ற பிரதேசங்களையும் எல்லை களாகக் கொண்டமைந்த நீண்ட நிலப் பரப்பின் வரலாறு மிகப்பழமையானது. திருகோணமலையின் முக்கிய வரலாற்றுத் தகவல்களைக் கொண்டிருக்கும் தட்சண கைலாய மாண்மியம், கோணேசர் கல் வெட்டு போன்ற பழம்பெரும் நூல்களில் சம்பூர் பற்றிய வரலாற்றுத் தகவல்கள் கூறப்படுகின்றன. இதனால் இப்பிரதேசம் ஏறக்குறைய 1500 ஆண்டுகள் பழமையான

**1500 ஆண்டுகள் வரலாற்றுப் பாரம்பரியம் வாய்ந்த தமிழர் நிலமே சுடுகாடாய் மாற்றப்பட்டிருக்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியநிலப்பகுதியாகும். இதுகடலும், வயலும், நீர் நிலைகளும் இயற்கைக் காடுகளும் நிறைந்த அழகிய பிரதேசம் இத்தகைய வரலாற்றுப்பாரம்பரியமான தமிழர் நிலமே இன்று சுடுகாடாய் மாறியிருக்கிறது.

ஈழ விடுதலைப்போராட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே சம்பூர் பிரதேசம் பல பாதிப்புகளைச் சந்தித்து வந்தது. இராணுவ கெடுபிடிகள் கண்மூடித்தன மான தாக்குதல்கள் பொருளாதாரத் தடைகள் என சம்பூர் மக்கள் நிம்மதியான வாழ்வை வாழவில்லை. சமாதான காலப்பகுதியிலையே சிறிதளவேனும் நிம்மதியை அனுபவித்தனர். அப்போது இப்பிரதேசம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் காணப்பட்டது.

2006 ஏப்ரல் 25ஆம் திகதி இலங்கை இராணுவத் தளபதியாக இருந்த சரத்பொன்சேகா தாக்கப்பட்டதன் எதிரொலியாக சம்பூர் மீதே தாக்குதல் தொடுக்கப்பட்டது. மாலை 6 மணி யளவில் இலங்கை அரசாங்கத்தால் விமானத் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன. இதைத் தொடர்ந்து திருகோணமலை கடல் படைத்தளத்தில் இருந்து தொடர்ச்சியாக மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஆட்லெறி மற்றும் பல்குழல் பீரங்கிகள் மூலம் விடிய விடியத் தாக்குதல் நடத்தப்பட்டது. வீதிகளில் உறவுகள் இறந்துகிடக்க அந்த பிணங்களைத்தாண்டி அன்று நள்ளிரவே தாக்குதலின் மத்தியில் மக்கள் சம்பூரை விட்டு வெளியேறினர். அன்றிலிருந்து தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

இதன்பின் போரும் மெல்ல மெல்ல நகர்ந்து மாவிலாறு, வாகரை எனத் தொடர்ந்து சென்றது. வெளியேறிய மக்கள் பாட்டாளிபுரம், நல்லூர், முகத்துவாராம், வாகரை எனப் பல இடங்களில் கட்டம் கட்டமாக நகர்ந்து இறுதியில் மட்டக்களப்பு நகரப்பகுதிவரை சென்றனர். கிட்டத்தட்ட இம்மக்கள் 100 கிலோ மீட்டருக்கும் அப்பால் நகர்ந்தனர் என்பதே உண்மை. இதன் பின்னர் நான்கு வருடங்களுக்கு மேலாக மட்டக்களப்பில் தங்கியிருந்தனர். பின்பு இவர்கள் திருகோணமலை மாவட் டத்துக்கு அழைத்துவரப் பட்டு நான்கு இடங்களில் இன்றுவரை தங்க வைக்கப் பட்டுள்ளனர். இன்னும் அவர்களுக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை



சம்பூரை இராணுவம் கைப்பற்றிய சில நாட்களில் அரசாங்கம் மூதூர் கிழக்குப் பிரதேசத்தின் பல பகுதிகளை இணைத்து உயர் பாதுகாப்பு வலயமாக அறிவித்தல் விடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு அவற்றில் பல பிரதேசங்கள் கட்டம் கட்டமாக மீள் குடியமர்த்தப்பட்டன. அதில் சம்பூர், சூடைக்குடா, கூனித்தீவு, நவரெட்ணபுரம், இளக்கந்தை, கடற்கரைச் சேனை ஆகிய பிரதேசங்கள் மீண்டும் அதியுயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டது. இவற்றில் இளக்கந்தை மக்கள் விருப்பத்தின் பெயரில் வீரமா நகர் என்னும் இடத்தில் குடியமர்த்தப்பட்டனர். ஏனைய மக்கள் தமது கிராமங்களே வேண்டுமெனக் கூறியதால், அங்கு செல்ல அனுமதியில்லை எனக்கூறி கிளிவெட்டி, மணற்சேனை, பட்டித் திடல், கட்டை பறிச்சான் ஆகிய இடங்களிலுள்ள அகதி முகாம் களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஆறு வருடங்களுக்கு மேலாக இவர்களது வாழ்வு அகதி முகாமிலேயே கழிகிறது.

முதலில் சம்பூர் பிரதேசத்தை உயர் பாதுகாப்பு வலயமாக அறிவித்த இலங்கை அரசு பின்னர் அதை பாரக்கைத் தொழில் வலயமக அறிவித்தது. இது சட்டச்சிக்கல் களில் இருந்து தப்புவதற்கான உபாயமாகும் இதன்பின்பு சம்பூரில் அனல் மின்னிலையம், மற்றும் கைத்தொழில் சாலைகள் அமைப்பதற்கென்று மூன்று நிறுவனங்களுக்கு பெருந்தொகையான நிலங்கள் விற்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு குறிப்பிட்டளவு நிலங்களே ஒதுக்கப்பட்டன. எனினும் 10000 ஏக்கர் நிலத்தினைச் சுற்றி மண்ணணைகளும் முள்வேலிகளும் அமைத்து, அங்கு மக்கள் நடமாட முடியாத படி ஆக்கப்பட்டுள்ளது. அபகரிக்கப்பட்ட இப்பிரதேசத்துக்குள் 6 கோயில்கள், 4 பாடசாலைகள், 42 குளங்கள், 3000 ஏக்கர் வயல் நிலங்கள் என பெருந்தொகையான வளங்கள் அடங்குகின்றன.

**கடவுளாலும் கைவிடப்பட்ட இம்மக்களை இனி யார் வந்து காப்பாற்றப் போகிறார்களோ....**

விவசாயத்தையும், மீன் பிடியையும் நம்பி வாழ்ந்த அம்மக்கள், இன்று ஏதுமற்றவர்களாக முகாம்களில் அடிப்படை வசதிகள் எதுவுமற்று, அன்றாடம் உணவுக்கே கஸ்ரப்படும் நிலையில் வாழ்கின்றனர். இவர்களின் சொந்த நிலத்தைப் பறித்த அரசு இவர்களைக் கண்டு கொள்ளாது அனாதைகளாக விட்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும். அரசியல் வாதிகளும் இதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளைச் செய்ய முன்வரவில்லை. புலம்பெயர் சமூகமும் சம்பூர் பிரச்சினையில் இதுவரை எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் செய்ததாகத் தெரியவில்லை. பலருக்கு இப்படியொரு பிரச்சினை உள்ளதென்ற விடயம் தெரியாமல் இருப்பது வேடிக்கையானதுதான். கடவுளாலும் கைவிடப்பட்ட இம்மக்களை இனி யார் வந்து காப்பாற்றப் போகிறார்களோ தெரியவில்லை காலந்தான் அந்த மக்களுக்கு வழி செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13வது திருத்தச்சட்டத்தை அழித்தால்!

தீபச்செல்வன்

பிரபாகரன் நிராகரித்த 13வது அரசியல் திருத்தத்தை ஏன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தூக்கிப் பிடிக்கிறது என்று கேட்டார் கோத்தபாய ராஜபக்ச. அப்படியெனில் பிரபாகரன் ஆயுதம் ஏந்திப் போராடிக் கோரிய தமிழீழத்தை வழங்க கோத்தபாய விரும்புகிறார? என்பதுதான் நம்முடைய பெரும் கேள்வியாக எழுகிறது. 13வது அரசியல் திருத்தச் சட்டத்தை அழித்துவிடலாம் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச சொல்லியிருப்பது அரசியலில் பெரும் பரபரப்பைக் கிளப்பியிருக்கிறது. போரில் புலிகளை அழிக்கலாம் என்று எப்படி சொன்னாரோ, மக்களை அழிக்கலாம் என்று எப்படி ஆணையிட்டாரோ? அப்டியே 13வது அரசியல் திருத்தச் சட்டத்தையும் அழித்துவிடலாம் என்று மகிந்த ராஜபக்சவின் தம்பி கோத்தபாய ராஜபக்ச சொல்லியுள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் இடையிலான இனப்பிரச்சினையை மீண்டும் உச்சமான தொரு கட்டத்திற்குள் நகர்த்தும் ஒரு அபாயத்தின் அறிவிப்பாகவே இதைப் பார்க்க வேண்டியுள்ளது. இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு ஒரு துளியேனும் சாதகத்தைக்கொண்டதொரு சட்டம் இருக்கக்கூடாது என்பதையே சிங்களப் பேரினவாதிகளான ராஜபக்ஷேக்கள் விரும்புகிறார்கள்.

13வது அரசியல் திருத்தச் சட்டம் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இலங்கையில் தமிழ் மக்களின் உரிமை க்கான போராட்டம் வெடித்து, எழுபது களின் இறுதியில் அது ஆயுதப்போராட்ட மாக மாறியது. இந்நிலையில் ஈழப்போராளி இயக்கங்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் யுத்தம் நடந்து கொண்டிருந்த பொழுது 1987ல் இந்திய இலங்கை ஒப்பந்தம் நடைபெற்று, இனப்பிரச்சினையை தீர்க்கும் விதமாக இந்தியா ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தது.

இந்தியாவில் உள்ள கூட்டாட்சி முறையை ஒத்த ஆட்சி முறையொன்றை வழங்கி தமிழர்களுக்கு ஒரு தீர்வை வழங்குவதாகச் சொல்லி இந்த அரசியல் திருத்தம் முன் வைக்கப்பட்டது. தனிநாடு கோரிய போராட்டம் நடந்த அக்காலத்தில் தமிழ் தாயகமான வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைப்பு, காவல் துறை, காணி அதிகாரம் உட்பட்ட சில அதிகாரங்கள் உள்ளடங்கலாக இந்த திட்டம் அமைக்கப்பட்டிருந்தது.

ஈழப்போராளி இயக்கங்களுக்குள் முரண்பாடுகள் ஏற்பட்ட கால கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த அரசியல் தீர்வுத் திட்டத்தை நிராகரித்திருந்தார்கள். விடுதலைப் புலி களின் எதிர்ப்பின் மத்தியிலும் இந்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முக மாக வடக்கு கிழக்கு மகாணம் இணைக்கப்பட்டுத் தேர்தலும் நடை பெற்றது.

இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் யுத்தம் மூண்ட சூழலில், இலங்கை






யின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா வடக்கு கிழக்கு மாகாண சபை ஆட்சியைக் கலைத்தார். மகிந்த ராஜ பக்ச ஆட்சியில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் யுத்தம் மூளும் அபாயம் நிலவிய சூழலில், இனப்பிரச்சனையைமேலும் சிக்கலாக்கும் விதமாக அரசியல் சட்டத்தில் இருந்த வடக்கு கிழக்கு மாகாண இணைப்பு நீதிமன்றம் மூலம் பிரிக்கப்பட்டது.

13வது சரத்தை அழிக்க வேண்டும் என்று கோத்தபாய குறிப்பிட்ட வேளை, அவ்வாறு அழிப்பதில் எந்தப் பயனும் இல்லை என்று மகிந்த ராஜபக்சவின் இன்னொரு தம்பியான பசில் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். இது இலங்கை அரசின் உத்தியோக பூர்வ மானக் கருத்தாகவே அமைந்திருந்தது. இலங்கை அமைச்சர்களுக்கும் தமிழ் பிரதிநிதிகளுக்குள்ளும் பெரும் பதற்றம் ஏற்பட்டு, ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளும் நிலைமையை இந்த அறிவிப்பு ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலைமையை உருவாக்கி இனப்பிரச்சினையை திசை திருப்பும் திட்டமா? கொண்ட அறிவிப்பா? என்ற அய்யமும் எழுந்துள்ளது. 13வது பற்றிய அழுத்தங்கள் அரசாங்கத்திற்கு பிரயோகிக்கப்படும் சூழலில் போதிய அதிகாரமற்ற 13வது திருத்தத்தைத் திணிக்கத்தான் இவ்வாறு அரசியற் புரளியை அரசு கிளப்புகிறதா? என்ற அய்யமும் நிலவுகிறது.

ஏனெனில் இலங்கை அரசு எதை எதற்காக அறிவிக்கிறது என்று அதற்கடுத்து என்ன செய்யும் என்றும் எந்த வல்லுனர்களாலும் உணர முடியாது. ஆனால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழ் மக்களென்று யாரும் இல்லை

இந்த மாதிரியான அறிவிப்புக்களுக்குப் பின்னால் தமிழ் மக்களுக்கு பெரும் துயரங்கள் ஏற்பட வாய்ப்புள்ளன. அதிலும் ராஜபக்ச ஆட்சியில் எதிர் பாராத துயரம் தொடர்ந்து வந்து தமிழ் மக்களை தாக்கிக்கொண்டிருக்கிறது.

13வது பிரபாகரனுக்கு முன் வைக்கப்பட்ட தீர்வென்று சொல்லியுள்ள கோத்தபாய ராஜபக்ச இந்தியாவும், தமிழ் தேசியக்கூட்டமைப்பும் இதைப்பற்றி பேச முடியாது என்றும் சொல் லியுள்ளார். விடுதலைப் புலிகளுக்காக முன்வைக்கப்பட்ட தீர்வு என்பதன் மூலம் புலிகளை அழித்த பின்னர் அந்த தீர்வு தேவையில்லை என்றும், அதையும் அழிக்கலாம் என்று சொல்லி வருகிறார்.

13ஐ தமிழ் அரசியல்வாதிகள்தான் கோருகிறார்கள் என்று கேத்தாய சொல் வதைப்போல, காணிஅதிகாரத்தைத் தமிழ் அரசியல்வாதிகள் கோருகிறார்கள், அதை தமிழ் மக்கள் கேட்கவில்லை என்று பசில்ராஜபக்ச ஒருமுறை குறிப்பிட்டார். அண்மையில் வடக்கில் இடம்பெயர் அகதிகள் என்று யாருமில்லை என்று கோத்தபாய குறிப்பிட்டார். வடக்குக் கிழக்கு எங்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக வீடு திரும்பாமல் தவித்துக் கொண்டிருக்கையில் அவர் இப்படிச் சொன்னார். முள்ளிவாய் காலிலும் மாதகலிலும் அவர் இப்படிச் சொன்ன பின்னரே மீள்குடியேற்றம் நடந்தது.

அதைப்போல இப்பொழுது இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்றும் சொல்லியிருக் கிறார். இனப்பிரச்சினை யால் வாழவும், மீளவும் முடியாமல் தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினை களுக்கு முகம் கொடுத்தபடியிருக்கும் நிலையிலேயே கோத்தபாய இப்படி சொல்லியிருக்கிறார். இன்னும் கொஞ்சக் காலத்தில் இலங்கையில் தமிழ் மக்களென்று யாரும் இல்லை என்றும் கோத்தபாய கூறக்கூடும்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை யும் 13வது திருத்தச் சட்டத்தையும் விடுதலைப் புலிகள் நிராகரித்தார்கள். இது விடுதலைப் புலிகள் செய்த வரலாற்றுத் தவறு என்று சிலர் விமர்சனம் செய்தார்கள். வடக்கு கிழக்கு மாகாணங் களின் பிரிப்பு முதல், இப்பொழுது 13வது அரசியல் திருத்தச் சட்டத்தை அழிக்க வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட யோசனை வரை, இலங்கை அரசின் தொடர் நடைமுறைகளைப் பார்க்கையில் இவை பலமான அரசியல் சட்டமே என்றும், அவற்றுக்கு என்ன சக்தி உள்ளன எனறும் இப்பொழுது உணர முடிகிறது.

அன்று விடுதலைப் புலிகள் இலங்கை இந்திய ஒப்பந்த அரசியல் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருந்தாலும் இன்று அதை அழித்துச் சிங்களப் பேரினவாத ஆட்சியை தமிழர்நிலத்தில் விரிக்க, சட்ட திருத்தத்தை இலங்கை அரசு கொண்டு வந்திருக்கும். இவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசின் நடவடிக்கைகள் புலிகள் இலங்கை இந்திய ஒப்பந்த தீர்வுத் திட்டத்தை நிராகரித்தது சரியானதா? என்று நியாயப்படுத்தும் நிலைக்கு கொண்டு வந்துள்ளன. இந்தப் படிப்பினையின் அடிப்படையில் பார்க்கையில், தனிநாடுதான்சரியான தீர்வு என்ற சூழலுக்கு தமிழர்கள் மீண்டும் நிர்ப்பந்தமாகத் தள்ளப்படுகிறார்கள்.

இலங்கை அரசோடு இணைந்து கூட்டாட்சி அமைத்தால் என்ன நடக்கும் என்பதையும், தமிழர்களுக்குச் சாதக மான சின்னச் சட்டங்கள்கூட இலங்கை அரசின் யாப்பில் இருந்தால் அவை களுக்கு என்ன கதி ஏற்படும் என்பதை யும் இந்த சட்ட அழிப்பு எச்சரிக்கை கள் தெளிவாக்குகின்றன.

இலங்கை அரசுகளின் அராஜகங்களினாலும், இனப்படுகொலை நடவடிக்கைகளினாலும், தமிழர்கள் தனிநாடு கோரிப் போராடினார்கள். தனிநாடல்லாத ஒரு தீர்வுக்கு சென்றால் எது எப்படியான விளைவைத்தரும் என்பதை இலங்கை அரசு ஈழத் தமிழர்களுக்கு தொடர்ந்து உணர்த்திக் கொண்டேயிருக்கிறது. மீள்குடியேற்றம், ஆக்கிரமிப்பு, இராணுவமயம் என்று எல்லா வகையிலும் தமிழ் மக்களைத் தொடர்ந்து தாக்கும் சூழலில்தான் சிங்கள அரசு இந்த நடவடிக்கையை தொடக்கியிருக்கிறது.

யுத்தம் முடிந்த பின்னர் 13வது அரசியல் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று உலகநாடுகள் இலங்கையைப் பணித்தன. விடுதலைப் புலிகளை அழித்துவிட்டு 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப்போகிறோம் என்று சொல்லியே இலங்கை அரசு இனப்படுகொலை யுத்தத்தை நடத்தியது. 13ஐ நடைமுறைப் படுத்துவேன் என்று சொல்லிய இலங்கை ஜனாதிபதி மகிந்தராஜபக்ச, அதற்கு அப்பாலான தீர்வை வழங்குவேன் என்றும் குறிப்பிட்டார்.

**கிழக்கில் பிள்ளையான், வடக்கில் டக்கிளஸ் தேவானந்தா முதலியவர்களை 13 பிளஸ் என்ற தீர்வைக் காட்டி முழுமையாக தனக்குள் இழுத்தது அரசு.**

புலிகள் நிராகரித்த இவ் அரசியல் திருத்தச் சட்டத்தை வைத்து யுத்தம் நடத்திக் கொண்டு, மறுமுனையில் ‘13பிளஸ் தருகிறோம்’ என்று ஒருகதையைச் சொல்லியே சில தமிழ் அரசியல்வாதிகளை தனது யுத்த அரசியல் நலனுக்காக கையாண்டது. 13ஐ அழித்தால் மீண்டும் மோதல் வரும் என்று பிள்ளையான் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். முக்கியமாக கிழக்கில் பிள்ளையான், வடக்கில் டக்கிளஸ் தேவானந்தா முதலியவர்களை 13 பிளஸ் என்ற தீர்வைக் காட்டி முழுமையாக தனக்குள் இழுத்தது அரசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் முடிந்த நிலையில் எந்தத் தீர்வுத் திட்டத்தையும் முன் வைக்காமல் காலத்தை கடத்திக் கொண்டு வந்தது இலங்கை அரசு. இந்த நிலையில் தான் இணைந்த மாகாண சபையுடன் காணி, காவல்துறை அதிகாரங்களுடன் அரசில் தீர்வை முன்வைக்குமாறு இனப்படுகொலையில் ஈடுபட்ட சிங்கள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த தமிழ்தேசியக் கூட்டமைப்பு முன்வந்தது.

ஒரு பிரதேச சபையைக்கூட தமிழர்கள் ஆளக்கூடாது என்று நினைக்கிறது ராஜபக்ச அரசு. அந்த அடிப்படையில்தான் வடக்கு மாகாண சபையைத் தமிழர் தரப்பு கைப்பற்றினால் இலங்கை அரசுக்கு பெரும் ஆபத்தாக அமையும்என்று கருதுகிறது. வடக்கு மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை அரசுக்கு உள்ளது. இந்நிலையில் 13ஐ அழித்தல், தமிழ் மக்கள் தரப்பில் எந்த சிறு நிர்வாகமும் செல்லாது தடுக்கும் நடவடிக்கையாக அமைக்கலாம் என்றும்.

வடக்கில் இராணுவ ஆக்கிரமிப்பை நிலைநிறுத்தல், காணி அபகரிப்பில் ஈடுபடல், தமிழர்களின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தல் என்று எல்லா வகையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு தமிழர்களை ஒடுக்கி, இல்லாமல் செய்யும் திட்டத்திற்கு 13ம், வடக்கு மாகாண சபைத் தேர்தலும் தடையாக உள்ளதாக அரசு நினைக்கிறது. எனவே அதை அழித்தால் வெற்றிகரமாக எஞ்சிய தமிழர்களைத் துடைத்தெறிந்து சிங்கள ஆக்கிரமிப்பை மேற்கொள்ளலாம் என்பதே அரசின் திட்டம்.

சமாதான யுத்தம் நடத்தி ஈழமக்களைப் படுகொலை செய்த பின்னரும் தமிழ் தேசியக்கூட்டமைப்பு பேச்சுவார்த்தைக்குச் சென்ற சூழலில் 13 வதை அழிக்கும் பொழுது இலங்கை அரசோடு பேசுவதற்கு உண்மையில் இனி என்ன இருக்கிறது? நாங்கள் எந்தத் தீர்வுக்கும் இணங்க மாட்டோம் என்பதை அது வெளிப்படையாகவே உணர்த்துகிறது. இந்த எச்சரிக்கை மூலம் இலங்கை அரசாங்கம் ஈழத் தமிழ் மக்களுடன் நாம் எதையும் பகிரமாட்டோம் என்று உலக நாடுகளுக்கும் சொல்கிறது.

வாழ்நிலத்திற்காகவும் அதற்கான உரிமைக்காகவும் பாதுகாப்பிற்காகவும் ஈழத் தமிழினம் போராடியது. அந்தப் போராட்டத்தையும் அழித்து. மக்களை இனப்படுகொலை செய்த இலங்கை அரசு எல்லா அராஜகங்களையும் செய்யும் பொழுது நிராகரிக்கப்பட்ட அரசியல் சரத்தைக் காட்டியது. இப்பொழுது அந்த சரத்தையும் அழிப்பேன் என்பதன் மூலம் ஈழத் தமிழ் மக்களை இனப்பிரச்சியையின் தொடக்க காலத்திற்குத் தள்ளுகிறது.

இலங்கையில் மீண்டும் இரத்தம் பாயும் காலத்தை உருவாக்க முனைகிறது. தமிழர்களை அவர்களின் தாயகத்திலிருந்து அழித்து எந்தவொரு சிறுநலனையும் பகிரக்கூடாது என்று திட்டமிட்டுச் செயலாற்றும் பொழுது நாம்என்ன செய்வது? காலத்திற்கும் அநீதிக்கும் ஏற்ற வகையில் மீண்டும் போராட வேண்டிய சூழலை சிங்களப் பேரினவாதம் ஈழத் தமிழர்களுக்கு நிர்ப்பந்திக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் - பெண்கள்

கிளிநொச்சியிலிருந்து ஜெரா

**அ**லறிக் கொண்டிருந்தது அழைப்பு. எரிச்சல் மூட்டும் வேலைப் பொழுதிது.

"அண்ண, எங்கட பெரியம்மாவின்ர தங்கச்சிய ஆமிக்காரன் கெடுக்க ரை பண்ணிட்டான், செய்தி போடுங்க"

இந்த வருடம் வவுனியா வடக்குப் பகுதியில் அந்தச் சம்பவம் நடந்தது. 14 வயது நிரம்பிய அவள் பாடசாலை விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். வழமையாகப் பயணிக்கும் தெருவில் எப்போதும் காத்திருக்கும் ஆமிக்காரனுக்கு அவள் மீது கண்ணிருந்தது. பல தடவைகள் மறித்துப் பேச முயன்றிருக்கிறான். தமிழ் பிள்ளைகளிடம் இயற்கையாக ஊறியிருக்கும் சிங்களவனுக்கு எதிரான மனோபாவம் அவனைத் திரும்பிப் பார்க்கக்கூட வைக்கவில்லை. முயற்சி தொடர் தோல்விகளைச் சந்திக்கவே அந்தச் சிப்பாய் 14வயதுப்பிஞ்சைத் தனது இச்சைக்காகத் தேர்ந்தெடுத்தான். துப்பாக்கியால் அடித்து அவளைத் தனது காவலரணுக்குள் தூக்கிச் செல்ல முற்படுகையில் சில இளைஞர்கள் கண்டு விட்டனர் (தகவல் தந்தவர் உட்பட). அவர்கள் உடனடியாக அவளை மீட்க மேற்கொண்ட போராட்டத்தினால் சிறுமி காப்பாற்றப்பட்டாள். துப்பாக்கியையும் போட்டுவிட்டு சிப்பாய் காட்டுக்குள் ஓட்டமெடுத்தான்.




மறுநாளுக்காகச் செய்தி தயாராகி முடிந்திருக்கையில், தகவல் தந்த அதே இலக்கத்திலிருந்து மீண்டும் அழைப்பு. அவரது குரலில் நடுக்கமிருந்தது. பயம் பரவ பேசத் தொடங்கினர். செய்தி போட வேண்டாம், சிக்கல்.

பிரச்சினை பிரகாசமடைய உசாரானது ராணுவம். அந்த முகாமுக்குப் பொறுப்பான அதிகாரி சிப்பாய்கள் புடைசூழ மாணவியின் வீட்டுக்குப் போனார்.

"நாங்க அவருக்கு பனிஸ்மண்ட் குடுப்பம். நீங்க இதை வெளில சொல்லக்கூடாது" கொச்சைத் தமிழில் மிரட்டினார். ஆகவே இப்படியே இதை விட்டுவிடலாம் என அந்தக்குடும்பம் முடிவெடுத்தது. அதன்படி தந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்தியை வெளியிடமாட்டோம் என எங்களிடமிருந்து சத்தியம் வாங்கினர்.

இப்போதும் அவள் அந்தப் பாதையில் தான் பயணிக்க வேண்டியிருக்கிறது. அந்த சிப்பாய் அதே காவலரணில் தான் நிற்கிறான். எமக்கும், அந்த ஊரவர்களுக்கும் மட்டும் தெரிந்த அந்தச் செய்தி வேறு யார் பார்வையும் பெறாமலே மௌனம் பெற்றுவிட்டது.

## மூதாட்டியை வன்புணர்ந்த சிப்பாய்

ஈழத்தில் இப்போது வயது வேறுபாடின்றி எந்தப் பெண்களும் தனித்துச் செயற்பட முடியாது. அனைத்து வளங்களும் இராணுவத்துக்கேயுரியது என்ற எண்ணம் மேலோங்கியிருப்பதால், ஈழத் தமிழ்ப் பெண்களையும் மேய்ந்து விடவே இராணுவத்தரப்பு முயற்சிக்கிறது. அவர்களால் பெண்கள் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களை வெளிப்படுத்தும் அனுமதி, அதிகார பலம் கொண்டு மறுக்கப் பட்டுள்ளது. இது வன்னியில் நடைபெற்ற ஒரு சம்பவம் மட்டுமே. 'தனித்திருந்த இளங்குடும்பப் பெண் ராணுவத்தினால் வன்புணர்வு', 'மூதாட்டியை வன்புணர்ந்த சிப்பாய்', போன்ற செய்திகள் அடிக்கடி அடிபடுபவை. யாரும் கவனியாது, 24 மணி நேரமும் இராணுவம் மட்டுமே கவனித்துக் கொண்டிருக்கும் அந்த நிலப் பெண்களின் மீது நிகழ்த்தப்படும் பாலியல் வன்முறைகள் மௌனிக்கப்பட்ட வரலாற்று வெளியில் தனியே குவிக்கப்பட்டிருக்கிறது.

## 90 ஆயிரம் விதவைகள்!

போர் அனைத்தையும் தின்றது. அதற்குப் பின்னரான தற்போதைய அபிவி ருத்தி எஞ்சிய பெண் தசைகளையும் குறிவைக்கின்றது. அதிகளவில் முன்னாள் போராளிகளின் மனைவியர்களும், போரின்போது ஆண்துணையை இழந்தவர்களும் இப்போது விதவைகளாகவேயிருக்கின்றனர். வடக்குக் கிழக்கில் மட்டும் 90 ஆயிரத்துக்கு மேற்பட்ட விதவைகள் இருப்பதாக யுனிசெப்பின் அறிக்கையொன்று குறிப்பிடுகின்றது. குறித்த விதவைகளுக்கு எங்காவது ஒரு சில இடங்களில் மறுமணங் கள் நடந்திருக்கின்றன. அதுவும் சமூக, இராணுவ புலனாய்வுக் கவனிப்புக்களை கடந்தவை தான். எஞ்சியவர்கள் இப்போதும் விதவைகளாக தகரக்குடில்களுக்குள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றுக்கு குறையாத பிள்ளைகளுடன் வாழ்கின்றனர். இவர்களுக்கு வேலை தர அரசு சாரா நிறுவனங்களோ, அரசு சார்ந்த நிறுவனங்களோ தயார்நிலையில் இல்லை.

## மிரட்டல்

கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கும் மனிதவுரிமை அமைப்பொன்று பத்திரிகையாளர் ஒருவரை அடிக்கடி தொல்லைப்படுத்திக் கொண்டிருந்தது. அவருக்கு அவர்கள் கோரும் விடயத்தை முடித்துக் கொடுப்பது மிகக் கடினம். அவர்கள் கேட்டது இது தான். முல்லைத்தீவு நகரத்தை அண்மித்த கிராமங்களில் வசிக்கும் முன்னாள் போராளிகளின் விதவை மனைவியரைத் தமது நிறுவனத்தோடு பணியாற்ற தொடர்புபடுத்தி விடுங்கள் என்றே கோரியிருந்தது. அவரும் களத்துக்குப் போனார். தெரிந்த அறிந்தவர்களைக் கொண்டு அவ்வாறானவர்களை அடையாளம் கண்டார். தொடர்புபடுத்தியும் விட்டார். முதல் பயிற்சிப் பட்டறையும் முடிந்தது. இரண்டு வாரங்களில் குறித்த நிறுவனம் தொடர்ந்தும் அந்தப் பெண்களைக் கொண்டு, நிதியுதவியளித்து பணியாற்றுவதற்கான திட்டத்தோடு மீண்டும் முல்லைத்தீவுக்கு வந்தது. ஆனால் அடையாளம் கண்ட பெண்கள் ஒருவரையும் மீண்டும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இராணுவப்புலனாய்வாளர்களின் வெருட்டல் அந்தப் பெண்களை குறித்த நிறுவனத்தினரைக் கண்டாலே பலகாத தூரம் ஓட்டம் பிடிக்க வைத்திருந்தது.

## பயனற்ற உதவித் திட்டங்கள்

அநேக நிறுவனங்கள் போராட்டத்தோடு தொடர்புபட்டவர்களை வேலையில் இணைத்தால் தமக்கும் பிரச்சினைகள் வரும் என்ற பயத்தில் சேர்த்துக் கொள்வதைத் தவிர்க்கின்றன. துணிந்து கருமமாற்றுவார்கள் என்ற நம்பிக்கையில் சில தமிழ் ஊடகங்கள் போராளி விதவைகளுக்கு வேலை வழங்கியிருக்கின்றன. இதைத் தவிர மிதிவெடி அகற்றும் பணியில் சில போராளி விதவைகள் ஈடுபட்டிருக்கின்றனர். மீண்டும் உயிரை வெறுத்து செய்யும் வேலை இது என அவர்கள் குறிப்பிடுவதை அவதானித்திருக்கிறேன். இங்கு குறிப்பிட்ட இரண்டு வேலைகளுக்கும் தகுதியற்றவர் கள் சீனாக்காரன் செப்பனிடும் ஏ9 வீதியைக் கூட்டும் பணியைச் செய்கின்றனர். அதற்கு நாளாந்த சம்பளம் வழங்கப்படுகின்றது. சில அரசு சாரா நிறுவனங்கள் விதவைகளுக்கு என வழங்கும் உதவிக் கொடுப்பனவுகளால் தையல், விவசாயம், சிறு கைத் தொழில் போன்ற துறைகளில் முன்னேறுகின்றனர். பெரும்பாலும் தையல் தெரியாத விதவைக்கு தையல் இயந்திரமும், நீர் இறைக்கத் தெரியாத விதவைக்கு நீர்பம்பியும் வழங்கும் நிறுவனங்கள் தான் இது போன்ற பணிகளில் ஈடுபடுகின்றன. ஆகவே வழங்கப்படும் உதவிப் பொருள்கள் வெகுவிரைவிலேயே சந்தைக்கு வந்து விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எதிலும் எடுபடாத விதவைப் பெண்கள் தான் அதிகம். அவர்கள் தான் தசை விற்பனைக்கு ஆளாகின்றனர்.



இந்த வருடத் தொடக்கத்தில் விசுவமடுவில் ஒரு இளம் விதவைத் தாய் தனக்குப் பிறந்த குழந்தையை பிரசவ சூடு ஆறும் முன்பே கிணற்றில் எறிந்து கொலை செய்தார். எல்லா ஊடகங்களும் அந்தச் செய்தியை வாசித்த பொதுவானவர்களும் தம் பொதுப் புத்தியை அந்தத் தாயின் மீது காறியுமிழ்ந்தார்கள். சிசுக் கொலைக்கான காரணமாக அவளிடம் இருந்த கதை இதுதான். மூன்று பிள்ளைகளின் வயிறுகளையும் கழுவ என்னால் இயலுமானவரைப் போராடினேன். என் போராட்டம் போதவில்லை. பிள்ளைகளின் பசி வயிற்றுக்கு முன்னால், என் பழைய தசைகள் மொத்தப் பெறுமதியையும் இழந்தன. கடவுளின் கைவிடலால் இன்னொரு குழந்தைக்கும் பொறுப்பானேன். அப்பாவின் பெயரே தெரியாத இந்தக் குழந்தையை வளர்க்க என்னிடம் விற்க எதுவும் இல்லை. சிசுக் கொலைக்காக அவள் சொன்ன காரணத்துக்கு யாரிடமும் பதில் இருக்கவில்லை.

கடந்த வருடத் தொடக்கத்தில் அக்கராயனில் ஒரு பெண் இரண்டு ஆண்குழந்தைகளைப் பிறந்த உடனேயே அடுப்புக்கு அடியில் புதைத்திருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் போராளியாக இருந்தவர். அப்போது புனர்வாழ்வில் இருந்தார். ஆகவே ஒரு குழந்தையோடு அவள் நலன்புரி நிலையத்தில் தனியவேயிருந்தாள். நலன்புரி நிலையத்திலிருந்து மீளக்குடியேறி சில மாதங்களிலேயே அவளுக்கு இரட்டைக்குழந்தைகள் பிறந்தன. அந்தக் குழந்தைகளையே அவள் கொடூரமாகப் புதைத்தாள். அயலவர்களின் கவனிப்பை அடுத்து இந்தச் செய்தி பரவலடைந்தது. அவள் கைது செய்யப்பட்டாள். புதைக்கப்பட்ட குழந்தைகளுக்கான தந்தையை அவளால் எந்த விசாரணையிலும் சொல்லமுடியவில்லை. பலரும் அவளை விபச்சாரியாக்கிப்பார்த்தனர். நலன்புரி நிலையத்தில அவளின் வீட்டுக்கு அருகில் இருந்து கொண்டு, அவள் குளிக்கும் போதும், அன்றாட கடமைகளுக்காக வெளியில் செல்லும் போதும் ஒட்டுப் பார்க்கும் படையினர் மீது யாருக்கும் சந்தேகம் வரவில்லை. அவனிடம் இருக்கும் ஏ.கே.47க்கு பயந்த அவளை விபச்சாரியாக்கினர்.

வழமையானது போலவே இந்த முறையும் யாழ்ப்பாணத்தில் பெருங்கோயில் களான சன்னிதியும், நல்லூரும் பெருவிழாக்கோலம் பூண்டிருந்தது. ஆனால் விழாவுக்கு வந்தவர்கள் அவைருமே ஒரு மாற்றத்தை அவதானித்தனர். இந்த முறை பிச்சைக்காரர்கள் கோயில் வெளியில் அதிகமாகத் தொழில் செய்தனர். அதுவும் இளம் பெண்கள் பிச்சைக்குக் களமிறங்கியிருந்தனர். அவர்கள் யாரென விசாரிக்கையில் வந்த பதில் எதிர்காலம் நோக்கிய கவனத்தில் பாறையையே தூக்கிப்போட்டது. பிச்சையெடுத்தவர்களில் பெரும்பாலானவர்கள் போரில் கணவனை, பாதுகாப்புத் தந்த ஆண்துணைகளை இழந்தவர்கள். போர் முடிந்து மூன்று வருடங்களுக்குள்ளேயே இந்த நிலைமையென்றால் இன்னும் பத்து வருடங்களில் இவர்களின் நிலையென்ன? பிச்சை போடாமல் போன பல பணக்காரர்கள் இவை எதுவும் பற்றி யோசிக்கவே யில்லை.

## பரிதாபத் தற்கொலைகள்

இவர்களின் நிலைதான் மிகவும் துயரமானது. 'இயக்கம் இருக்கும் வரைக்கும் நவம் அறிவுக்கூடமாவது இருந்தது. இப்ப தெருவில் விடப்பட்டிருக்கிறம்' என்ற மனநிலைதான் அவய இழப்புக்குள்ளான பெரும்பாலான போராளிகள் மத்தியில் காணப்படுகின்றது. முழு மனிதனாலேயே வாழமுடியாத சூழலில் போர் கடித்துப் போட்ட பாதி மனிதர்களால் எப்படி வாழ முடியும்?

அண்மையில் யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பகுதியில் முன்னாள் போராளி தற்கொலை செய்து கொண்டார். சிவலிங்கம் சுகந்தி எனும் பெயருடைய இவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த பெண்போராளி ஆவார். 1999 ஆம் ஆண்டு ஜெயசிக்குறு நடவடிக்கையில் கடுமையாகக் காயப்பட்டி ருந்த இவர் இறுதிப் போரில் தன் இடுப்புக்குக் கீழான பகுதி செயலிழப்புக்குள்ளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



னார். சரணடைந்து, புனர்வாழ்வு அனுபவித்து, மீண்டும் தன் குடும்பத்தினருடன் வாழ்ந்து வரும் நிலையில் தான் தற்கொலை செய்து கொண்டார். இராணுவத்தின் புனர்வாழ்விலிருக்கும் போது கூடத் தற்கொலை செய்து கொள்ள விரும்பாத ஒரு அவய இழப்புப் போராளி சமூகத்துள் இயங்கத் தொடங்கி மிகக் குறுகிய காலத்துக் குள்ளேயே தற்கொலை செய்து கொண்டார் எனில் நம் சமூகம் எவ்வளவு மோச மானது?

இடுப்புக்குக் கீழ் செயலிழந்த ஒருவரைக் கவனிப்பதென்பது மிகவும் கடினமானது. அவரின் அன்றாட அனைத்து இயற்கை உபாதைகளையும் குடும்பத்தவரே கவனிக்க வேண்டும். அதுவும் பெண் போராளியெனில் இன்னும் அதிக சிரமங்களை கவனித்து வருபவர் சந்திக்க நேரிடும் விடுதலை யாகி வீட்டுக்கு வந்து சில காலங்களுக்கு இவர்களைக் கவனிப்பது குடும்பத்தவர்க்கு பிரச்சினையற்றதாயினும், காலம் செல்லச் செல்ல சலித்துப் போய்விடுவர். எவ்வளவு காலத்துக்குத்தான் கவனிக்க இயலும். மனமுடைவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதாகிவிடும். ஏன் தப்பி வந்தோம் என்ற வேதனையை அனுபவிக்கத் தொடங்க தற்கொலை எண்ணம் கதவு திறந்து வீடுகின்றது. இப்படியான ஒரு சூழலிலேயே சிவலிங்கம் சுகந்தியின் தற்கொலை நிகழ்ந்திருக்க வாய்ப்பிருந்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் புலிகள் அமைப்பிடம் நவம் அறிவுக்கூடம் எனும் பிரிவொன்று இருந்தது. போரில் விழுப்புண் அடைந்து, அவய இழப்புக்குள்ளான போராளிகளை வைத்துப் பாராமரிக்கும் இடம். அவர்கள் இந்தப் பிரிவுக்கு செலவழித்த தொகை போராட்ட வரலாற்றில் கணிசமானது. உணவு, உடைகள், பராமரிப்பாளர்கள், மருத்துவம், அவர்கள் பயணிப்பதற்கென மீளத் தயாரிக்கப்பட்ட தனியான வாகனங்கள், பொழுதுபோக்குக்கான களங்கள் என அனைத்துவிதமான தேவைகளையும் பூர்த்தி செய்யகக்கூடிய வசதிகளோடு இவர்களைப் பராமரித்து வந்தனர். ஆனால் புலிகளின் மறைவுக்குப் பின்னர் எந்தவித அடிப்படை வசதிகளுமற்று குறிப்பாக அவர்கள் நகர்வதற்கான தள்ளுவண்டிகள் கூட அற்ற நிலையில் பலர் வாழ்கின்றனர். இவர்களுக்கு வழங்கப்பட்ட புனர்வாழ்வு கடுமையானதாக இல்லாவிட்டாலும் இப்போது வாழ்க்கை கடினமானதாக மாறியிருக்கின்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட பெண் போராளிகள் மிகச் சிக்கலான ஒரு கட்டத்துக்குள் வாழ்வதை உணர்கின்றனர். விடுதலைப் போராட்டத்திலிருந்து விலகி வந்த முன்னாள் பெண் போராளி ஒருவருக்கு இப்போதிருக்கின்ற ஈழத்தமிழ் சமூகத்துக்குள் நுழைவதே சிரமமாய் இருக்கின்றது. அதிகளவான பெண் போராளிகளுக்கு வாழ்வதற்கான அனைத்து நம்பிக்கை முடிச்சுகளும் தளர்த்தப்பட்ட நிலையில் பொழுது போக்குகின்றனர். அல்லது தற்கொலை செய்து கொள்கின்றனர்.

## வேண்டிய துயரங்கள்

மக்களின் விடுதலை, பெண் விடுதலை போன்ற தேசிய மற்றும் சமூகக் கட்டவிழ்ப்புக்களுக்கான போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்ட பெண் போராளிகள் பலர் சமாதான காலத்தில் கூட திருமணம் செய்ய மறுத்துவிட்டனர். தம் இலக்குகள் அடையப்படும் வரை திருமணம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற நிலையில் இருந்தனர். போராட்ட வாழ்வோடு அவர்களின் திருமண வயதும் கலந்து போனது. இப்போது எந்த விடுதலையும் அடையப்படாத நிலையில் மீண்டும் தம் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். குடும்பத்தில் சகோதரர்கள் இருப்பின் அவர்கள் இப்போது வேறொரு குடும்பத்துக்குரியவராக இருப்பர். வீட்டில் எஞ்சியிருக்கும் தாய் தந்தையர் பெரும்பாலும் காலாவதியான வயதுக்குரியவராகவே இருப்பர். வெளியில் தலைகாட்டமுடியாத அவமானத்தோடு வீட்டுக்குள் நுழைந்த முன்னாள் போராளியை யார் கவனிப்பார்? ஒரு முன்னாள் போராளி தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்வது எவ்வளவு கடினமானது என்பதை மேலே குறிப்பிட்டிருந்தேன். இவர்களின் வயதைப் பொறுத்தவரை அது சாத்தியப்பாடான ஒன்றாகவும் தெரியவில்லை. நெருக்கமான உறவுகள் யாரும் வெளிநாடுகளில் அல்லது உதவக்கூடிய வசதியான சூழலில் இருந்தால் மட்டுமே இவர்களின் வாழ்க்கைக்குப் பொருள் கிடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையேல் ஏ9 வீதி வேலைக்கும், கூலி வேலைக்கும் போய் வயிறுபிழைக்க வேண்டிய நிலையில் தான் ஒவ்வொரு வயதான முன்னாள் பெண் போராளியும் சீவிக்கின்றார். தடுப்பிலிருந்து வந்த முன்னாள் பெண் போராளியின் உழைப்பில் வாழும் குடும்பங்களும் உண்டு.

திருமணமாகாத முன்னாள் பெண் போராளியை வைத்து அவரின் குடும்பம் படும் அவஸ்தைகள் மிகக் கொடூரமானவை. "தடுப்பில" இருந்து வந்தவள், என்று கேள்விப்பட்டாலே "அயலட்டைச் சனங்கள்" "ஒரு மாதிரி" பார்க்கத் தொடங்கிவிடுவார்கள். ஏற்கனவே நம் சமூகத்தில் சரிந்து போயுள்ள முன்னாள் போராளி மீதான படிமம் இந்தக் கேள்விப்படுதலோடு 100 வீதச் சரிவை சந்தித்து விடும். இதற்குப் பின்னர் அவளின் பெற்றோரால், மக்களுக்காகப் போராடிய தம் பிள்ளைக்கு எப்படி வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க முடியும்? எந்த ஆண் மகன் முன்னாள் போராளிக்காகத் தயாராயிருக்கின்றான்? வெளிநாட்டு மாப்பிள்ளைகள் முன்னாள் பெண்போராளிகளைத் திருமணம் செய்ய ஆர்வமாய் இருப்பதாகப் பத்திரிகை விளம்பரம் செய்தாலும் அதில் இருக்கும் உண்மைத் தனத்தை யாராலும் கண்டறிய முடியாது. அப்படி அனைத்தையும் மறந்து திருமணம் செய்து கொள்பவர்களின் எதிர்காலம் எப்படி அமையப் போகிறது என்பதை துருவிச் செய்தியாளர்களின் தீவிர வேலைகள் தான் வெளிச்சமிடப் போகின்றன.

தடுப்பிலிருந்து வந்த பெண் போராளியை அந்தக் கிராமத்திலிருக்கும் இராணுவத்திடம் இருந்து காப்பாற்றுவதே ஒவ்வொரு பெற்றோருக்கும் பெரும்பாடாய் இருக்கிறது. மாதமொருமுறை கையெழுத்து இட அருகிலிருக்கும் இராணுவ முகாமுக்கு செல்லும் நடைமுறை இப்போதும் வன்னியின் பல கிராமங்களில் இருக்கின்றது. கையெழுத்திடச் சென்றால் அங்கிருக்கும் சாதாரண சிப்பாய் தொடக்கம் அதிகாரி வரைக்குமானவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். கைத்தொலைபேசி இலக்கம் வழங்கப்பட வேண்டும். இராணுவத்தினர் நண்பர்களாக முன்னாள் போராளிகளின் வீடுகளுக்கு வர அனுமதிக்கப்பட வேண்டும். இப்படியாக அறிவிக்கப்படாத பல சட்டதிட்டங்களை ஏற்றுக் கொண்டே வாழ வேண்டிய சூழலுக்குள் ஒவ்வொரு முன்னாள் பெண் போராளியும் அவரது குடும்பமும் உழல்கின்றது.

முன்னாள் பெண்போராளிகளில் ஒரு தொகுதியினரை ஏற்றுக் கொள்ளத் தகுதியான உறவினர்கள் யாருமில்லாத நிலையில் உறவினர் வீடுகளிலும், தெரிந்தவர் வீடுகளிலும் தடுப்பிலிருந்து வந்து தங்கியிருக்கின்றனர். அவர்களின் பெற்றோர் மற்றும் இரத்த உறவினர் இறுதிப் போரிலோ அல்லது அதற்கு முன்போ காணாமல் போயிருப்பர். அல்லது விடுதலைப் புலிகள் நடத்திய செஞ்சோலைப் பள்ளியில் வளர்ந்த முன்னாள் மாவீரனின் மனைவியாக இருப்பார். இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது தனித்து விடப்படுபவர்கள் அதிகளவு உளச்சிக்கலுக்குள்ளாகின்றனர். தீர்வு காணமுடியாத மனப்போராட்ட தற்கொலையோடு தம் வாழ்க்கையை முடித்துக்கொள்கின்றனர். இதற்கு உதாரணமான சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன. அண்மையில் முன்னாள் போராளியான யாழ் பல்கலைக்கழக மாணவி தற்கொலை செய்து கொண்டார். அவரின் பின்னால் இருந்த உயர் உள அழுத்தம் யாராலும் கண்டுகொள்ளப்படாததாக இருந்துள்ளது. அந்தக் கண்டுகொள்ளப்படாமையே அந்தப் போராளியின் மரணத்தக்கு காரணமாயிருந்தது. அவரின் துயரக் கதை கண்ணீரை வரவழைப்பது.

வவுனியா யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவி. அமைதியாக அறியப்பட்டவள். அதிகமாக 'முறால் ரைப்', 'மூவ் பண்ணாதவள்' என்று மாணவர்கள் மத்தியில் பெயரெடுத்தவள். பாசக் காரி, அறிவுரையாளி, தானக்காரி என ஆனந்த குமாரசாமி பெண்கள் விடுதியில் அடையாளமானவள். இரண்டு வருடக் கற்றலை முடித்து மூன்றாம் அரையாண்டுக்குள் எட்டிப்பார்த்த வேளையில் மரணித்துக் கொண்டாள்.

அனேக வன்னிக் குடும்பங்களைப் போல இவளும் நிறைந்த சகோதரர்களோடும், உழைப்பின் வலி தெரிந்த பெற்றோரோடும் 2008 வரைக்கும் கிளிநொச்சியில் வாழ்ந்தாள். 2007 ஆம் ஆண்டு கிளிநொச்சி மத்திய கல்லூரியிலிருந்து பல்கலைக் கழகத்துக்குத் தெரிவானாள். ஆயினும் போர் முள்ளிவாய்க்காலுக்கு அவளை அழைத்துச் சென்றுவிட்டது. காலத்தினதும், விடுதலையினதும் பெறுமதி அறிந்ததால் போராளியானாள். இரணைப்பாலையோடு சுருங்கிவிட்டிருந்த போரின் எல்லையில் சில காலம் போர்ப்பணி செய்தாள்.

போரின் எல்லையில் நின்ற ஒரு நாள் தலைக்கு மேலாகக் கடந்த எறிகணை குடும்பத்தினர் அனைவரையும் முள்ளிவாய்க்கால் பதுங்கு குழிக்குள் மூர்ச்சையாக்கியது. சகோதரி ஒருத்தி மட்டும் உயிர்தப்பி வேறொரு குடும்பமானாள். சம நாளில் இவளையும் எதிரில் வந்த எறிகணைத் துண்டு பதம் பார்த்தது. வயிறு உள்பட்ட பகுதிகளில் படுகாயமுற்றாள். உறவினர் யாரோ பாதுகாத்து நலன்புரி கூட்டுக்குள் சேர்த்தனர். ஏற்கனவே கிடைத்திருந்த பல்கலைக்கழக அனுமதி அப்போது பயன்பட்டது. தடுப்பிலிருந்து தப்பித்தாள். அதிலிருந்து விடுதலையாகி 2009 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குப் பயணமானாள். பல்கலைக்கழகத்தினரின் ஆரம்பகட்ட ஆறுதலும், அரவணைப்பும், உதவியும் புதியதொரு வாழ்க்கைச் சூழலையளித்தது. அதிக நண்பிகள் கிடைத்தனர். தம்மைப் பகிர்ந்து கொண்டனர். விடுதி தாயாகத் தாங்கியது. இரவும் பகலும் என கிடைக்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம் தமக்குத் தாமே உளச்சிகிச்சை செய்து கொண்டனர். கதைத்துத் தீர்த்தனர். பட்ட கஸ்டங்களும், தனிமையும் பறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிற்று. அடைக்கப்பட்ட வெளியிலிருந்து வந்த பிள்ளைகளோடு சேர்ந்து இவளும் புது உலகம் கண்டாள். பல்கலைக்கழக நிதியுதவிகள், வெளிநாட்டார் உதவிகள், நண்பர்களின் உதவிகள் போன்றன வறுமை என்ற பேச்சுக்கே இடமற்றதாக்கியது. பல பிள்ளைகள் தமக்குக் கிடைக்கும் உதவிகளில் ஒரு பங்கை முகாமில் இருக்கும் தமது உறவினர்களுக்குக் கொடுத்தனர். இவளுக்கு யாரும் இல்லாததால் முதியோர் இல்லங்களுக்குக் கொடுத்ததாகக் கூட இருந்தவர்கள் கூறுகின்றனர்.

கடந்து வருடம் யாழ். பல்கலைக்கழகத்தில் அதிகரித்த பெரும்பான்மை இன மாணவர்களின் வருகை பல்கலைக்கழகத்தில் பல மாற்றங்களை அறிமுகப்படுத்தியது. விடுதியில் இடப்பற்றாக்குறை தலை விரித்தாடியது. பொதுவாக அசாதாரண சந்தர்பங்களைத் தவிர மற்றைய நேரங்களில் கடைபிடிக்கப்படும், முதலாம் வருடத்துக்கும் இறுதி வருடத்துக்கும் தான் ஹொஸ்டல் என்ற விதி நடைமுறைக்குள் வந்தது. பலருக்கு இருக்க இடமில்லை. விடுதிக்குப் பொறுப்பானவர்களின் வற்புறுத்தல்கள் இடம் பெயர வைத்தன.

இவள் பல்கலைக்கழக மாணவர்களின் நலன்புரி அலுவலர்க்கு பல தடவைகள் தன் நிலை எடுத்துக் கூறியிருக்கிறாள். அறை வாடகைக்கான தொகையை பொறுப் பெடுத்துக் கொண்டு பிரச்சினையை தீர்த்தார் இவளின் 'உண்மைப் பிரச்சினை' அறியாத அதிகாரி.

பல்கலைக்கழகத்தின் இடைக்கால விடுமுறை வருடப்பிறப்போடு விடப்பட்டது. எல்லா நண்பர்களும் வீடு சென்று விட்டனர். பல்கலைக்கழகத்தில் கூட எந்த நண்பர்களும் இல்லை. ஆழமான தனிமையில் 'அந்த முடிவை' எடுத்திருக்கின்றாள். விரும்பாத இடமொன்றுக்குப் போக விரும்பினாள். போகமுன் தனது வங்கியிலிருந் பணத்தை எடுத்து முதியோர் இல்லத்துக்குக் கொடுத்ததாக நண்பர்கள் கூறுகின்றனர்.

வவுனியாவுக்கான இறுதிப் பயணத்தோடு தன் வாழ்வை முடித்துக் கொண்டாள். தேடிப்போன உறவினரின் வீட்டில் தூரத்திலிருந்த திறந்த பெருங்கிணறு இவளின் சாவுக்கான கதவைத் திறந்தது.

அடுத்த நாள் காலை பத்து மணிக்கு கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டதாக நான்கு வரிச் செய்தி வந்தது. அவள் கடைசி இரவுகளில் எழுதிய டயறிக் குறிப்பில் மரணத்துக்கான காரணச் சான்றுகளை குறிப்பிட்டுள்ளதாக நண்பர்கள் தெரிவிக்கின்றனர். ஆனாலும் அவளின் மரணம் போலவே அந்த இறுதிக் குறிப்பும் மௌனித்து விட்டது.

ஈழப்பெண்கள் இப்போது எப்படி இருக்கின்றனர் என்ற கேள்விக்கு இப்படித்தான் பதில் தர முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியாரின் கல்விச் சிந்தனைகள்

## ஒரு நோக்கு

தமிழ்த் தென்றல் தம்புசிவா

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்க் கவிஞன் பாரதி. சுவை புதிது, பொருள் புதிது, சொல் புதிது என்று கூறத் தக்க வகையில் பாரதியாரின் நற்கவிதைகள் இன உணர்வையும், மொழி உணர்வையும், பெண் உரிமைச் சிந்தனையையும் பொதுமைச் சிந்தனைகளையும் விரிந்து பரந்து ஒலி எழுப்புவனவாக மிளிர்கின்றன. நாட்டின் விடுதலையை, தேசியப்பற்றை, மொழிப்பற்றை ஊட்டும் கவிதைகளை பாரதியார் தந்துள்ளார் என்று அவரை நோக்குபவர்கள் அதிகம். இலக்கியத்தையும் தமது படைப்புகளால் முன்வைத்துள்ளார். பாரதியாரின் இலக்கியங்களில் பல மேல்நாட்டு இலக்கியக் கோட்பாடுகளின் தாக்கம் காணப்படுவதை அவதானிக்கலாம். 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் வேண்டும்' என்கிறார். பொதுவாகவே அவரது கவிதைகளில், சிறுகதைகளில் புரட்சிகர மான புனைவியல் போக்கைக் காண முடிகிறது. யதார்த்தப் பண்பை அவருடைய படைப்புகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இவ்வாறு பல்வகைப் பரிமாணங்களுடன் ஆளுமை மிக்கவராக முனைப்புப் பெற்றிருக்கும் பாரதியார் கல்வியின் முக்கியத்தை முன்னிறுத்தி கல்விச் சிந்தனைகளைத் தந்துள்ளார்.

அறிவியல் அணுகுமுறையை அவர்தம் பாடல்கள் வழியாக எடுத்துக் காட்டியுள்ளார். அறிவியல் என்பது விஞ்ஞானத்தைக் குறிக்கும். எதையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் அதன் காரண காரியத்தை ஆராய்ந்து பார்ப்பதே அறிவியல். இதன் பயன் மனித இனத்திற்கு முழுமையாகச் சென்று சேரவேண்டும் என்று பாரதி விரும்பினார்.

*"நல்லதோர் வீணை செய்தே - அதை*
*நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?*
*சொல்லடி சிவசக்தி - என்னைச்*
*சுடர்மிகு மறிவுடன் படைத்துவிட்டாய்."*

இந்தச் சுடர்மிகு அறிவு அறிவியல் அறிவேயாகும். தமிழின் அறிவியல் துறை சாதனை படைக்க வேண்டும் என்பதே பாரதியின் கனவாக இருந்துள்ளது. எல்லோரும் அறிவாற்றல் மிக்கராகி விட்டால் அடிமைநிலை மட்டுமல்ல, அறியாமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடமை உள்ளிட்ட அனைத்தும் மாறிவிடும் என எண்ணினார். அந்த அறிவு பிறருக்குப் பயன்படத்தக்க வகையில் சமுதாயப் பணிகளை ஆற்ற வேண்டும் என்றும், அப்போதுதான் கற்ற கல்விக்கும், பெற்ற அறிவிற்கும் பெருமை ஏற்படும் என்கிறார். பிறருக்குப் பயன்படாதவனின் அறிவு உயர்ந்ததாக இருந்தாலும் அது பயனற்றதாகும் என்பதே அவரது வாதம்.

அறிவியல் துறையில் அவரது தூர நோக்கானது எம்மையெல்லாம் அதிசயிக்க வைத்துள்ளது. தொலைபேசி அரிதான அந்தக் காலத்தில் எவ்வளவு உயர்ந்த சிந்தனைகள் அவர் மனத்தில் தோன்றியிருக்கின்றன.

*"காசிநகர் புலவர் பேசு முறைதான்*
*காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்வோம்"*

என்று பாரதியார் கண்ட கனவு இன்று தகவல் தொழில் நுட்பம் வேகமாக வளர்ந்ததன் காரணமாக நிறைவேறியுள்ளது. எங்கு நடக்கின்ற நிகழ்ச்சியானாலும் அடுத்த விநாடி கேட்பதுமில்லாமல் காண்பதற்கான வளர்ச்சியையும் இன்று நாம் பெற்றுள்ளோம்.

*"மந்திரங்கற்போம் வினைத் தந்திரங்கற்போம்*
*வானையளப்போம் கடல் மீனையளப்போம்*
*சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்*
*சந்தி தெருப் பெருக்கும் சாத்திரங்கற்போம்"*

சந்திர மண்டலத்தில் மனிதன் கால் பதித்ததையும், செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்திப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதையும் தமது தூர நோக்கால் பாரதியார் சொல்லி வைத்துள்ளார்.

கல்வி என்பது மனித சமுதாயத்தை மேம்படுத்தும் கருவி. வாழ்க்கையை நெறிப்படுத்திச் சிறந்த இலக்கை அடைய வழிவகுக்கும் சட்டம். கல்வியினால் மட்டுமே ஒரு சமுதாயத்தை மாற்றியமைக்க முடியும். கல்வி தனிமனித வாழ்வுக்கும், குடும்ப வாழ்வுக்கும், சமுதாய வாழ்வுக்கும் ஏற்றம்தர வல்லதாகும். கல்வி என்பதற்குப் பொதுவாகக் கற்றல் என்பதுடன் இணைந்தே பொருள் கொள்ளப்படுகின்றது. அச்சத்தைப் போக்கி அறியாமையை நீக்கி வலிமையையும் தன்னம்பிக்கையையும் அளிப்பதாகக் கல்வி அமையவேண்டும்.

பாரதியாரின் கல்விச் சிந்தனைகளுக்குள் குடும்பக் கல்வி, தாய்மொழிக் கல்வி, அனைவருக்கும் கல்வி, தேசிய ஒற்றுமை, நிலம் பற்றிய ஆய்வு, அரசியல் சாஸ்திரம், அறிவியல் சிந்தனைகள், சுயதொழில் அறிவு ஆகிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானால் கல்வி மிகவும் இன்றியமையாத ஒன்றாக அமைந்துள்ளது. சமுதாயத்திற்குப் பயனுள்ள மனிதர்களை உருவாக்குவதே கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும். அடிப்படைக் கல்வியை ஒவ்வொரு குடும்பத்தினரும் பெற்றால்தான் தேசம் நல்வழிப்படும் எனக் கூறும் பாரதி, குடும்பக் கல்வியே தேசக் கல்விக்கு அடிப்படை என்கிறார்.

கல்வியை அவரவர் தாய்மொழியில் கற்றால்தான் அக்கல்வி மாணவர்களைச் சென்று அடையும். தாய்மொழிக் கல்வியே சிறந்தது என்றும், அதன் மூலம் கற்பதே எளிது என்றும், ஆய்வுகளை மேற்கொண்டு வெற்றி பெறுவதற்கு இக்கல்வி முறைதான் உகந்தது என்று வலியுறுத்துகின்றார்.

*"வீடுதோறும் கலையின் விளக்கம்*
*வீதிதோறும் இரண்டொரு பள்ளி*
*நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்*
*நகர்களெங்கும் பலப்பல பள்ளி"*

இப்பாடலின் வாயிலாகக் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வீதி தோறும், ஊர்தோறும் பள்ளிகளை நிறுவ வேண்டும் என்கிறார்.

*"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்.*
*இறவாத புகழுடைய புதுநூல்கள்*
*தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"*

பிறநாடுகளிலுள்ள அரிய பிறமொழி நூல்களையும், வரலாறுகளையும் தமிழ் மொழியில் பெயர்த்துப் பயன்பெற வேண்டும் என்றும் கூறியுள்ளார். மேலும் குழந்தைகளுக்குப் பூமிப்படங்கள், கோளங்கள், வர்ணப்படங்கள் முதலியவற்றை உபயோகப்படுத்தி, கண்டங்கள் பற்றியும் அவற்றிலுள்ள முக்கிய தேசங்கள், அவற்றின் ஜனத்தொகை, நாட்டின் நிலை, வியாபாரம் முக்கியமான விளையாட்டுக்கள், முக்கிய கைத்தொழில்கள் போன்ற பல விடயங்களையும் விளக்கிக் கூறி மாணவர்கள் அவற்றை அறிந்து கொள்ளச் செய்ய வேண்டும். அத்துடன் சிறப்பு வாய்ந்த சிற்பத்தொழில்கள், கோயில்கள் பற்றிய அறிவினையும் அவர்களுக்கு வழங்குதல் வேண்டும். பழங்கால நினைவுச் சின்னங்களை அழிவிலிருந்து மீள உருவாக்கம் செய்யவும், புதியனவற்றை உருவாக்கவும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிறார்.

பொருளாதாரத்தில் நாடு முன்னேற்றம் காண வேண்டும் என்ற நோக்கில் பிற நாட்டுப் பொருளாதாரப் புரட்சிக் கொள்கைகளை மாணவர்களுக்குக் கற்பித்தல் மூலம் அறிமுகப்படுத்த வேண்டும். வியாபாரத்தில் கூட்டு வியாபாரம், தொழிலாளர்களின் உழைப்பால் மேம்படும் உற்பத்திப் பெருக்கம் போன்றவற்றை ஊக்குவிப்பதுடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைச் சீர்செய்து, வீட்டுயர்வையும், நாட்டுயர்வையும் ஏற்படுத்த முனைய வேண்டும் என்கிறார்.

உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், ஒற்றுமையை உருவாக்கவும் குழந்தைகள் மனதில் பாப்பாப் பாட்டு மூலம் நல்ல சிந்தனையை விதைத்துள்ளார்.

*"ஓடி விளையாடு பாப்பா - நீ*
*ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!*
*கூடி விளையாடு பாப்பா - ஒரு*
*குழந்தையை வையாதே பாப்பா!"*

கல்வி கற்றலையும், பாட்டுப் பாடுவதையும், விளையாட்டையும் முக்கியப்படுத்தி பிஞ்சு உள்ளங்களில் நல்ல விதைகளை விதைத்துள்ளார்.

*"காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு*
*கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு*
*மாலை முழுவதும் விளையாட்டு - என்று*
*வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா!"*

என்று அமைகிறது அவருடைய சிந்தனை.

காலந்தோறும் பலவகையான இலக்கியங்களைத் தோற்றுவித்து, மாறிவரும் புவியியல், உளவியல், தொடர்பியல் அடிப்படையில் இலக்கண நூல்களை உருவாக்கிக் கொண்ட செம்மொழி என்னும் அந்தஸ்தைப் பெற்று நிற்கும் தமிழுக்குத் தன் பங்களிப்பைச் செய்த பாரதியின் சிந்தனைகள் இன்றும் ஏற்புடையதாகவே உள்ளன.

ஒரு மொழியில் உருவாகும் நூல்கள் மொழியைச் செழிக்கச் செய்யும். புத்தொளிபெறச் செய்யும். பாரதியின் படைப்புகளில் நாட்டுப் பற்று, மனிதவிடுதலை, பெண்விடுதலை, கல்வி, மனித நேயம், இறையாண்மை, இறைமை, பொருளியல் எனப் பல்துறைக் கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன. அக்கருத்துக்கள் அவர் வாழ்ந்த காலச் சூழலுக்கு மட்டுமன்றி ஒரு நூற்றாண்டையும் தாண்டி, தொழில்நுட்ப வளர்ச்சி பெருமுன்னேற்றம் கண்டு நிற்கின்ற இன்றைய காலச் சூழலுக்கும் பொருந்தக் கூடிய பரிமாணங்களையும் உள்ளடக்கியுள்ளன.

*"சொல்லடி சிவசக்தி - எனைச்*
*சுடர்மிகு அறிவுடன் படைத்துவிட்டாய்!*
*வல்லமை தாராயோ இந்த*
*மாநிலம் பயனுற வாழ்வதற்கே"*

என்பதற்கேற்பத் தமது சுடர்மிகு அறிவை முன்நிறுத்தி மாநிலம் பயனுற்று வாழ வழி சமைத்தார். பாரதி சொன்னால் அது உண்மையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கச் செயற்பாடு

எஸ். ரி. அருள்குமரன்

அரங்கு என்பது மக்களது வாழ்வியலில் பிரிக்க முடியாத அம்சமாக விளங்குகின்றது. மக்களது வாழ்வியலில் மாறுபாடுகளினை ஏற்படுத்திக் கொள்வதில் தனக்கான செயல் தளத்தினை வெளிப்படுத்திக் கொள்கின்றது என்பது எதார்த்த மாகும்.

களப்பயிற்சிப்பட்டறையானது பங்குபற்றுபவர்களிடையே உள மாறுபாடுகளினை ஏற்படுத்துகின்றது. இதன் காரணமாக அரங்க களப்பயிற்சிப்பட்டறைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமானதே. இதன் மூலம் மாணவர்களிடையே ஆளுமைசார் வெளிப்பாடு களினை ஏற்படுத்துவதுடன், அவர்களது செயற்பாட்டிற்கான வெளிகள் தகவமைக்கப்படுகின்றன. பங்கு பற்றுபவர்களிடையே வித்தியாசமான உணர்வுகளினை ஏற்படுத்துகின்றது.

களப்பயிற்சிப்பட்டறை எனும் போது களம் என்பது இடத்தினை குறித்தாலும் அதன் பொருள் கொள்ளல் வேறாகிறது. குறிப்பாக அரங்கு எனும் சொல் வெளியினைக் குறித்து நிற்க, 'களம்' எனும் சொல் லானது பங்கு பற்றுபவர்கள் தமது ஆளுமையினை வெளிப்படுத்து வதற்கும், தம்மை இனங்கண்டு கொள்வதற்கும், தமது இயலுமை யினை அறிந்து கொள்வதற்கும், இயலாமையினைக் கண்டுணர்ந்து தம்மை பலம் நோக்கிய பயணத்திற்குத் தகவமைத்துக் கொள்வதற்கு மான செயற்பாடுகளை வெளிப்படுத்துவதையும் குறிக்கிறது.

இத்தகைய நிகழ்வு பங்கு பற்றுபவர்களுக்கு மன மகிழ்வினை யும் புதிய சிந்தனை சார் கிளர்ச்சியினையும் ஏற்படுத்துவதற்கு மான வாய்ப்பாகவும் அமையும். இதில் பல தரப்பினரும் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. குறிப்பாக பாடசாலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள் எனப் பல நிலைகளில் உள்ளவர்கள் பங்கு பற்றக் கூடியதாகக் காணப்படுகின்றது.



பங்குபற்றுபவர்களது தள நிலையினைப் பொறுத்து அவர்களுக்கான செயற்பாட்டு வடிவங்கள் மாற்ற முறுவதினையும் அவதானிக்கலாம். சிறுவர்களுக்கு மேற்கொள்ளும் போது, வயது அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கியல் பெறுமானம், உடல் உள செய்பாட்டிற்கான தளம் என்பன கருத்தில் கொண்டே வடிவமைக்கப்படுகின்றன. பாடசாலை மாணவர்கள் அவர்களது உளநிலைச் செயற்பாட்டு உந்துதல் என்பன கருத்தில் கொள்ளவேண்டியது அவசிய மானதாகும். பெண்களுக்கான வகையில் தனித்துவத்துடன் நிகழ்த்துவதெனில் தனியான செயல்த்தளத்துடன் வடிவ மைக்கப்பட வேண்டும்.

பாடசாலைகளினை மையமாகக் கொண்டு நிகழ்த்தப்படுகின்ற களப் பயிற்சிப்பட்டறைகள் வித்தியாசமானவை யாக விளங்குகின்றன. எம்மால் பல்வேறு பாடசாலைகளிலும், முன்பள்ளி ஆசிரியர் கள், வெளிவாரித் துறை மாணவர் கள் எனப் பல தரப்பினருக்கும் களப் பயிற்சிப்பட்டறைகள் நிகழ்த்தப்பட்டது. இக்களப்பயிற்சிப்பட்டறையின் வளவாளர் களாக யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரியின் வழிகாட்டல் ஆலோசனை பிரிவுப் பொறுப்பாசிரியர் மகிழ்ச்சிகரன், மானிப்பாய் இந்துக்கல்லூரி நாடகத் துறைப் பொறுப்பாசிரியர் எஸ்.ரி.அருள் குமரன் ஆகியோர் நிகழ்த்துகிறார்.

களப்பயிச்சிப்பட்டறைகளின் உள்ளடங்கல் வெளிகளாக மகிழ்விப்பு, எண்ணக்கருவிருத்தியாக்கம், கற்பனைச் சக்தியினை வளர்த்துக்கொள்ளல் தலைமைத்துவப் பண்பினை வளர்த்துக் கொள்ளல், குழுச்செயற்பாடு புதியன படைப்பதற்கான ஆற்றலினை விருத்தி செய்தல். விட்டுக்கொடுப்பு போன்ற பல விடயங்கள் உள்ளன.



ஆரம்பத்தில் ஒதுங்கியும் வெட்கத்துடனும் செயற் பட்டு வந்தவர்கள், நிறைவின் போது செயல் முனைப்புள்ளவர்களாகவும், தலைமைத்துவப் பண்புள்ளவர்களாக வும், பலருடனும் இணைந்து இயங்கக் கூடியவர்களாகவும் மாற்றமுறுவதினைக் காணலாம்.

களப்பயிற்சிப்பட்டறையில் கலந்து கொள்ளும் மாணவர்கள் தமது அனுபவத்தினை .வெளிப்படுத்தும் போது தம்மால் இவ்வளது தூரம் செயற்பட முடியுமா என நினைக்கவில்லை எனவும், தமக்குள் இவ்வளவு ஆற்றல் உண்டு என்பதினை அறிந்து கொண்டதாகவும், மகிழ்வாக இருப்பதாகவும் கருத்துப் பகிர்கின்றனர். இத்தகைய செயற் பாடுகள் தொடர் இயங்கியலுடன் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசிய மானதாகும். அவ்வாறு மேற்கொள்ளும் போது புதிய ஆரோக்கியமான செயல் முனைப்புள்ள சமூகம் உருவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழக் குழந்தைகளின் அவலங்களின் அடையாளமாக

## "அம்மா வருவா..."

யாழ் தர்மினி பத்மநாதன்

ஈழத்துப்பெண் படைப்பாளி ஈழவாணியின் "அம்மா வருவா" குறும்படம் மனதை நெகிழ வைக்கும், மனசைக் கனக்க வைக்கும் ஈழத் தமிழ்க் குழந்தைகளின் வேதனைகள் நிறைந்த, வலிகள் மிகுந்த வாழ்வியலைச் சுட்டி நிற்கின்றது.



பெரியவர்கள், வளர்ந்தவர்களுக்கே ஒரு நாள், இல்லை ஒரு நிமிடம் அருகில் அம்மா இல்லை என்றால் எப்படித் தவித்துப் போவோம்? துடித்துப் போவோம்? ஆனால் ஓர் சிறுமி அம்மாவின் அரவணைப்பையும், அன்பையும், பாசத்தையும், அனுபவிக்க வேண்டிய வயதில் தன் தாயை இழந்து தவிக்கும் தவிப்பை விடக் கொடூர மானது அவளைத் தத்தெடுத்தவரின் செயல்

முள்ளிவாய்க்கால் போரின் இறுதியில் தனது குடும்பத்தை இழந்த அரசியை மேல்வர்க்க குடும்பத்தை சேர்ந்த பெண், தான் வளர்ப்பதாக உறுதிப்படுத்தி முகாமில் இருந்து விடுப்புப் பெற்று தன்னுடன் அழைத்துச் செல்கின்றாள். அந்தப் பெண்ணினால் அரசி அனுபவிக்கும் கொடுமைகள் மனித உணர்வுகளால் மன்னிக்கப்பட முடியாதவை. இப்படி எத்தனை ஈழக்குழந்தைகள் எம் கண் முன் மறைந்தும், மறைக்கப்பட்டும், புதைக்கப்பட்டும் இருக்கக் கூடும். அரசியை தத்தெடுத்தவள் கூட மூன்று பிள்ளைகளுக்குத் தாய் தான். அவளது மகளுக்கு இருக்கும் பண்பு பாசம் கூட அந்தத் தாய்க்கு இருக்க வில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்க வேண்டிய வயதில் படிப்பை இழந்து, விளையாட்டையும், நண்பிகளையும், பாடசாலையையும், அம்மாவையும் என்று எல்லா வித அனுபவிப்புக்களையும் இழந்து இருட்டுக்குள் அடைக்கப்பட்டவள் ஆகின்றாள் அரசி.

தன்குடும்பம், வீடு எல்லாவற்றையும் இழந்த முள்ளி வாய்க்கால் குழந்தைகள் ஒவ்வொன்றின் பிரதிநிதியாகவே அரசியை இங்கு பார்க்க முடிகின்றது. படிக்க ஆசை கொண்டு சுதாவின் புத்தகங்களை எடுத்து படம் கீறுவதும்,வெள்ளைச் சீருடை அணிந்து பார்க்க ஆசைப்பட்டு, தோய்க்கப் போட்ட சுதாவின் சட்டையைப் போட்டு அழகு பர்த்து, கிணற்றடியில் நடனம் ஆடி தன் மன ஆசையை கழிப்பதனையும் பார்க்கும் போது நிச்சயம் பார்வையின் ஆழமான கண்கள் பனிக்கும். இங்கு ஓர் ஆழமான உணர்வு ஊசலாடி நிற்கின்றது.

அரசியின் வயதைச் சேர்ந்த சுதா பாடசாலையும், விளையாட்டும், சந்தோஷமும் என்று இருக்க அவள் வயதைச் சேர்ந்த அரசி வீடு கூட்டுவதும், துப்பரவு செய்வதும், உடுப்புத் தோய்ப்பதுவும் என்று ஒரே வீட்டில் இரண்டு கதைகள் களமாடுகின்றன. இறுதியில் அரசி தன் தாயைத் தேடி தேவதையிடம் குளக்கரைக்குச் செல்கின்றாள்.

அந்தச் சிறுமியின் மனதில் ஊறிய கதையின் ஆழமும், தேவதையிடம் கேட்டால் தன் "அம்மா வருவா" என்ற இனம் புரியாத அதீத நம்பிக்கையும், எந்தக் குழந்தைகளின் மனதிலும் தோற்கும் நிலையை உருவாக்கக் கூடாது என்றே மனம் சொல்கின்றது. ஏக்கமும், தவிப்பும் கொண்ட இந்த நிலை குழந்தைகளுக்கு விதியாகி விடக் கூடாது.

அரசியின் அம்மாவும், தவித்துக் கொண்டிருக்கும் ஈழக் குழந்தைகள் ஒவ்வொரு வரினதும் "அம்மா வருவா" என்ற இரட்டை அர்த்தத்துடன் இக் குறும்படத்தை ஈழவாணி சிறப்பாக இயக்கியிருக்கிறார். காட்சி அமைப்புகளை சாயிதர்சனின் இசை இன்னும் உணர்வளிக்கிறது. வாழ்க்கை வாழ்வதற்கானது. ஆனால் ஈழத்தமிழன் வாழ்வில் அவர்களுக்கான வாழ்வு என்பது சபிக்கப்பட்டதாகவே உள்ளது.

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலான யுத்தம் கொடுத்த விளைவுகள் சட்டங்களும் சடலங்களுமாகவே நீள்கின்றது. இந்த சடலங்கள் மீள உயிர்க்கும் போது நிட்சயம் ஈழத்தின் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் 'அம்மா வருவா' என்ற நம்பிக்கை உரம் ஊட்டும், ஈழவாணியின் முயற்சி கொண்ட இந்தப் புரிதல் ஒவ்வொரு மனங்களிடையேயும் தீயாக பரவட்டும்.

*அயல்கள் எல்லாம் ஆர்ப்பரித்து*
*ஆழம் கண்டதா*
*எங்கள் வாழ்வில் நஞ்சைத்*
*தூவ ஆசை கொண்டதா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனக்கும் மனங்களுடன் 'அம்மா வருவா' களத்திலிருந்து பகிரப்பட்ட அனுபவங்கள்

"அம்மா வருவா" குறும்படம் கடந்த சில மாதங்களுக்கு முன் சென்னையில் நாவலூர் என்ற கிராமத்தில் படப்பிடிப்புச் செய்யப்பட்டது. சுதா, அரசி, மது, யதுசன் போன்ற பெரும்பாவான பாத்திரங்களும் ஈழத்தை சேர்ந்தவர்களாலேயே படைக்கப்பட்டுள்ளது.

அரசியின் உள்ளார்ந்த நடிப்பு அவளைப் பெற்ற தாயையே மனம் கலங்கி அழ வைத்தது. அந்த வகையில் அந்தக் குழந்தையின் மனதில் எவ்வளவு ஆழமான அவலத்தின் வடுக்கள் பதியப்பட்டுள்ளன என்றே நோக்க முடிகின்றது.

### பிரதான கதாப்பாத்திரமான அரசியாகிய மதுநிலாவிடமிருந்து

*உங்களுக்கு நடித்தது பிடித்ததா எப்படி இருந்தது?*

ஓம்

நடிக்க நல்லா இருந்தது. கதை பிடிச்சது, குளத்துக்க இறங்கி நடிக்கத் தான் கஸ்ட மாய் இருந்தது. பயமாய் இருந்தது. எனக்கு தண்ணி எண்டால் பயம்.

*நடித்ததில் பிடித்த, பிடிக்காத காட்சிகள் எது?*

ஸ்கூல் வெளிக்கிட்டுப் போகும் போது அம்மா கொஞ்சி அனுப்பினது.

துணி தோய்க்க போகேக்க வீட்டுக்கார அண்ணா சட்டையைப் பிடிச்சு இழுக்க அது கிழியிறது...

*நடிச்ச அனுபவம் எப்பிடியிருந்தது?*

அம்மா இல்லாத பிள்ளைகள் இப்பிடிக் கஸ்டப்படுவினமா?... என்று கவலையாய் இருந்தது. நடிச்சு முடிய போர் பிரச்சனை பற்றி யோசிச்சன். ஸ்கூல்ல டான்ஸ் மட்டும் செய்வன், நாடகம் அப்படியெல்லாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யிறதில்லை. டான்ஸ் செய்யிறது ஈசி, சோர்ட் பிலிம் செய்யிறது ஈஸி இல்லை. நிறையத் தரம் திரும்பத் திரும்ப செய்ய வேணும்.

தண்ணீக்க இறங்கினது சரியான பயமா இருந்தது. ஈழவாணியில் (இயக்குநர்) கோபமாய் இருந்தது. முதலாவது சீனில கூச்சமாயும் பிறகு ஈஸியாகவும் இருந்தது. எப்படிச் செய்ய வேணும் எண்டு சொல்லுவா. அதை அப்படியே செய்வன். செய்து முடிய கமரா மாமாக்கள், எல்லாரும் "நல்லா இருக்கு" என்று வாழ்த்துவினம்.

**தளத்தில் வேகமும் துடிப்பும் கொண்டு ஓயாது செயற்பட்டுக் கொண்டிருந்த இயக்குநர் ஈழவாணியிடம்...**

*எத்தனையோ சம்பவங்கள் பிரச்சனைகள் இருக்கும்போது ஓர் பெண் ஊடாக, சிறுமி ஊடாக ஈழத்தமிழ் பெண்கள் பற்றிக் குறிப்பிடக் காரணம் என்ன?*



இலங்கையில் எத்தனையோ விதமான பிரச்சனைகள் இருக்கின்றன. குழந்தைகள் நாட்டின் மிகப்பெரிய சொத்து. போரினால் நாட்டில் பெரும்பாலும் எல்லாமே அழிக்கப்பட்டிருக்கிறது. உயிர்கள், உடமைகள், அசையும், அசையாச் சொத்துக்கள். ஆரோக்கியமான இயற்கை கூட எமக்கு அன்னியமாக்கப்பட்டுத்தான் இருக்கிறது. இறுதிப்போரில் எல்லோருமே ஏதோ ஓர் வகையில் பலரை இழந்திருக்கிறார்கள். தாய் பிள்ளைகளை, குழந்தை பெற்றோரை, உறவுகளை எனத் தனியனாக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் பார்த்தீர்களானால் குழந்தைகள் சிறுவர்கள் பெரும்பாண்மையாக பரிதாபமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தில் பெற்றோரை, உறவுகளை இழந்து அனாதையாகியிருக்கிறார்கள். கை கால்கள், உடல் உறுப்புகள், கண்பார்வை போன்றவற்றை இழந்து ஊனமுற்றிருக்கிறார்கள். இப்படிப் பலவிதம். இவர்களுக்காக இல்லங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதும் ஒருபுறம் இருக்க, இன்னும் மீதிக் குழந்தைகள் நிற்கதியாகத் திரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது பலருக்குத் தெரியாது.

இந்த இல்லங்களிலும் தத்தெடுக்கப்பட்ட பொறுப்பேற்கப்பட்ட, சிறுவர்கள், குழந்தைகளுக்கான நியாயமான வாழ்வு பகிரப்பட்டுள்ளதா என்பதும் கேள்விக் குறியாகவே உள்ளது. பொறுப்பெடுக்கப்பட்டவர்களாலேயே சிறுவர்கள் கொடுமைப் படுத்தப் படுவதும், சூறையாடப்படுவதும் மிகவும் கொடூரமான விடயம். இதில் ஆண் குழந்தைகள் சிறுவர்கள் பாதிக்கப்படும் விதமும் வீதமும் பெண்குழந்தைகள் சிறுமிகளோடு ஒப்பிடும் போது குறைவே. சில ஆண்கள் பெண் சிறுமிகளோடு மிகக் கேவலமான முறையில் தமது நடவடிக்கைகளை வைத்திருக்கிறார்கள். சிறுமிகளுடன் மிகவும் சின்னக் குழந்தைகளோடு கூட பாலியல் ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறார்கள். அனாதைக் குழந்தைகளைப் பொறுப்பேற்ற வீடுகளில் கூட இப்படியான வேலியே பயிரை மேய்வதைப் போன்ற செயல்கள் கேவலமாக இடம் பெறுகிறது. இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

வேலிகட்டி கிணறுகளில் குளித்தவர்கள் வீதியோரக் கிணறுகளில் குளிக்கிறார்கள். போதிய மாற்று ஆடையின்றித் தவிக்கிறார்கள். உணவிற்காகப் பிச்சை எடுத்தல் போன்ற நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமின்றி மனரீதியான பாதிப்பிற்கும் உள்ளாகி பைத்தியமாகி வீதிகளில் அலைகிறார்கள்.

அழிக்கப்பட்டதும் அழிந்துபோனதும் என மிஞ்சி மீதமானதையாவது நாம் பேணி, ஆரோக்கியமாகப் பாதுகாக்க வேண்டியது எமது ஒவ்வொருவருடைய தலையாய கடமையே.

இதன் பாதிப்பிலேயே பெண் குழந்தைகளை வைத்து "அம்மா வருவா" என்று இக்குறும்படத்தை இயக்கியிருக்கிறேன்.

*இதனூடாக சர்வதேச சமூகத்திற்கு, ஈழப் பெண் பாத்திரங்களிற்கும் கூற விரும்பும் செய்தி என்ன?*

பெண்குழந்தைகளை பெண்களே ஆரோக்கியமாகப் பாதுகாக்க முடியும் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும். யுத்தம் அனாதையாக்கிய சிறுவர்களுக்கு வெளித்தேவைகள் மட்டுமல்ல (சாப்பாடு, சட்டைகள்) உள்ளார்ந்தமான மனவியல் எதிர்பார்ப்புகளையும் புரிந்து ஆதரவும் பாதுகாப்பும் கொடுக்க வேண்டியது அனைவருடைய கடமையுமே.

தனிப்பட்ட ஒவ்வொருவராலும் ஏதாவது ஒரு குழந்தைக்கு ஏதாவது ஒரு தேவையையாவது பூர்த்தி செய்ய முடியுமானால் அமைப்புகள் மூலமோ அல்லது அந்தக் குழந்தைகளை நேரடியாகத் தொடர்பு கொண்டு நிறை வேற்றுங்கள். நல்ல கல்வியைக் கொடுக்க முன்வாருங்கள். நல்ல தரமான கல்வியே ஆரோக்கியமான ஒரு சமூகத்தை எஞ்சியுள்ளவர்கள் மூலமாகவா வது கொண்டு வர முடியும்.

*உங்கள் படப்பிடிப்புத் தளத்தில் பெண்ணாக இருந்து செயற்படும் அனுபவம் எத்தகையது?*

நிறைய அனுபவங்களைப் பெறக்கூடியதாக இருந்தது.

பொதுவாக நான் பெண்ணாக இருப்பதால் இந்த வேலையை செய்யக் கடினமாக இருக்கிறது, ஆணாக இருந்தால் இலகுவாக இருந்திருக்குமே என்று எப்போதுமே நினைத்ததில்லை. என்னால் முடிந்தவரை கடினமாக உழைத்தால் நிச்சயமாக நல்ல பலன் கிடைக்கும் என்று நினைத்தே செய்வேன். ஆனாலும் இதுபோன்ற வேலைத் திட்டங்களுக்கு நல்ல தொடர்பாடல்கள் தலைமைத்துவப் பண்பு, சுமூகமான மக்கள் தொடர்பு போன்றவைகள் அவசியம், அதைவிடத் துவளாத மனசும், மூளையை உற்சாகமாக வைத்திருக்கும் யுக்தியும் மிக மிக அவசியம் என்று நினைக்கிறேன்.

படப்பிடிப்புத் தளங்களைத் தேர்வு செய்யும் போதே மிகவும் அலுத்துப் போய்விட்டேன். நிறைய இடங்களைத் தேடிப்பார்த்தேன். இலங்கை வன்னிப் பகுதியில் இருக்கக்கூடியவாறான இடங்களும் வீடுகளும், குளமும் வகையாக எனக்கு அமையவில்லை. கடைசியாக தமிழ்நாட்டிற்கு அகதியாக வந்து நலன்புரித்திட்ட வேலைகளில் தன்னை அர்ப்பணித்து, கடமையுணர்வுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனாக வாழ்ந்துகொண்டிருக்கும் மன்னாரைச் சேர்ந்த கமலாநாதன் என்பவரைத் தொடர்புகொண்டு கேட்டேன். அவர் வேலை செய்யும் நாவலூரில் அமைந்துள்ள பண்ணையை உடனே வந்து பார்க்கும்படி சொன்னார். நான் சென்று பார்க்கும்போது இரவு 10 மணி. அன்று காலை 8 மணியில் இருந்து பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, பழவேற்காடு என்று அலைந்து கொண்டிருந்தோம்.

அந்தப் பண்ணையைப் போய்ப் பார்த்ததும் தான் என்னுடைய அசட்டை யான போக்கை நினைத்துக் கொண்டேன். அவர் பல தடவை அங்கு வந்து பார்க்கச் சொல்லி அழைத்திருந்த போதும் நான்தான் சென்று பார்க்க வில்லை. அந்த இடம் அவ்வளவு அற்புதமானதாக இருந்தது. பார்த்ததுமே என் எண்ணத்தில் ஓடிய இடம் அதுதான் என பிடித்துக் கொண்டேன்.

படப்பிடிப்பு நேரங்களில் பல இடையூறுகளும் தடைகளும் ஏற்பட்டது. பெரும்பாலானவர்கள் சிறுவர்களாகவே இருந்தமையால் அவர்களை இணைப்பது பெரும் பிரயத்தனமாகவே இருந்தது. அதைவிட ஆரம்பத்தில் ஒத்துழைத்த சிறுவர்களின் பெற்றோர் சின்னச் சின்னக் காரணங்களில் இழுபறிப்பட வைத்துவிட்டார்கள். ஆரம்பத்தில் ஆசைப்பட்டு வந்தவர்கள் படம் முடியும் தருவாயில் டிமாண்ட் பண்ணத் தொடங்கினார்கள்.

எப்படியும் தம்மிடம் வரவேண்டும் என்ற எண்ணத்தில் நடந்து கொண்டார்கள். இப்படியான செயல்களே எனக்கு மிகவும் மனக்கஷ்டமாக இருந்தது.

மற்றபடி சிறுவர்கள் நல்ல ஒத்துழைப்பைக் கொடுத்தார்கள். காலை 4 மணியளவிலிருந்து அடுத்த நாள் அதிகாலை 2, 3 மணி வரை கூடப் படப்பிடிப்பில் இருந்து ஒத்துழைத்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்களை தூக்கமின்றி முறையான நடிப்பை எடுக்க படாத பாடுபட்டுவிட்டேன். பிள்ளைகளைக் கொடுமைப்படுத்துவதாக அங்கே என்னைத் திட்டவும் கூட செய்தார்கள் என்று நினைக்கிறேன்.

ஆனாலும் சிறுவர்கள் அருமையாகச் செய்து கொடுத்திருக்கிறார்கள். மேலும் என்னோடு இணைந்து பலர் இரவு பகலாக வேலை செய்தமையாலேயே இதை முழுமையான படமாக்க முடிந்தது. அவர்களுக்கெல்லாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**நா**வலூர் என்ற கிராமத்தின் உட்பகுதியில் ஈழத்தின் சாயலை ஒத்த இடங்களை தேடிக் கண்டுபிடித்த ஈழவாணி மிக முக்கியமாகப் பத்து நாட்களில் படம்பிடித்து சுதந்திரமாக இயக்கி முடித்துள்ளார்.

கொட்டும் மழையை விடச் சுட்டெரிக்கும் வெயில் எவ்வளவு கொடுமையானதும், கோரமானதும் என்பதை இந்தப் படப்பிடிப்பு தளத்தில் உணரவும் வைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழவாணி. கதிர்காமர் அகதிகள் முகாம், ஈழத்தின் சாயல் கொண்ட வீடு, விறகு வெட்டி, கதைக்கான குளம் எல்லாமே இந்தக் கிராமத்தில் பொருத்தமான களங்கள் ஆகின.

குறும்படத்தின் இடையில் அரசியின் தாயின் பிரிவு பற்றிய கதை நகர்கின்றது. அரசி பாடசாலை விட்டு வரும் போது குண்டு வெடித்து வீடு எரிகின்றது. அந்த வீட்டினுள் அரசியின் தாயும் எரிகின்றாள். இங்கு தாய்க்காக அழும் அரசி அத்தைக்காக அழும் சுமதி பாத்திரங்களும் யதார்த்தமானவை.

ஈழத்தில் அனேகமான குடும்பங்கள் போரியல் வரலாற்றில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு இயங்குகின்றன. போரினால் தந்தையை, கணவனை, சகோதரனை என்று இழந்தவர்களும், காணாமல் போனவர்களும், கைது செய்யப்பட்டவர்களும் என்று ஆண்களின் துணையின்றிய குடும்பங்களின் கதைகள், உண்மைகள் நீள்கின்றன.

அந்த வகையில் இங்கு அரசியின் தந்தைக்கும் சரி, சுதாவின் தந்தைக்கும் சரி சம்பவங்களோ, நிகழ்வுகளோ பதிவாகவில்லை என்பது கேள்வியாயினும், வெளிப்படுத்த முடியாத நிலைமைகளும் கூட இருக்கின்றது. சுதாவின் தந்தை வெளிநாட்டில் இருக்கலாம் என்ற ஓர் ஐயப்பாடு இங்கு தோற்றுவிக்கப்படுகின்றது.

மேலும் ஒளிப்படக்கலைஞர்களான ஈழத்து நரேஸ் மற்றும், விமல் ஆகியோரது ஆளுமைகள், அவர்களால் உருவாக்கப்படும் அந்த நேரத்து ஒளிக் காட்சிகளும் படத்திற்கு உயிர்த்துடிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

"நாங்கள் முகாமில இருக்கிறதால அப்பா எல்லாரோடையும் விளையாட விட மாட்டார் அதால நான் வீட்டில தனிய இருந்து சின்னச்சோறு (குட்டாஞ் சோறு) சமைச்சு விளையாடுவன். இங்க வந்து எல்லாரோடையும் சேர்ந்து கிளித்தட்டு விளையாடினது சந்தோஷமாக இருந்தது." எனக் கூறும் பூஜா கும்முடிப் பூண்டி இலங்கை அகதிகள் முகாமில் வசித்து வருகின்றாள். ஆயினும் அவளின் அந்த இயல்பின் தொனியாக டப்பிங் ஸ்டுடியோவில் அவள் கொடுத்த உணர்ச்சியிலான யதார்த்த மனநிலை இங்கு குறிப்பிப்பட வேண்டியதாகின்றது.

தவிர கவின், ஜெனி, நிருஷன், தமிழிசை, கமலநாதன், தர்மினி உட்பட அக்கிராமத்து சிறார்களும் பங்கு பற்றியுள்ளனர். மேலும் துணை இயக்குனரான S. சிவகுமார் உதவி இயக்குனரான K.S.மதீரன், யாழ் தர்மினி பத்மநாதன் போன்றவர்களும் ஈழத்தைச் சேர்ந்தவர்களே.

"அம்மா வருவா" ஈழத் தமிழர்களை விட சர்வதேசம் எங்கும் சிலாகித்து நிற்க வேண்டியதும் அவசியமே. பார்ப்பவர்களுக்கு ஓர் படிப்பினையான குறும்படமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலகணேசன் கவிதைகள்




# தேனியுடனொரு உரையாடல்

மதுவருந்திக் களிப்பிலிருந்த தேனியிடம்
திசைகளைப்பற்றி அறிந்துகொள்வதெப்படியெனக் கேட்டேன்
ரீங்காரம் அதன் பதிலாக இருந்தது

ரீங்காரமுனது உயிரின் மொழியா
உனதுடலின் மொழியாடலா
அல்லது அதுவுன்னாடல் மொழியா

பூஞ்சோலையாக உலகை மாற்றும்பொருட்டு
ஏகாந்த வெளியில் அலையும்
உனது இசையொலிப்பரப்பினை உள்வாங்கும் கோபுரங்கள்
எங்கெங்கு இருக்கின்றன
நிலாக்காலத்தில் என்ன செய்து கொண்டிருப்பாய்
கவிதைமொழி கற்றது யாரிடம்

உங்களுக்குள் ராசா ராணி இருக்கிறார்களா
நீயென்ன எடுபிடியாகவா வேலை செய்கிறாய்
எப்பொழுதும் களைத்த உடலுடனொரு சிணுக்கம்
உன்கூடவே பிறந்ததா



மலர்களா
உங்களை இழுத்து வீழ்த்தும்
மாய மகரந்தப்பொறிகள்
மலரின் மொழியை எப்படி அறிந்தாய்
நீ சித்தனாகவா அலைகிறாய்
இதழின் சுவையறிந்த கதையைச் சொல்வாயா?

என் முகத்தெதிரே சுழன்றடித்த அந்தத் தேனீ
மீண்டும் சென்றமர்ந்தது
இன்னொரு மலரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனியே உனக்கு மனசிருக்கிறதா
உனக்கு பயணப்பாதை இருக்கிறதா
உனது சின்னச் சிறகு அமிலமழையில் நனைந்தால்
என்ன செய்வாய்
உயருமிந்த வெப்பத்தில் உடல் கருகிப்போனால்
உனது சிறகுகள் ஆலம்கட்டி மழையில் கிழிந்துபோனால்
என்ன செய்வாய் என் சின்னத் தேனியே

மரணம் பிறப்பெனும் மாயச் சக்கரத்தை
மாலை முழுதும் சுற்றிக்காட்டியயென் தேனியே
பூமியில் எனது பிறப்பிற்குப் பின்னாலான
வாழ்க்கைப் பிழைப்புப் பாதைகளையும்
பயணங்களையும் கோடுகளால் வரைந்தால்
சிக்குண்ட நூல் பந்தாய் கிடந்துருளும்
அது உன்னுடைய
பயணப்பாதையைப்போலவும் இருக்காது

தேன் சொரிந்த மலரும் சின்னத் தேனியும்
காற்றில் வீழ்கிறது அந்த மாலை
ஓங்காரத்திற்குள் கரைந்துபோகிறது அதன் ரீங்காரம்

## புலம்பெயர்ந்தவளின் நடனம்

வாழ்வின் வெட்டப்பட்ட துண்டுகளில் இருந்து
பெருகுமிசையை வாசித்துக் கொண்டிருக்குமொரு
குறியீடாக நிற்கின்றாள் ஏவாள்
அவளுடைய கீழ்படிவின்மையால் தான் எல்லாமும் - என
உரைக்கும் நிழல்களின் புணர்ச்சியில் பெருகும்
நிழல்களின் ஊர்வலம்
பழத்தைத் திருடியவளின்
நிழல் படிந்திருக்கிற
பழங்கால மரத்தில் சிற்பியின் உளி வீழ்கிறது
அவள் தோட்டத்தைக் கடந்து செல்லும் சுவடுகள்
ஒலிக்கின்றன
செவியுடையோர் பேறுபெற்றோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாணத்தைக் கண்டு நாணிச் செல்லும்
இளம் பெண்ணாயிருந்தவளின் வெட்கம் படர்ந்த
நிழலில் விழுந்த தூசை
கைகளால் தட்டி விடுகிறான் சிற்பி
அவனைப் பின் தொடர்ந்த நிழல்
காலின் கீழ் மிதிபடுகிறது
இன்றும் வஞ்சிக்கப்பட்டவளின்
சந்ததி சந்ததியாய் ஒட்டிக் கொண்டு வரும் பிணியின் நிழல்

துரத்தப்பட்டவள் நடுங்கி நடுங்கிப்
புலம்பெயர்ந்த நிழலின் அழிவற்ற நடனம்
காலத்தின் படிக்கட்டுகளில் படிந்திருக்கிறது
தனித்தனி தோட்டங்களாகும் இளம்
கன்னிகளிலும் அதே கீழ்படிவின்மையெனும் நடனத்தின் சாயல்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் தாழ்த்தப்பட்டவன் என்பதை மறைக்க விரும்புவதில்லை

**50ம் ஆண்டைத் தொட்டுக் கொண்டிருக்கும் மல்லிகை டொமினிக் ஜீவாவுடன்**

–ஈழவாணி

*50வது ஆண்டை நெருங்கிக் கொண்டு வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் "மல்லிகையும் நீங்களும்" என்றால்?*



மல்லிகை இதழ் ஆரம்பித்ததே எங்கள் ஈழத்தினுடைய தமிழ் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. இங்கு தமிழ் பரம்பரை இல்லை என்றும் தமிழ்நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்களே (தோட்டத் தொழிலாளர்) தமிழர்கள் என்றும் ஈழத்திற்கு வெளியே பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் தமிழ் நாட்டிலிருந்து வரும் எழுத்தாளர்கள் இலங்கையைத் தமது மார்க்கற்றாக நினைத்து செயற்பட்டு வந்தார்களே அன்றி, ஆரும் இலங்கை ஒரு தனித்துவமான நாடென்று நம்பவும் இல்லை, இயங்கவும் இல்லை. இந்த மனக்கொதிப்புத் தான் ஆரம்பத்தில் எனக்கு மல்லிகை தோற்றுவிக்கக் காரணமாக அமைந்தது.

கிட்டத்தட்ட 60களில் ஒரு புதிய திட்டத்தோடு செயற்படத் தொடங்கினோம். நாட்டு மக்களுடைய கலாச்சாரம், பிரச்சனை, தேவைகள் எல்லாத்தையும் அடிப்படையாக வைத்து. அத்தோடு நம் நாட்டின் தமிழையும் கொண்டு வரவேணும் என்று விரும்பினோம். இதில் நாங்க பல தோல்விகளையும் கண்டிருக்கிறம், வெற்றிகளையும் கண்டிருக்கிறம்.

தோல்வி என்னென்றால் எங்கள இன்னும் இந்த நாட்டுப் படிப்பாளிகள் அங்கீகரிக்கவில்லை. இந்தியாவிலிருந்த பிராமணித்துவம் இலங்கையிலும் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. இந்த தமிழின மேலாதிக்கம் எங்களப் பல காலமா பாதிச்சுக் கொண்டிருந்தது. கைலாசபதி தினகரனில் ஆசிரியராக இருந்தபோது மிகப்பெரிய வீச்சாய் இருந்தது. இந்த 50களின் காலகட்டத்திலேயே முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. என்ன சந்தோசம் என்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவசக் கல்வி தமிழில் வந்ததும், பல்கலைக்கழகம் வரை தமிழ் பாடநூலாய் வந்ததுமே. இதில இலவசக் கல்வி வந்ததால என்ன நன்மை என்றால் அந்த நேரங்களில மேட்டுக்குடித் தமிழர்கள்தான் உயர்கல்விக்கும், உயர் பதவிகட்கும் அனுமதிக்கப்பட்டார்கள். அந்த நிலை மாறி இலவசக் கல்வியால் பின்தங்கிய கிராமப்பகுதிகளிலிருந்து எக்கச்சக்கமான கிராமத்து இளைஞர் யுவதிகள் பல் கலைக்கழகத்திற்கு வந்தமையே இதில் முக்கிய அம்சம். யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய மாற்றம் ஒடுக்கப்பட்ட மக்கள் பல்கலைக்கழகத்திற்கு போனமையே. இது நடந்து கிட்டத்தட்ட 56க்குப் பிறகு, ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக 50 சதவீதமானவர்கள் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறினார்கள். இது இலங்கையில் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றம். அதைவிட இன்னுமொரு நுட்பமான விடயத்தையும் நீங்கள் அவதானிக்கலாம். அங்கீகரிக்கப்பட்ட சிறந்த எழுத்தாளர் வரிசையில் நானும், டானியேல், தெனியான், எஸ். பொன்னுத்துரை போன்ற ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து வந்தவர்களே இருக்கிறம்.

மல்லிகை வெறுமனே வியாபாரத்திற்கான பத்திரிகையோ, தமிழ்நாட்டின் மறுபதிப்போ அல்ல. அது காத்திரமான சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட சஞ்சிகையே. எழுத்தாளன் எழுதுவது சமுதாயக் கடமை என வாழ்ந்து வந்தவர்கள் நாங்கள்.

***டானியேல் உடனான உங்களுடைய நினைவுகள்?***

டானியேலும் நானும் சமகாலத்தவர்கள். இருவரும் ஒடுக்கப்பட்ட சமூகத்தி லிருந்தே வந்தவர்கள். ஆனா டானியேலுடைய பார்வை வேற, என்ர பார்வை வேற. இருவருக்கும் ஒரே நோக்கம் கருத்துக்கள் தான். ஆனா அவர் அடித்தள மான மக்களின் உணர்வுகளை வைச்சுக்கொண்டு மேல்தட்டு வெறுப்பைத் தன்னுடைய எழுத்தாகப் பாவிச்ச தன்மை இருக்கு. நான் அப்பிடிப் பாக்கேல்ல, ஏனெண்டா எங்கள வெளிப்படுத்திக் காட்டினது எங்கட சமூகம் அல்ல. உயர் வர்க்கத்தில உள்ள எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், கொமினிஸ்ற் தான் ஆரம்பத்தில் எங்கட வழிநடத்தி வெளிஉலகத்திற்குக் காட்டியவர்கள். அத்தோடு எங்கள் குறைபாடுகளையும், தம்முடைய சமூகம் எங்களுக்குச் செய்த அனியாயங்களையும் சுட்டிக்காட்டி வழிநடத்தியவர்கள் இவர்களே.

தர்மகுலசிங்கம், கார்த்திகேசு, வைத்தியலிங்கம் போன்றவர்கள் எங்களுக்குப் பெரும் உதவியாக இருந்தவர்கள்.

***ஆரம்பத்தில் நீங்களும் S. பொன்னுத்துரையும் நெருங்கிய நண்பர் களாயிருந்திருக்கிறீர்கள், பிற்பட்ட காலங்களில் மோதிக் கொண்டதாகத் தெரிகிறதே?***

S.Po வும் நானும் நண்பர்களே, அவருடைய எழுத்துக்கள் ஆழம்மிக்கவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஒரு பட்டதாரி, அத்துடன் நானும் டானியேலும் பட்டதாரிகள் அல்ல, இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

பொன்னுத்துரை எங்களோட வாழ்ந்து எங்களக் கௌரவிச்சவர், அவரால் நாங்க நிறையப் பயன் பெற்றிருக்கிறம்.

### *தெணியான் பற்றி?*

எனக்கும் பொன்னுத்துரைக்கும் அடுத்த தலமுறையே தெணியான். இவர் பயிற்றப்பட்ட ஆசிரியர் மிக நிதானமாக ஆரம்பத்திலிருந்தே எழுதிக் கொண்டிருக்கிறார்.

தெணியான் டானியேலினா வலும் என்னாலும் வளர்க்கப்பட்டதாக அவருடைய நேர்ப்பேச்சுக்கள், எழுத்துக்கள் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்.

இதை அவர் தன்னுடைய எழுத்துக்கள், படைப்புகள் போன்றவற்றில் எல் லாம் குறிப்பிட்டிருக்கிறார். இன்று வடமாகாணத்தில் இருக்கக்கூடிய தரமான எழுத்தாளன் என்று தெணியானைத்தான் குறிப்பிடுவன். ஆசிரியரா இருந்து ஓய்வு பெற்றிருக்கிறார்.

### *வடமாகாணத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் உள்ள எழுத்தளார்கள் எப்படி இருக்கிறார்கள்?*

**இண்டைக்கு நீ இருக்கிறியா மல்லிகை இருக்கா....?**

நாங்கள் வாழ்ந்து வந்த 60, 70களில் எல்லாம் கூர்மையடைந்து கொண்டுவந்தம். ஆனால் என்ன பிரச்சனை என்றால், எங்களுக்குத் தேசிய நெருக்கடி வந்தமையே. ஆற்றல், எங்கட திறமை, பிள்ளைகளின் கெட்டித்தனம் எல்லாம், மொழி, இனம், தேசியம், சமூகம், சமூக விடுதலைப் போராட்டம், சிங்கள எதிர்ப்பு வெறி, இப்படித் திரும்பியது.

இதனால் புதிய உத்வேகத்தோடு வரக்கூடிய தலைமுறை அரசியல் காரணங்களினால் வேறு பாதைக்குச் சென்றது. தொடர்ந்து வரக்கூடிய எழுத்தாளர் பரம்பரை தேங்கிப்போன தன்மையாயிருந்தது. எழுபதுகளுக்குப் பின் வந்த அத்தனை எழுத்தாளர்களின் நோக்கமும், மொழி விடுதலை, தேசிய விடுதலை, இனப்போராட்டம் என்று சென்றதேயன்றி, அதை இலக்கியத்தில் காட்ட வேண்டும் என்ற நோக்கம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இன ஒடுக்குமுறை, மொழி ஒடுக்குமுறை, பாலினக் கொடுமைகள் என்று கண்முன்னே நடைபெறும் போது, நாம் அதைப் பேசாது விடுத்து எப்படி இலக்கியம் படைக்க முடியும். சமூகத்தில் இடம்பெறக்கூடிய பிரச்சனைகளைப் பாடுதல், செல்லுதல் அக்காலங்களின் கடனே. இது தவறு என்கிறீர்களா?*

ஒடுக்குமுறையை எதிர்ப்பதற்கு ரண்டு வழி இருக்கு. நாங்களும் ஒடுக்கு முறைக்குள் இருந்தவர்கள். அவர்களைவிட நாங்கள் நிறைய வில குடுத்திருக்கிறம். ஏனெண்டா 50 வருசத்திற்கு முந்தின யாழ்ப்பாணத்தில இருந்து வந்தனாங்கள் இவர்கள விட படுபயங்கரமான அவமானத்த சந்திச்சம். ரோட்டில எங்கட பரம்பர சைக்கிள் ஓட முடியாத நிலையிருந்தது, குடை பிடிக்க முடியாது. மேலங்கிய அணிய முடியாத காலம் இருந்தது. இந்த இளைஞர்களுக்கு அந்தப் பிரச்சனை இல்ல நாங்களும் பேராட்டம் நடத்தினம். நாங்கள் நடத்தினது மனித விடுதலைப் பேராட்டம். எங்களைத் துரோகி என்றார்கள் காட்டிக் கொடுத்தவன் என்றார்கள்.

*அப்போ இனவிடுதலைப் போராட்டம் தேவையற்றதென்கிறீர்களா?*

அப்படியே போராட்டத்தில் சரியான வழிகாட்டல் இல்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு கூட இழந்திருக்கிறமே அன்றி குறைவாகவும் பெற்றுக்கொள்ளவில்லை. அப்ப இழந்ததற்கு முடிவென்ன? தீர்க்கதரிசன மற்ற தலமை உலகத்தமிழ் தலைவர்களெல்லாம் இணைந்து ஒரு முடிவிற்கு வந்திருக்கலாம். இதன்மூலம் நாம் எத்தனை கலைஞர்களை இழந்திற்றம், எத்தனை எழுத்தாளர், எத்தனை ஓவியர்கள்? இந்த இழப்பு தேவையா? இதனால பெற்றதென்ன?

ஒரு தடவை 40 வருசத்திற்கு முன்னர், அப்போது 30 சதம் மல்லிகையின் விலை. யாழ்ப்பாணத்தில, நான் சைக்கிளில போனனான் அதால வந்த சென்றல் கொலீச் மாணவன் என்னை மறிச்சு காசத்தந்திட்டு மல்லிகை கேட்டான். வாங்கிற்று மல்லிகையைக் குடுத்தன், அத அவன் வாங்கி ரண்டா கிழிச்சு அதிலயே வைச்சு என்ர மூஞ்சியில எறிஞ்சான். நான் அத எதிர்பாக்கேல்ல, தமிழ்த் துரோகிகட்கு இதுதாண்டா பாடம் எண்டு. அந்தளவுக்கு நச்சுப்படுத்தப்பட்டிருக்கு இளந்தலைமுறை. இண்டைக்கு மல்லிகை இருக்கா? நீ இருக்கிறியா? அப்ப உத்தமமாக நல்ல நோக்கத்தோட உழைக்கிற உழைப்பு ஒரு காலமும் பிழையாகாது.

பல திறமையான எழுத்தாளர்கள் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். இந்தக் காலட்டத்தில் மல்லிகை மூலம் உருவான எழுத்தாளர்கள் பற்றி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகையை விட ஸ்தாபனத்தைத்தான் நாங்க பாக்க வேணும். முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தான் மிக வீச்சான எழுத்தாளர்களைத் தோற்றுவித்தது. நான் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில இருந்து தோன்றிய ஒருவன். மல்லிகை ஒரு அடையாளம் மட்டுமே. இந்த நாட்டில இருக்கக்கூடிய மிகச் சிறந்த கலைஞர்கள், மிகச்சிறந்த எழுத்தாளர்கள் எனப் பலர் முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கத்தினூடாகவே தோன்றியவர்கள். எஸ்.பொ. கூட முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினூடாக வந்தவரே, ஆனால் பிற்காலத்தில் அதனை எதிர்த்தார்.

பார்வைதான் முக்கியமே தவிர போராட்டப்பாதை முக்கியமல்ல. ஒருவேளை இண்டைக்கு விடை கிடைக்காம இருக்கலாம், நாளைக்குக் கிடைக்கும். நாட்டில இருக்கிறதற்குப் பயந்தவர்கள் ஏன் பேசவேண்டும். இப்படிப்பட்டவர்கள் நாட்டில இருந்து எழுதிப் பாடுபட்டுச் செத்தவர்களுக்கும் துரோகம் செய்வதைப் போலாகும்.

வசதிக்காகத் தப்பித்துப் போய்விட்டு, தேவைகளுக்காகத் தப்பித்துப் போய் விட்டு, தங்களுடைய பிள்ளைகளைப் படிப்பிப்பதற்காக நாட்டைவிட்டுப் போய்விட்டு அரசியல் காரணங்கள் என இலகுவாகச் சொல்லி புலம்பெயர்ந்தவர்களாகி விடுகிறார்கள். நாட்டில் இருந்து பாடுபடுபவனே சிறந்த எழுத்தாளன் என்று நான் சொல்வன்.

எனக்குக் கூட நேர சொன்னவர்கள். உங்களைத் துலைச்சிருப்பம் நீங்க ஒடுக்கப்பட்ட சாதி எண்டபடியா தப்பிச்சியள் எண்டு.

போனார்கள் உலகம் முழுக்கப் போனார்கள். இவர்கள் இலக்கியத்தில் என்ன பெரிசா கிழித்துவிட்டார்கள். உயிர் பயத்துடன் 50 வருஷமா இங்கிருந்து மல்லிகை நடத்திக்கொண்டிருக்கிறம், யாழ்ப்பாணத்தில இருந்து துரத்தபட்டு தங்குமிடமுமில்லாம.

*70கள் 80களில் நிறைய சங்சிகைகள் இல்லை என்பதால் தனித்துவ மாக இயங்கிக் கொண்டிருந்தது, ஆனால் தற்போது நிறைய சஞ்சிகைகள். மல்லிகைக்கு போட்டியாக எதையாவது கருதுகிறீர்களா?*

நான் வெறும் மல்லிகை ஆசிரியன் அல்ல தேசம் முழுக்கத் திரிந்து விற்ற மல்லிகை வியாபாரி.ஆனபடியா நான் போட்டியப்பற்றிக் கவலைப்படயில்லை.

எங்களுக்கு உழைப்புத்தான் முக்கிம் நானும் நீங்களும் இன்னும் நூறுவருசத்தில இருக்க மாட்டம், மல்லிகை இருக்கும். நான் மல்லிகையின் முதல் சஞ்சிகை குடுத்தவனுக்கும் 50வது சஞ்சிகை குடுக்கிறன். அதனால் போட்டிச் சந்தையைப் பற்றிய கவலை இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தஜீன் கவிதைகள்

## மண்வாசம்

ஓயாமல் உழைத்து
ஓடாகத் தேய்ந்து
ஒரு பலனும் இன்றி
ஓட்டாண்டியான பின்னும்...

நாராகக் கிழிந்து
நரம்பெல்லாம் அறுந்து
நாசமாய்ப் போனபின்னும்...

வறுமையில் வறண்டு
வாழ்க்கையே இருண்டு
வக்கற்றுப் போனபின்னும்...

மானத்தை இழந்து
மனத்தினுள் புழுங்கி
மகிழ்ச்சியைத் தொலைத்தும்...

கோடையில் காய்ந்து
சுடுமணலில் குளித்து
கொள்கையே இல்லாமல்
கோவணத்தை இழந்தபின்னும்...

கனவுகள் உடைந்து
கண்ணீரில் நனைந்து
கைத்துணையும் இல்லாமல்
கடல்தாண்டிய பின்னும்...

செத்தும் சாகாமல்
மனசுக்குள்ளே கிடக்குது உன்
மண்வாசம் தானம்மா.

## யாரோ சொல்ல

ஆயுதம் எடுத்தவன்
ஆயுதத்தால் தான்
அழிவானாம்
ஆனால் என்
அன்பை ஆயுதமாக்கினாய் நீ
கத்தியின்றி ரத்தமின்றி
மடிகிறேன் நான்.

## எண்ணு

துடிக்கும்
என் இதயத்திடம் கேள்
நீ தந்த
வலிகள் எத்தனை என்று
வார்த்தைகளால் அல்ல
உன் மௌனத்தால்.

## செல் சொல்

கடிதகாலங்களில் காதல்
வாழ்ந்தது கவிதையாய்
கணிப்பொறிக் காலத்தில்
காதல் சிரிக்கிது
செல் போனின் சிணுங்கலாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகப்பு சப்பாத்து அணிந்த குழந்தையும் சிகப்புக் கோழியை கனவில் கண்ட யுவதியும்

பியல் காரியவசம்

**தொ**லைபேசி அடிக்கும் வரை அது தன் மகளை பார்க்கப் போக வேண்டிய நாள் என்பது ஏகரத்னவிற்கு ஞாபகம் இருக்கவில்லை. பேசிக் கொண்டே அவன் தலையை நிமிர்த்தி கட்டிலுக்கு மேலே தொங்கிக் கொண்டிருந்த கலண்டரைப் பார்த்தான். 2001.05.21 ஞாயிற்றுக்கிழமை.

"சரிம்மா.... நான் ஒன்பது மணிக்கு வாரேன்... சரியா.... நீ வெளியப் போறதுக்கு தயாரா இரு...."

"கொஞ்சம் இருங்கப்பா, அ... அ... அம்மாவுக்கும் பே... பே... பேசனுமாம்"

சில வார்த்தைகளைப் பேசும்போது வரும் திக்குவாய் இன்னும் அப்படியே இருந்தது. இருக்காதா என்ன, மழலை மொழி பேச ஆரம்பித்த நாளிலிருந்தே அம்மா சிந்தும் கண்ணீரையும், சொகுசுக் கதிரையில் சாய்ந்து கிடந்தவாறே அம்மா மீது சீறிப்பாயும் அப்பாவின் பாய்ச்சலும், போதை ஏறியதால் வரும் வாந்தியும், வீட்டுக்குள் பறந்துச் சிதறும் கோப்பைப் பீங்கான்கள், நடு சாமத்தில் அம்மா எழுப்பும் முனங்கல், புலம்பல்கள் ஆகிய வற்றை நித்தம் கண்டும் கேட்டும் வளர்ந்த குழந்தை திக்குவாயாக இருப்பதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஆனால் மூன்று வயதைத் தாண்டியபின் பாட்டி, மாமா, அம்மா ஆகியோருடன் நிம்ம

மேடை நாடகம், சிறுகதை, நாவல் ஆகிய படைப்புத் துறைகளில் தமது தடங்களை ஆழப்பதியச் செய்த இளம் சிங்கள படைப்பாளியான சட்டத்தரணி பியல் காரியவசம் 2009ஆம் ஆண்டில் சிறந்த சிறுகதைக்கான அரச இலக்கிய விருதைப் பெற்றவர்.

'சிவப்புச் சப்பாத்து அணிந்த சிறுமியும் சிகப்பு கோழியை கனவில் கண்ட யுவதியும்' எனும் இச்சிறுகதை விருது பெற்ற நூலிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இச் சிறுகதையின் மொழிபெயர்ப்பாளரான ரவி ரத்னவேல் சிங்கள மொழியில் கௌரவப் பட்டம் பெற்று சிங்களப் பத்திரிகைத்துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஊடகவியலாளராவார். அத்துடன் இவர் சிங்கள திரைக்கதை, நாவல், மேடை நாடகம் ஆகியவற்றை தமிழாக்கம் செய்வதுடன் தமிழ் சிறுகதை தொகுப்பொன்றை சிங்களத்தில் வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாக வாழ்ந்து கொண்டிருக்கும் போதும் திக்குவாயாக இருப்பது இயற்கைக்கு மாறாகவே இருப்பதாக எண்ணிக்கொண்டே அவன், "சரிம்மா... அப்ப அம்மாக்கிட்ட குடு" என்றான்.

"ஹலோ சமன்"

"சொல்லு மாயா"

"சொல்லவா... நல்லாத்தான் சொல்ல வருது. போன வாரம் நீங்க கோர்ட் உத்தரவ மீறி இருந்தீங்க. தயவு செஞ்சி இதுக்கு மேல அப்படிச் செய்ய வேணாம். நாக பன்சலை அரச மரத்தடியில வச்சி மகள பார்த்து பேச நாங்க சம்மதிச்சது எங்களோட மனுசத்தன்மையினால, அப்படி இல்லாம நீங்க யாருங்கிறத நாங்க மறந்ததுனால இல்ல. அது நல்லா ஞாபகத்தில வச்சிக்கங்க. சரியா, கோர்ட் உத்தரவ மீறி நீங்க மகள எங்கயாச்சும் ஒரு அடி கூட்டிக்கிட்டுப் போயிருந்தாலும் நான் வேற முடிவுக்கு வருவேன் சரியா? புள்ளைக்கு இனிப்பு வாங்கி குடுக்கிறது பரவாயில்ல. ஆனா காரமும், சைனீஸ் சாப்பாடும் வாங்கிக் குடுக்க வேணாம். அதுகல்ல சரியானமாதிரி எண்ணெய். ஹெரிபோட்டர், ரஸ்கின் போண்ட் இன்னும் அது இதுன்னு கட்டுக் கதைகளுக்கு வீணா பணத்த செலவு செய்ய வேணாம். அந்த மாதிரி கதைகளைப் படிக்க அவ இன்னும் சின்னவ, அவளுக்கு தேவையான படிப்ப நான் குடுக்கிறன். அதனால் முடியுமா இருந்தா மாசா மாசாம் மகளுக்கு குடுக்கிற இருபத்தி ஐயாயிரத்த முப்பதாயிரமா சேர்த்து அவட பேர்ல போடுங்க. நல்ல ஸ்கூல் ஒன்னு கிடைக்காட்டி அவள ஒரு இன்டர் நெஸ்னல் ஸ்கூலுக்குத்தான் போடனும்".

மறுமுனையில் குரல் ஓய்ந்து தொலைபேசியை வைக்கும் சத்தம் கேட்டது. நீண்ட நாட்களுக்குப் பின் குளியல் அறையின் கண்ணாடி முன்னே நின்ற அவன் தன் பிம்பத்தை நன்றாக உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

"தொண்டைக்குள்ள சாராயத்த ஊத்தறது வளர்ந்த மரத்து வேர்ல சுடு தண்ணிய ஊத்துறது மாதிரியான வேலை. சிகரட் குடிக்கிறதுங்கிறது அந்த மரத்து வேர பொசுக்குறதுக்கு சமம்."

ஒருமுறை ஊருக்குப் போனபோது அம்மா சொன்ன வார்த்தைகள் அவனுக்கு ஞாபகம் வந்தன.

"உண்மைதான் இதெல்லாத்தையும் நிப்பாட்டனும். பின்னேரம் ஜிம்முக்குப் போக ஆரம்பிக்கனும்.

வேலை முடிஞ்சதும் வேளைக்கு வீட்டுக்கு வரனும். முகம்கூட கொஞ்சம் அதைச்ச மாதிரித்தான் இருக்குது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிப் பார்த்தா எண்ணெய் சாப்பாடு மகளுக்கும் பார்க்க எனக்குத்தான் உதவாது." குளியலறை குழாயிலிருந்து ஒரே விதத்தில் தண்ணீர் கொட்டும் சத்தத்திற்கு காது கொடுத்துக் கொண்டிருந்த அக்காள் கதவைத் தட்டலானாள்.

"ஏங்கா"

"என்ன குளிக்கலையா?"

"குளிக்காம வேற என்னவாம்?"

"மகள் கிலாசுக்குப் போக நேரமாச்சில்ல?"

"இந்தா வந்துட்டேன்"

"கெதியா இங்க இருந்து வெளியேர்றது நல்லது. அக்காவா இருந்தாலும் அவ குடும்பத்துக்குள்ள நான் நொழைஞ்சிக்கிட்டு இருக்கிறத விரும்பமாட்டா. அவளும் அவளோட குடும்பத்தோட தனியா இருக்கிறத்தான் விரும்புவா. அதோட பத்து வருசமா பழக்கப்பட்ட போர்டிங் வாழ்க்கைக்கு திரும்புறது எனக்கு ஒன்னும் கஷ்டமான காரியமில்ல".

பத்தரமுல்லை சந்தியைத் தாண்டிய அவன், வாகனத்தை இடதுபுறமாகத் திருப்பி, சற்றுத் தூரம் சென்றதும் குறுக்கு வழி அருகே பாதை ஓரமாக நின்று காத்திருந்தான். பத்து நிமிடம் கழிந்தும் மகளும் பாட்டியும் வராததால் சரி இது இன்னைக்கு கடைசி என்று நினைத்தவாறு சிகரட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான். போட்டி போட்டுக் கொண்டு ஒன்றன்பின் ஒன்றாக வந்த மூன்று பஸ்கள் கொழும்பை நோக்கிச் சென்றன. வயலின் ஒன்றைத் தொங்கவிட்டவாறு குறுக்கு வழி ஒன்றிலிருந்து வந்த ஒரு யுவதி பூமியையே வைத்தகண் வாங்காது பார்த்தவாறு வீதியைக் கடந்து வீதியின் மறுபக்கத்தில் இருந்த பஸ் தரிப்புக்குள் நுழைந்தாள். நவீன முறையிலான காற்சட்டையுடன் குட்டையான ரீசேர்ட் ஒன்றை அவள் அணிந்திருந்த போதும் அவளது நடைக்கும் உடைக்கும் வித்தியாசம் தெரிந்தது. கீரை வண்டியொன்றைத் தள்ளிக் கொண்டு வந்த ஒருவனுடன் சிரித்துவிட்டு குறுக்கு வழிக்குள் திரும்பினான். அந்தச் சிரிப்பு சொற்ப காலத்திற்கு முன் இறந்துபோன அவனது அப்பாவின் சிரிப்பை போன்றதென்றது அவன் மனம். சிகரட் புகை தொண்டைக்குள் இறங்க பில்டரை வீதி யோரத்து கானில் போட்டுவிட்டு காரில் ஏறிய அவன் குறுக்குப் பாதைக்குத் திரும்பி முதல் கியரிலேயே முன்னொக்கிச் சென்றான். முன்னொரு காலத்தில் அவனது சொந்த வீடாகவும் தற்போது அவனது மனைவிக்கு மட்டும் சொந்தமாகி இருந்த அந்த வீட்டின் முன்னால் கேட் அருகே நவீனரக கார் ஒன்று நின்றது. மெதுவாக தமது வாகனத்தை முன்னே நகர்த்திச் சென்ற அவன் கேட்டை அடைந்ததும் இருமுறை ஹோர்ன் அடித்தான். கதவு திறந்தது. மகளை வாரி அணைத்து தூக்கிக்கொண்டு வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயா. காரின் முன் கதவைத் திறந்து மகளை அதில் அமர்த்தி முத்தம் கொடுத்துவிட்டு அவனை ஏறெடுத்துக்கூட பார்க்காது திரும்பிச் சென்றவள் கதவைச் சாத்திக் கொண்டு மறைந்து போனாள்.

"ஏம்மா சுணக்கம்?"

"சரத் அங்கிள் கொண்டு வந்த சப்பாத்த போ... போ.... போ... போட்டுக்கிட்டன்"?

"யாரும்மா?"

"ச... ச... சரத் அங்கிள்"

"பாட்டியும் வீட்ல இருக்காங்களா?"

"இல்ல... பா... பா... பாட்டி பெரியம்மா வீட்டுக்குப் போயிட்டாங்க"

"இ... இ... இது... ச... சரத் அங்கிள் எனக்கு கொண்டுவந்த சப்பாத்து"

"ஆ... அப்படியா நல்லா இருக்கு" என்றவாறு காரைத் திருப்பி எடுக்கும்போது வீதியின் இரு புறங்களிலும் இருந்த உயர்ந்த மதில்கள் திடீரென இடிந்து தன்மீதும் தனது மகள் மீதும் விழுவது போல் அவன் கண்களுக்குத் தெரிந்தது. செத்சிறிபாயவைத் தாண்டி தியவன்னாவ அருகே வட்டச் சந்தியில் திருப்பும் போது வாகனத்தின் வேகத்தை அதிகரித்து அதை தியன்னாவ பாலத்தில் மோதி நொறுக்க வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் எழுந்தபோதும், அதைச் செய்ய மனதைத் தயார்படுத்திக் கொள்வதற்குள் மகள் கதைக்கலானாள்.

"அ... அப்பா..."

"ஏம்மா?"

"அப்பா... ஏன்... வீ.... வீட்டுக்குள்ள வரல்ல?"

"நாம கெதியா போகாட்டி வெயில் ஜாஸ்தியாகிடுமில்ல அதான்"

"அப்பா...?"

"ம்..."

"...க்... கிரெஸ்கட்னா என்னப்பா?"

"ஏம்மா?"

"பி... பியுமி... அவளும் அவங்க அம்மாவும்... ஆ... அப்பாவும் கிரெஸ்கட்டுக்குப் போனாங்கன்னு சொன்னா..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆ... கிரெஸ்கட்டுங்கிறது ஒரு பெரிய கடை... அங்க நல்ல ருசியான விதவித மான சாப்பாடு இருக்கு... உனக்கும் அங்க போக ஆசையா இருக்கா?”

“ம்”

“அப்பா...நாமலும் போவமே”

“எப்பப்பா ... நாம் திரும்ப... பாட்டியப் பார்க்க ஊருக்குப் போறது...?”

“ஸ்கூல் லீவுலத்தான் ஊருக்குப் போகலாம்... அப்ப அங்க போவம்”.

“அப்பா...”

“ம்”

“ஊர்ல பாட்டி செய்வாங்களே இனிப்பு... அது என்னப்பா?”

“எதம்மா கேட்கிற?”

“அந்த போல... போலயா.... இனிக்குமே...”

“அது உருண்டம்மா...”

“ஏம்பா... அம்மா அதெல்லாம் செய்யமாட்டேங்கிறா?

“அம்மாவுக்கு நேரமில்லாம இருக்கும்மா...”

“அப்பா... பொய் சொல்றீங்க... அம்மாவுக்கு உருண்டை செய்யத் தெரியாது”

பல்சுவை உணவு வகைகள், பழச்சாறு, புடிங் வகைகள் காட்சிப்படுத்தப்பட்டி ருந்த கடைகளைக் கடந்து சென்ற அப்பாவும் மகளும் மூலையில் சனப்புழக்கம் குறைவாக இருந்த ஆசனத்தில் சென்று அமர்ந்தனர். உணவு விற்பனைச் சாவடி களுக்கு சற்று அப்பால் இருந்த த்ரீ கொயின்ஸ் மதுபானச் சாலையைக் கண்டதும் அவனது வாயில் எச்சி ஊறியது.

“இப்படி இரும்மா. நான் போய் ஐஸ்கிறீம் வாங்கிட்டு வாரன்”

“என்னால ஏலாதப்பா... இருங்க நானும் வாரேன்”

அவளையும் தூக்கிக் கொண்டு இனிப்புக் கடையில் ஐஸ்கிறீம் பழச்சாறு கலந்த கோப்பையொன்றை வாங்கி வரும் வழியில் மதுபானச் சாலையில் பியர் ஒரு போத்தலையும் வாங்கினான். பல்வேறு முகபாவங்களைக் கொண்ட சிறார்கள் அருகே இருந்த காற்றுப் பைகளுடன் முட்டிமோதி கரணமடித்து விளையாடிக் கொண்டிருந்தனர். அதைச் சுற்றி அமர்ந்திருந்த பெற்றோர் மகிழச்சியுடனும், பூரிப்புடனும், இறுமாப் புடனும் தமது பிள்ளைகளையும், தாம் சுவைத்துக் கொண்டிருக்கும் சுவைமிகு உணவு வகைகளையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளும் அவனும் இருந்த மேசைக்கு அருகே இருந்த மேசையை தனதாக்கிக் கொண்டிருந்த நடுத்தர வயது ஆண் ஒருவன் தமது அத்தனை நோக்கங்களையும் எண்ணெயில் பொயியுன் சோர்ஸ் பூசப்பட்ட கோழி மீது குறிவைத்து அதை அங்கும் இங்கும் புரட்டி, இழுத்து, கிழித்து சாப்பிட்டவாறு தமது திருப்தியை வெளிப்படுத்தும் வகையில் தலையை நிமிர்த்தி அணிந்திருந்த கறுப்புக் கண்ணாடியை தமது ஆட்காட்டி விரலால் சரி செய்து கொண்டான். சற்றுத் தொலைவில் இருந்தமற்றுமொரு மேசையில் அமர்ந்திருந்த ஆந்தக் குரலும் உருண்டை உடலும் கறுத்தச் சருமமும் வறண்ட முகமும் கொண்ட ஜனரஞ்சகத் தொலைக்காட்சி நடிகன் ஸ்டவுட் போத்தலை முறைத்தவாறு புகையை ஊதிக் கொண்டிருந்தான். பிஞ்சுக் கைகால்களையும் பிள்ளை முகம் ஒரு துளிகூட மாறாத ஆயினும் முத்திய கன்னத்தைக் கொண்ட காதலனுடன் கொஞ்சிக் குலாவியவாறு அவனது அரவணைப்பிலிருந்தவாறு கொக்காகோலாவை உறிஞ்சும் யுவதியொருத்தி இன்னுமொரு மேசையில் அமர்ந்திருந்தாள். மகள் மிக அமைதியாக ஐஸ்கிறீமை சுவைத்துக் கொண்டிருந்தாள். மதுபான கறை அவனது தொண்டையில் ஒட்டியது. இன்னும் பல வருடங்களில் அவளும் பெரியவளாகி விடுவாள். அவளது தோற்றம் அவனை ஒத்து இருப்பதாக எண்ணினான். மாயாவைப் பிரிந்து முதல் முறையாக ஊருக்குச் சென்றபோது தொலைதூரத்தில் ஊரைச் சுற்றி வளைத்திருந்த மலைகளைப் பார்த்தவாறு அவனது தாய் சொன்ன ஒரு விடயம் அவன் ஞாபகத்திற்கு வந்தது.

“சேர்ந்து வாழ முடியாட்டி சண்டை சச்சரவு பண்ணிக்காம நீங்க பிரிஞ்சி போறது பரவாயில்ல.

ஆனா அந்த பிஞ்சு முகத்த பார்க்கையிலதான் என் நெஞ்சு பத்தியெரியுது. நீ என்ன செய்வியோ, ஆனா அந்த மாயா மறு கல்யாணம் பண்ணிக்க மாட்டாள்னு மட்டும் நினைக்காத, அப்படி அவ மறு கல்யாணம் கட்டிக்கிட்டதுக்கு அப்புறமும் ஒம் மகள் மாயாகிட்டயே இருந்தான்னா அது பெரிய விபரீதத்திலதான் போய் முடியும். ஆம்புளங்களப்பத்தி தெரியுமுல்ல. உனக்கெல்லாம் புத்தி சொல்ற அளவுக்கு நான் இல்லாட்டியும் நீங்க பிரிஞ்ச நாள்ள இருந்து எனக்கு தூக்கமே வரல்ல.”

ஒரு பிள்ளை அழ ஆரம்பித்தது. விளையாடிக் கொண்டிருந்த பிஞ்சுகளுக்கிடையே ஏதோ சண்டை. பெற்றோர் தத்தமது பிள்ளைகளை ஆறுதல் படுத்திக் கொண்டிருந்தனர்.

“அப்பா...”

“ம்...”

“அப்பா அது என்ன ருசியாப்பா?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எது?”

“நீங்க குடிக்கிறது”

“ஆ... அது கசப்பும்மா”

“ஏம்பா கசப்ப குடிக்கிறீங்க?”

“வயிறு... கொஞ்சம் வலிக்குது அதான்...”

“அப்பா...?”

“என்னம்மா?”

“ஏ... என்ட வயிறும் வலிக்குது”


“இத உன்னால குடிக்க ஏலாதம்மா கசப்பு. இரு நான் ஒனக்கு வேற ஏதாவது குடிக்க வாங்கித்தாரேன்”

“கசப்பா இருந்தா அத ஏன் அப்பா குடிக்கிறீங்க?”

“இப்ப அது எனக்குப் பழகிப்போச்சம்மா”

“அப்ப நானும் அதக் குடிக்கப் பழகவா?”

“ஒருக்கா வேணாமுன்னு சொன்னா கேளும்மா”



அவள் கண்ணீர்மல்கும் கண்களுடன் மேசையை சுரண்டினாள்.

“சொரிடா கண்ணு... இதுக்குப் போய்... வேற என்ன வேணுமுன்னு சொல்லு...”

அவள் குனிந்த தலை நிமிராது இருந்தாள்.

“சொரின்னு சொன்னேனே என்ன, வா... நாம் மேல் தட்ல இருக்கிற புத்தகக் கடைக்குப் போவோம். உனக்கு வேணும்கிற புத்தகத்த வாங்கலாம்”

பியர் போத்தலை மேசையில் விட்டுவிட்டு, அவளை வாரி அணைத்து அவன் அவளையும் தூக்கிக் கொண்டு தன்னியக்க படியில் அடியெடுத்து வைக்கும்போது அவனது கைத்தொலைபேசியில் அழைப்பு வந்தது.

“ஹலோ...”

“ஹலோ... சமன்”

“என்ன.... சொல்லு”

நந்திதாவின் குரலைக் கேட்டதும் தன்னியக்கப் படிக்கட்டு தலைகீழாக சுற்றுவது போல் இருந்தது. அவள் எதுவும் பேசாதிருந்தாள். ஸ்... ஸ் என்ற பெருமூச்சுடன் அழுதுபுலம்பும் குமுறல் சத்தம் மட்டுமே கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹலோ... இப்ப என்ன நடந்திருச்சாம்?"

"இப்ப ஒரு வாரம் பிந்திடுச்சி... இன்னும் இல்ல... எனக்கென்னமோ சந்தேகமா இருக்கு சமன்..."

மீண்டும் அவள் பெருமூச்சு விடும் சத்தம் கேட்டது.

"இப்ப அழுது பிரயோசனம் இல்ல. நாளைக்கு சந்திச்சுப் பேசுவோம்"

"எனக்கு பயமா இருக்கு சமன்"

"பயப்படாம இரு. உன்னோட டென்சனால கூட சுணங்கி இருந்தாலும் இருக்கும்."

"என்னால இதுக்கு மேலயும் இத தாங்க முடியாது. இப்பவும் நான் ரமணி வீட்டுலதான் இருக்கேன். உங்களால இப்ப அங்க வரமுடியுமா?"

"என்ன பேச்சி இது? இன்னக்கி நான் மகளோட இருக்கிற நாளுங்கிறத மறந்துட்டியா? மகள மாயாக்கிட்ட பாரம் குடுக்காம என்னால வரமுடியாது..."

"அப்படி சொல்லாதீங்க... சமன், இன்னைக்கே அது அப்படியாங்கிறத நான் பார்த்துக்கிறனும்"

"இப்ப என்ன செய்றது? என்னால மகள மாயாக் கிட்ட விட்டுட்டு பின்னேரமாத்தான் வரமுடியும். அவ்வளவு அவசரமா இருந்தா நீ ரமணியோட ஒரு ஆட்டோவைப் புடிச்சிகிளாஸ் ஹவுசுக்குப் போய்ப் பாரேன்."

"என்ன சொன்னீங்க? என்ன ஒரு வே... யாக்கவா பாக்குறீங்க? தன்னிந்தனியா என்ன இன்னொருத்தியோட போய் பாருன்னு சொல்றீங்களே?"

அவனுக்கு பதில் வரவில்லை. தலையை அவனது தோளில் சாய்த்தவாறு மகள் நித்திரை கொண்டிருந்தாள்.

"அப்ப நான் வரக்காட்டியும் இரு. நான் மகள மாயாக்கிட்ட குடுத்திட்டு வாரேன்"

குளிர் சூழ்ந்த மலையகம். காலனித்துவ காலத்தில் கட்டப்பட்ட பங்களா. மிக ஒழுக்கமான நடுத்தர வயது ஊழியர்கள். பசுமையான மரக்கறிகள், பழ வகைகள் - ஜின்ஜர் எல் கலந்த பீஹைவி பிரண்டி வீதர். நந்திதாவின் இதழ், விழிகள், தொடை சம வர்ண மெல்லிய சருமம் காமக் கிளச்சியால் அவள் எழுப்பிய முனங்கல் மிக வேகமான காட்சிகளாக அவனது மனக்கண்ணில் தோன்றியபோது அவனது உள்ளங்கால் பற்றியெரிவது போல் இருந்தது. மேலதிக வகுப்புக்காக நுகேகொடைக்கு வந்த நந்திதா ஒருமுறை அவளது நண்பர்களுடன் சேர்ந்து வகுப்புக்குப் போவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலாக கோல்பேஸ் திடலுக்குப் போனாள். அந்த இளம் கூட்டம் கடல் அலைகளுடன் ஓடியாடி கூச்சலிட்டு விளையாடியவாறு கடலை அன்னாசி ஆகியவற்றை சுவைத்துக் கொண்டிருந்தனர். அவன் தனது மகளுடன் பிளாஸ்டிக் பந்து ஒன்றை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். உப்புக் காற்றுடன் கலந்து பறந்து அந்தப் பந்து ஒருமுறை நந்திதாவின் காலடியில் வந்து விழுந்தது. மகளும் அந்தப் பந்தைப் பின் தொடர்ந்து ஓடிவந்தாள். பந்தையும் பாப்பாவையும் வாரி எடுத்த நந்திதா தூக்கி வந்து அவனிடம் கொடுத்தாள்.

"அந்த ஆன்டிக்கு தேங்க்யூ சொல்லுமா" என மகளிடம் கூற சிறுமி நன்றி சொன்ன பின் புல்வெளியில் மண்டியிட்டுக் கொண்ட அவள் சிறுமியின் உப்புக் கன்னத்தில் முத்தமிட்டாள்.

சில நிமிடங்கள் சிறுமியுடனும், அவனுடனும் பந்து விளையாடிய அவள் அவர்களிடமிருந்து விடைபெற்ற போதிலும் அந்த குறுகிய சந்திப்புக்குள் அவளது டியூசன் பற்றிய விபரங்களை கேட்டறிந்து அவற்றை மனதுக்குள் எழுதிக் கொண்டான். அடுத்த சனிக்கிழமை வகுப்பு முடியும் தருவாயில் அவன் காரை நுகேகொடைக்கு ஓட்டிச் சென்றான். ஒரு மாதத்திற்குள் டியூசன் முடிய அவனது காரில் ஏறி பொரலஸ்கமுவையில் இருந்த வீட்டை எட்டும் தூரத்தில் இறங்கிக் கொண்டாள்.

ஒன்றரை மாதத்தில் பெற்றோரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு மூன்று நாட்கள் அவனுடன் ஹப்புத்தளை பங்களாவில் கழிக்க வாய்ப்பைத் தேடிக் கொண்டாள். மீண்டும் தியவன்னா வட்டத்தை தாண்டும்போது மகள் பின் ஆசனத்தில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தாள் அவனது சிந்தனைகள் சோர்வடைந்திருந்தது. அப்போது அவள் கால்களை அலங்கரித்துக் கொண்டிருந்த சிவப்பு பூ வேலையைக் கொண்ட பாதணிகளை கண்டதும் அவனை விட்டுப் பிரிந்திருந்த மனைவி மீது கடும் கோபத்தை ஏற்படுத்தியது. இடையில் காரை நிறுத்தி அவளுக்கு தெரியாமலே பாதணிகளை கழட்டி வீச வேண்டும் என்ற உத்வேகம் அவனுள் ஏற்பட்ட போதிலும் அவ் எண்ணங்களை மிகுந்த சிரமத்துடன் அடக்கிக் கொண்ட அவன், மனைவியின் வீட்டை அடைந்தான்.

காலையில் வீட்டின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த வாகனம் அப்போதும் அவ்விடத்திலேயே நின்றிருந்தது. ஓசை எழும்பாத வண்ணம் வாகனத்தை முன் நகர்த்திய அவன், அதை அங்கே நின்ற வாகனத்திற்குப் பின்னால் நிறுத்திவிட்டு மகளையும் தூக்கிக் கொண்டு கேட்டை நோக்கி நடந்தான். மகளைத் தூக்கி வந்த சாட்டில் மனைவியின் புதிய காதலனைக் கண்டுகொள்வதே அவனது நோக்கமாக இருந்தது. ஆயினும் அவன் கேட்டை நெருங்கவே அது திறக்கப்பட்டு அங்கே மாயா நின்று கைகளை ஏந்தினாள். மகளைப் பெற்றுக் கொண்ட அவள் மறுபேச்சும் பேசாது கேட்டைச்சாத்திவிட்டு உள்ளே போய்விட்டாள். தம்மோடு கூடிக்குலாவி வாழ்ந்த காலத்தைவிட இப்போது அவள் துள்ளும் இளமைத் தோற்றத்துடன் இருக்கிறாளே என்ற எண்ணத்துடன் அவன் வாகனத்தை திருப்பிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியவன்னா ஓடையில் நீராடிக் கொண்டிருக்கும் நீர்க்காகங்கள் கூட தன்னைவிட சந்தோஷமாக வாழ்கின்றனவே என்ற எண்ணத்துடன் எதுல்கோட்டையிலிருந்து பிட்டகோட்டைக்கு வந்தான்.

நுகேகொடையை நெருங்க ஏப்ரல் மே மாத பருவமழை காரைக் கழுவிவிட்டது. ரமணி கேட்டைத் திறந்தாள். அதைத் தொடர்ந்து வந்த நந்திதா முன் ஆசனத்தில் அமர்ந்தாள். ஆறாம் கட்டையைத் தாண்டுகையில் சாரதி ஆசனத்தை நெருங்கிய அவள், அவனது நெஞ்சில் தலைசாய்த்து அழத் தொடங்கினாள். "சரி, சரி இப்ப அழுது என்ன செய்ய? பொறு பார்ப்போம்"

"இதில இன்னும் என்னத்தப் பார்க்க இருக்கு? என் மனம் அப்படின்னுதான் சொல்லுது". சுற்றும் முற்றும் இருள் சூழ்ந்திருந்த போதும் எதிரே வரும் வாகனங்களின் ஒளியினால் சமாந்தரமாக செல்லும் பஸ் வண்டியில் இருப்பவர்களின் கண்களில் காருக்குள் அவர்கள் இருக்கும் விதம் பட்டுவிடும் என எண்ணிய அவன் போலித்தனமான சோர்வை வெளிப்படுத்தியவாறு பெரும் கொட்டாவி விட்டான். அவள் அவன் மீது சாய்ந்திருப்பதை விட்டுவிட்டு அவளது ஆசனத்தில் சாய்ந்து கொண்டாள். ஆயினும் பெருமூச்சும் முனங்கலும் சிணுங்கலும் புறங்கையால் கண்ணீரைத் துடைப்பதும் நிற்காது தொடர்ந்தன. கிளாஸ்ஹவுஸ் வாகனத் தரிப்பிடத்தை நெருங்குகையில் அவள் நடுங்கும் குரலில்.

"உங்களுக்கு தெரியுமா? நேற்றிரவு கனவுல சிவப்பு கோழியையும் முட்டை கூடையையும் கண்டன்.

எனக்கெனனமோ இதில இருந்து தப்ப கிடைக்காதுபோல இருக்கு".

தாதி ஒரு மணித்தியாலம் காளித்து வருமாறு கூறினாள். "வா வெளியே போய் டீ குடிச்சிட்டு வருவோம்" "எனக்கு இப்ப ஒண்ணும் வேணாம்". "பைத்தியம், நீ இப்பவே நல்லா பயந்து போயிருக்க."

"பயப்படாம, என்னை என்ன கூத்தாடவா சொல்லுறீங்க?"

"இது ஒன்னும் உனக்கு மட்டும் நடந்ததாக்கும்" "அது சரி, அடுத்து என்ன செய்வோம்னு சொல்லுவீங்கன்னு எனக்குத் தெரியும்"

"தெரிஞ்சா பேசாம வாய மூடிக்கிட்டு இரேன்" பதில் கூற முடியாதுபோன அவள் அருகே இருந்த ஆசனத்தில் இடிந்து விழுந்தாள். வெண்ணிறமான ஆராய்ச்சிச்சாலையின் சுவரில் பல்லியை சுமந்து கொண்ட பல்லியொன்று வேகமாக ஓடி கதவிற்கு பின்னால் மறைந்துவிட்டது.

நடைகூடத்தில் நுழைந்த கர்ப்பிணியொருத்தி அவளை கடந்து சென்றதும் உடனே எழுந்துகொண்ட நந்திதா தன் கையால் வாயை மூடியவாறு கழிவறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொன்றைத் தேடி ஓடினாள். இரண்டாவது சிகரட்டை புகைத்தவாறு நடைபாதையில் அங்கும் இங்குமாக நந்து கொண்டிருக்கையில் அடுத்த ஞாயிறு மகளை நூதன சாலைக்குக் கூட்டிவர வேண்டும் என்ற எண்ணம் அவனுள் ஏற்பட்டது. கைத்தொலைபேசியின் மணி ஒலித்தது.

"ஹலோ..."

"ஹலோ... இந்தா நான் திரும்பவும் சொல்றேன். பன்சலைக்கு வெளிய வேற எங்கயும் மகளைக் கூட்டிக்கிட்டுப் போறதுக்கு உங்களுக்கு எந்த உரிமையும் இல்ல. அதோட இது முதல் தடவையில்ல. இதுக்கு மேலேயும் இப்படியே செஞ்சா நான் பொலிஸ்ல புகார் கொடுப்பேன்... சின்ன புள்ள முன்னுக்கு கன்ராவியக் குடிக்க உங்களுக்கு வெட்கமா இல்ல? அத ஒரு அப்பன் செய்ற வேலையா? உங்களுக்கு எதவேணுமுன்னாலும் நீங்க குடிச்சிங்கிங்க. நெருப்புத் தண்ணியக் குடிச்சாக்கூட அதப்பத்தி எனக்கு ஒன்னும் கவலையில்லை. வெளங்கிச்சா? தயவு செஞ்சி எம்புள்ளைய நல்லா வளர்க்கிறத கெடுக்காதீங்க. பன்சலைக்கி வந்து மகளப் பார்த்துட்டுப் போங்க. அவ முன்னுக்கு ஒரு நல்ல மனுஷனா நடக்காட்டி அப்புறம் என்ன கெட்டவள்னு சொல்ல வேணாம் சரியா..."

துண்டிப்பு ஓசை கேட்டது.

அவன் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் பஸ்ஸின் டயருக்குள் அகப்பட்டு நொருங்கும் வண்ணம் தமது கைத் தொலைபேசியை வீதியில் வீசியெறிய வேண்டுமென ஏற்பட்ட எண்ணத்தை அடக்கிக் கொண்டு வீதியைக் கடந்து ஆராய்ச்சிச் சாலையை நோக்கி நடந்தான். நடை கூடத்தில் அடியெடுத்து வைத்த அவனை நந்திதா வீங்கிய விழிகளால் திரும்பிப் பார்த்தாள். பார்த்த கையுடன் தலையைத் திருப்பிக் கொண்டாள். அவளருகே வந்த அவன் அவளது தலையைத் தடவ, அவர்களிடம் வந்த தாதி புன்னகைத்தவாறு வைத்திய அறிக்கையை அவர்களிடம் கொடுத்துவிட்டு சப்பாத்தின் அடியோசை எழும்புமாறு திரும்பிச் சென்றாள்.

"எவ்வளவு கெதியா ஒரு அவர் ஓடி முடிஞ்சிருச்சி என நினைத்தவாறு அவன் அந்த அறிக்கையை பிரித்துப் பார்த்தான்.

நடுக்கத்துடன் எழுந்து நின்ற நந்திதா "என்னவாம்?" என்று முனங்கினாள்.

"பொஸிடிவ், உன்னோட சந்தேகம் சரி"

"அப்ப நான் ஒரு புள்ளத்தாச்சி"

தொண்டைக்குழிக்குள் ஆமா... ஆமா... என்றவாறு அவன், அவளருகே இருந்த ஆசனத்தில் சரிந்து விழுந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபச்செல்வன் கவிதைகள்

### அம்மா ஒருத்தியின் வீடு

காய்ந்த கிளைகளால் வேயப்பட்ட கூரையில்
பறவைகள் வந்து உறைகின்றன
எண்ணற்ற நிலாக்கள் ஒளிரும் வீட்டினுள்
குழந்தைகள் விரல்களை மடக்கிக் களைக்கின்றனர்
மழையினால் காயமடைந்த சுவர்களிலுள்ள
சித்திரங்களின் கதைகளில் குடைகளில்லை
படகுகளில் தாண்ட முடியாத நதிக்கரையில்
கரைந்து போகும் ஒரு குடிசையில்
அம்மா ஒருத்தி குழந்தைகளை வளர்த்தாள்
குடமெடுத்துத் தண்ணீருக்கு அலையும் பொழுதும்
மழைவீட்டில் குழந்தைகளை
மூடி அணைத்த பொழுதும் சுவர்கள் கரைந்தன
எப்பொழுதும் வற்றாத வெள்ளத்தில் மிதக்கும்
குடிசையில் குழந்தைகளுக்காக அம்மா ரொட்டி சுட்டாள்
கூரையாய் வாழையிலைகளைச் செருகி
அதிலுறங்கும் அம்மா ஒருத்தியின் வீடு
ஒரு பெருமழை நாளில்
நதியோடு அடித்துச் செல்லப்பட்டது.



### ஞாபகங்கள் மூடிய வானம்

கூரையற்றிருக்கையில் வானத்தில்
நினைவுப்படங்களும் கொழுவப்பட்டிருக்கின்றன
சுவரற்றிருக்கையில் மரஞ்செடிகளில்
வார்த்தைகள் முளைத்திருக்கின்றன
நினைவை அழிக்கும் பேரலைகள்
புராதனச் சுவர்களில்
எழுதப்பட்டிருந்த கதைகளையும்
சித்திரங்களையும் அடித்துக் கரைத்தன
சுவர்கள் அழித்து வீழ்த்தப்படுகையில்
புகைப்படங்கள் புதைந்துவிட்டன
கொல்லப்பட்டவர்கள்
அப்பொழுது மீண்டும் கொல்லப்பட்டனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ந்த சுவர்களின் கீழாய்
ஞாபகங்கள் நசிந்து அழுகிப்போயின
சுவர்களும் இல்லை
ஞாபகங்களும் இல்லை
மனதில் அலையும் முகங்களையும்
ஞாபகங்களையும் எப்படித் தாளில் பிரதியெடுப்பது?
ஞாபகங்களைக் கொண்டாட
இருக்கிற புகைப்படங்களும் சுவர்களற்று
சிதறுண்டு கிடக்கின்றன
சுவரில் கொழுவப்பட முடியாது
தடைசெய்யப்பட்டு நிலத்தில் புதைக்கப்பட்ட
புகைப்படங்கள் முளைக்கின்றன
புகைப்படங்கள் இல்லாத
சுவரில்லாத வீட்டில்
வானத்தை மூடியிருக்கின்றன
தடைசெய்யப்பட்ட ஞாபகங்கள்.

## பீடிச் சிறுவன்

உக்கிய தடியை பொம்மையாக்கியிருக்கிறான்
விரிந்த முகமும் கண்களும் வாயும் உள்ள தடி
விளையாடிச் சிரிக்கின்றது
பகல் முழுதும் அலையும் அம்மாவின் கைகளுக்கு முன்னால்
சிறிய கைகளும் நீளுகின்றன
சில நேரங்களில் வீரிட்டு அழும்பொழுது
பாத்திரங்களில் சில்லறை நிறைகிறது
புத்தங்களைப் பார்க்காமல்
சிறுவர்களின் பாடல்களைப் படிக்காமல்
வளரும் சிறுவனின் காற்சட்டைப்பையில்
இருப்பதெல்லாம் யாரோ விட்டுச்சென்ற பீடித்துண்டுகள்
அம்மாவின் முகம் காயமான பொழுது
சிறுவனின் முகத்தில் பீடித்துண்டின் கரி அப்பியிருந்தது
படிகளில் எறியப்பட்ட பீடித்துண்டுகளைப்
பொறுக்கி வாயில் வைத்து இழுக்கையில்
எரிந்து புகைந்து கொண்டிருந்தன அவனது கண்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடகை வீடு

யாழ் தர்மினி பத்மநாதன்

நித்திரை விட்டு எழும்பும் போதே முகம் வீங்கி கண்கள் சிவக்க மூச்சிரைத்தாள் நந்தினி. அவளைத் திருமணம் செய்ததில் பிரபாகருக்கு திருப்தி தான். ஆனால் அவள் மனதுக்கு ஆற்றுப்படுத்தல் தேவைப்படுவதை அவளுடன் சேர்ந்திருக்கும் நேரங்களில் உணரத் தொடங்கினான். நந்தினியின் எண்ணங்கள் சிந்தனைகள் உயிர் எல்லாம் எப்பொழுதும் அவளின் மூன்று வயதுக் குழந்தை "பாரினி" மேலே இருந்தது.

"நந்தினி என்னை உண்மையில் நம்பும் எப்பிடியும் நான் பாரினிக்கு அப்பா தான். உம்மை லண்டன் கூப்பிடுற நேரம் பிள்ளையையும் எடுத்திடுவன்." அவளின் கைகளை இறுகப் பற்றி தலையை வருடிக் கொண்டிருந்தான். சிவகாமியும் சரவணனும் பிரபா கருக்கு தேடாத பொம்பிளை இல்லை. அவனின் பிடிவாதமும் வேறு வகையாகவே அமைந்திருந்தது.

"இங்க பார் தம்பி... நீ நினைக்கிற மாதிரி இங்க பொம்பிளை எடுக்கிறது சரிப்பட்டு வராது. நாடு கிடக்கிற கேவலத்தில இங்க நடக்கிற நிலைமை தெரியாம கதைக்காத, இங்க வாறதுக்கு சும்மா ஆசைப்படாத... நான் நந்தினியை சம்மதிக்க மாட்டன். இருபது வருசமாய் சகோதரங்களுக்காக கஸ்டப்பட்ட பிள்ளை நீ...

சீதனமும் இல்லாமல்... அதுவும்... நந்தினியை செய்து வைக்க எப்பிடி எனக்கு மனசு வரும்?... சொல்லு பாப்பம்?... அவள் யாரோ எவளோ?... வேண்டாம் தம்பி... நீ இங்க வர வேண்டாம்... நாளைக்கு உற்றம் சுற்றம் சனம் சந்ததி என்ன சொல்லும் சொல்லு? எங்கட மானம் மரியாதை கௌரவம் என்ன ஆகிறது? எங்கட மாவட்டத்தில பெயர் போன விதானை உன்ர அப்பா. அவரின்ட மகன் இப்பிடி செய்திட்டானாம் என்று தான் சனம் எல்லாம் நரம்பு இல்லாத நாக்கால உன்னைச் சப்பித்துப்புங்கள். என்ன காலம் உன்னப் போட்டு ஆட்டுதோ தெரியேலை. உடல் சோர கத்தி முடித்தாள் சிவகாமி. இருந்தும் தன் முடிவில் மாற்றம் இன்றி நந்தினியைக் கரம் பிடித்தான் பிரபாகர். எந்த சடங்கு சம்பிரதாயமுமின்றி சாட்சிக்காக சிறிய கிராமத்து அம்மன் சாட்சியாக தாலி கட்டிக் கொண்டனர்.

முள்ளி வாய்க்கால் பல ஆயிரக் கணக்கான மக்களைக் காவு கொண்டது. அவர்களுள் காவியனும் ஒருவன். விடுதலைப் போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டான் காவியன். யாழவள் என்ற வீரப் பெண் நந்தினி இன்று சமூகத்தின் மத்தியில் கூனிக் குறுகிப் போனவளானாள். அடைக்கலம் வேண்டி வவுனியா வந்தவள் உடுத்த உடுப்புடன் கதிர்காமர் நலன்புரி (பறி) முகாமில் அடைக்கப்பட்டாள். இவளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த பல வீர வீராங்கனைகள் மேலதிக சிகிச்சை, மற்றும் விசாரணை, என்று வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டனர். கைக் குழந்தை பாரினியுடன் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு பதிவுகளற்ற முறையில் முகாம் விட்டு வெளியேறினாள். தாய் சகோதரம். உற்றம் சுற்றம் துணையின்றி தவித்துப் போனவள் ஊடகங்களின் உதவியுடன் தாய் ராசமணியைத் தேடாத இடமெல்லாம் தேடிக் கண்டுபிடித்தாள். கண், கை, கால்கள். உடல் எங்கும் காயம் இல்லாத இடமே இல்லாதவளாக இருந்தாள் ராசமணி. எழும்பி நடக்கக் கூட திராணியற்றவளாக உறவற்ற ஒரு வீட்டின் ஓரத்தில் புறக்கணிக்கப்பட்டவளாகவே வாழ்ந்து வந்தாள்.

வீடு, தோட்டம், துரவு, ஆடு, மாடு, கோழி, பால் பண்ணை என்று பல இலட்சங்களுக்கு சொந்தக்காரி மட்டுமன்றி மூன்று ஆண் மக்களையும் விடுதலை வேட்கையில் உரமிட்ட வீரத்தாய் அவள். இன்று அவளோ... "நாளை என்ன?" என்ற ஏக்கத்துடன் துடித்தவளுக்கு நந்தினியின் பாதுகாப்பும் பராமரிப்பும் புது உலகில் பிறப்பை கொடுத்தது. கையேந்தாத பிச்சைக் காரியாக துடித்தாள் நந்தினி.



அயல் கிராமத் தோட்டத்தில் கூலிக்கு சேர்ந்து கொண்டாள் இரவு வேலைக்கு பக்கத்து மில்லிலும் சேர்ந்து கொண்டாள். மில்லில் இரவில் தங்குமிட வேலையாக இருந்தமையினால் பாரினியின் பொறுப்பு ராசமணியிடம் இருந்தது. மூவருக்குமாக மூன்று வேளைக்காக அவள் பட்ட கஸ்டத்துக்கு அளவே இல்லை. "வன்னியில இருந்து வாறவைக்கு வீடு குடுத்தால் போலீஸ், ஆமி எண்டு எங்களுக்கு தான் பிரச்சனை." எங்கும் ஒரு குடிசை கேட்டு கிடைக்காமல் அலைந்தாள் வன்னி என்டதுமட்டு மல்ல முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு என்டதும் சனம் ஏன் இப்பிடி பயப்படுதோ என்று வேதனையும் பட்டாள். இருந்தும் தோட்டக் காணியில் நான்கு தடிகளை நட்டு தறப்பாள் போட்டு இருக்க தோட்ட உரிமையாளனின் மனிதம் இரங்கியதால் கொஞ்சம் திருப்திப்பட்டுக் கொண்டாள்.

நந்தினியின் வீராப்பும், துடிதுடிப்பும் அவளைத் தேடுதல் ஆர்வம் கொண்டவளாகவே இயக்கியது. முப்பதியொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதில் இன்று மூன்று வயது குழந்தைக்கு தாயுமானாள் நந்தினி. கைக்குழந்தையாக தவன்றவள் ஓடித்திரிந்து கதைபேசத் தொடங்கி விட்டாள் அவள் மொழியில் இன்னும் "அப்பா" ஒலிக்க வில்லை. அவளின் ஒவ்வொரு அசைவுகளும், முகச் சாயலும் நந்தினியை பாடாய்ப்படுத்தியது.

எதிர்பாராத அவலத்தினுள் சிக்கிக் கொண்ட இலட்சக் கணக்கான மக்களுள் அவளும் அடங்குவதனால் தன் தலைவிதிமேல் பாரமிட்டுக் கொண்டு வைரமா னாள். நாட்கள் நகர்ந்து மாதங்களாய் ஓடத் தொடங்கியது. அரசியல் சூழ்நிலையின் அழுத்தத்தினால் சொந்த நாட்டில் நிம்மதியாக அவளால் வாழமுடியவில்லை. இரவு பகல் என்றில்லாமல் தேடுதலின் நடுவில் பதட்டமும் பயமும் கொண்டு தனது பிள்ளைக்காகவும், பிள்ளையின் எதிர்காலத்துக்காகவும் வழி தேடினாள்.

"எந்தப் பொறுப்பும் அற்ற ஈழப் போராட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தை சேர்ந்த, 35 வயதுக்குட்பட்ட பெண் தேவை. ஜாதி, மதம், சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம் மணமகன் லண்டனில் இருந்து விரைவில் இலங்கை வரவுள்ளார்" தொடர்பு முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பனவும் குறிப்பிட்ட விளம்பரம் நந்தினியின் கண்களையும் முத்தமிட்டது.

பாரினியை தன் தாயிடம் ஒப்படைத்து விட்டாவது வெளிநாடு சென்று அம்மா வையும் பிள்ளையையும் பாதுகாக்கலாம் என்பது தான் நந்தினியின் ஆழமான நம்பிக்கை. அவள் விண்ணப்பித்து ஒரு கிழமைக்குள் பிரபாகரிடம் இருந்து சம்மதமும் தெரிவிக்கப்பட்டதுடன் அவன் தாய் சிவகாமிக்கு சம்மதம் இன்மை பற்றியும் நந்தினியுடன் கலந்துரையாடப்பட்டது. நந்தினியை வெளிநாடு வரும் வரை பொறுமை காக்கும் படியும் வேண்டினான் பிரபாகர்.

லண்டனில் வெளிப்புற நகரில் சொந்தமாக கடை வைத்திருப்பதையும் அதன் பொறுப்பின் உரிமை நந்தினிக்கும் உரியது பற்றியும் எடுத்துரைத்தான். நந்தினியின் மனக் காயங்களை ஆற்றும் பிரபாகரின் நம்பிக்கை வார்த்தைகளும், எதிர்கால வாழ்வின் நிதர்சன புரிதலுக்கான களத்தின் வெளிகளும் நந்தினியின் வாழ்வில் வெளிச்சமிட்டிருந்தது. ஆயினும், அவள் எதிர்பார்க்க முடியாத விபத்தை சந்திக்க முடிந்ததையிட்டு மௌனியாகியும் போனாள். அவள் தாய் உடல் நிலை மோசமாகி காலமானாள். அந்த நாள் முதல் பாரினி அநாதை இல்லத்துக்கு சொந்தமானாள். பச்சைக் குழந்தையை அநாதை இல்லத்தில் ஒப்படைத்ததையிட்டுத் துடித்துப் போனவள் பிரபாகருடன் அழுது புலம்பினாள்.

பிரபாகரின் ஆறுதல் மொழிகளுடன் பாதுகாப்பின் பொருட்டு இந்தியாவில் தங்கவைக்கப்பட்டாள் நந்தினி.

"போலீஸ் பதிவு நாங்க செய்ய முடியாது... நீங்க தான் பார்க்கணும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ!... நீங்க சிங்களத் தமிழா?"

"சிலோன் காரர் என்டால் எங்களுக்குப் பயம்."

"மீன், கோழி சமைக்கிறவங்களுக்கு வீடு குடுக்கிறதில்லை..."

"கறைக்டா எத்தின போரோ அத்தின பேர் தான் இருக்க முடியும். அப்புறம் சொந்தங்கள் யாரும் அனுமதிக்க மாட்டம்..."

"சிலோன்காரருக்கு வாடகைக்கு வீடு விடுறது நிப்பாட்டிட்டம்"

"யாராவது வெளிநாட்டில, பாறினில இருக்கிறவங்களுக்கு மட்டும் தான் வீடு வாடகைக்கு விடுவம், அவங்க தான் கறைக்டா வாடகை குடுப்பாங்கள்." இப்படியே ஒன்று இரண்டு மாதங்கள் சென்னையின் வீடுகள் பலதை அடையாளம் கண்டாள் நந்தினி.

நிம்மதியில்லாத உலகில் நியாமற்ற வாழ்க்கை வாழ்வது என்பது யாரால் உணரப்படுகிறது? ம்...

திருமணம் முடிந்து இரண்டு வருடங்கள்... நந்தினியை பார்க்க சென்னை வந்தான் பிரபாகர். அவனது வருகை மிக்க மகிழ்ச்சியை கொடுத்திருந்தாலும். ஸ்பொன்ஸர் செய்வதில் காத்திருப்புக்களும் தாமதங்களும் நீண்டன. நந்தினியின் முக்கிய ஆவணங்கள் யாவும் முள்ளி வாய்க்காலில் இழக்கப்பட்டதுடன், சென்னையில் அகதிப்பதிவின் அனுமதி வருவதிலும் காத்திருப்பானது.

"பிரபாகர்... தம்பி... எட்டு மணி ஆச்சு... எழும்பி தேத் தண்ணீயைக் குடி... எழும்பு சாப்பாடு இல்லை, சமையலும் இல்லை பிள்ளை பெத்தவாவுக்கு புது மாப்பிள்ளை கேக்கிது... ஊர் சுத்தறதும், தியட்டர் வழிய திரியிறதும் தான் மிச்சம் போல....." நந்தினியின் மனசை ஈட்டியாய் குத்தியது சிவகாமியின் வார்த்தைகள்.

"நந்தினி... எதையுமே பிரச்சனையாய் யோசிக்க வேண்டாம். உனக்கு நான் இருக்கிறன். சொஞ்ச காலத்தில கூப்பிட்டிடுவன். நாங்கள் சேர்ந்து உன்னைப்போல வலிகளோட தவித்துக் கொண்டிருக்கிற எங்கட சமூகத்துக்காக ஒரு அமைப்பை தொடங்குவம். அதுக்காக பல இடங்களிலும் உதவிகள் கேட்டு அவர்களுக்காக புதிய வாழ்க்கைக்கு வழிகாட்டுவம். அதுவரைக்கும் நீ பொறுமையாய் இரு. அம்மா வயதானவா... கோபப்படாத... நான் லண்டன் போக அம்மாவும் அப்பாவிட்ட ஊருக்கு போயிடுவா... அவாவின் திருப்பதிக்கு கதைக்கட்டும் விடு... உன்ர பொறுமையில தான் எங்கட எதிர்கால பயணங்களின் நம்பிக்கைக்கு பலன் கிடைக்கும்."

"பிரபாகர்...."

"இந்தா வாறேன் அம்மா..." தலையை கோதியபடி வந்தவன் "நந்தினி இன்டைக்கு நீ சமையன், உன்ர சமையலின்ர ரேஸ்டைப் பாப்பம்..." "இன்டைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கட பெரிய மகாராணிக்கு லீவு" தாயுடன் செல்லம் கொஞ்சினான் பிரபாகர்.

"நீ... என்ன தா நினைச்சிட்டு இருக்கே!... மாசமாகி இரண்டு நாளாயிட்டு, வாடகையை குடு..." வீட்டு றூம் சொந்தக்காரி விடிஞ்சதும் விடியாயததுமாய் வாசலில் ஓலமிட்டாள்.

"உங்களுக்கு 10ம் திகதிக்குள்ள காசு தந்தால் சரி தானே பிறகு ஏன் இப்ப வந்து நிக்கிறீங்கள்? வெளி இடமெல்லாம் நாங்கதான் கிளீன் பண்றம், எங்களுக்கு கோலம் போட இடமும் இல்லை நீங்கள் இதுக்கெல்லாம் காசு கேக்கிறீங்களாம்..." பிரபாகர் கேள்வி கேட்டான்.

இங்க பாருங்க சிலோன் காரருக்கு நாங்க வாடகைக்கு விடுறதில்லை. நியாயம் பேச வந்திடுவாங்க... வீடு ஒன்டும் நாங்க கூப்பிட்டு குடுக்கல... நீங்கதா வந்தியளே... என்ன வார்த்தையை... பேசுறா, சும்மா தொண தொணக்காத. இஷ்டமில் லாட்டி வீட்டை காலிபண்ணிடு..." கோபம் கொப்பளிக்க தெருவை தாண்டி நகர்ந் தாள் உரிமையாளி சின்னத்தாயி.

"ஏன் நந்தினி வீடு எடுக்கேக்க ஒன்டும் கதைக்கலையா?"

"நான் என்ன சும்மாவா பார்த்தன். இரண்டு மாசமாய் அலைஞ்சு திரிஞ்சது எனக்குத் தான் தெரியும். ஆட்டோவில ஏறினால் சொல்றது ஒருகாசு, இறங்கேக்க சண்டை பிடிச்சு வாங்கிறது இன்னொரு காசு, ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு சனமும் ஆளுக்கு ஒரு சட்டம். யார்தான் உண்மையாய், நேர்மையாய் நடக்கிறான் இங்க?... நல்லதுகள் கண்ணில படாமல் இருக்கிதுகள் மிருகக் குணம் உள்ளதுகள் தான் அவாப்பட்டு அலையுதுகள். பணம் என்டால் பிணமும் உயிர்க்கும் என்டதை இங்கதான் நான் பார்த்தன்... எல்லாம் கதைத்து தான் இடம் எடுத்தனான். ஆனால் மெயின்டன்ஸ்க்கு முந்நூறு ரூபா, கோலத்துக்கு முந்நூறு ரூபா என்று சொல்ல இல்லை. நீங்கள் வெளிநாட்டில இருந்து வந்தது என்டு தான் இது... இப்ப புது நாடகம்..."

தமிழனாய்ப் பிறந்தவனுக்கு அதுவும் ஈழத் தமிழனுக்கு என்டு ஒரு இடமும் இல்லை. நிம்மதியுமில்லை விடுதலையுமில்லை.... அதுமட்டும் எழுதப்படாத விதியாகிட்டு ம்... என்ன செய்வம்...

"அக்கா..."

"யார்?... ம்... என்ன வேணும்?"

"தண்ணீ கான் காசு..."

"மாமி அஞ்சு கானுக்கு சொல்லிட்டு 125/- குடுத்து விடுங்க"

"இப்ப ஒரு போத்தல் 30/- ரூபா அக்கா..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெற்றோல் விலை கூடிட்டு!"

"அதை பிறகு வந்து கதை இதை பிடி" என்று அறை கதவை சாத்தினாள் சிவகாமி.

மீண்டும் மணி ஒலித்தது,

"கேபிள் TVக்கு ஐந்நூறு காசு..."

"என்ன? TVயா?..." எங்க?..."

"உங்க TVக்கு தான்..."

"என்ன பைத்தியமா உனக்கு?

TV இல்லாத ரூமுக்க... ஆர் கேபிள் கேட்டது?..."

எங்க என்டு அலையிறானுகள் பார்... கொஞ்சமும் நிக்காமல் கதவை அடித்துச் சாத்தினாள் சிவகாமி. நிமிடம் நகர மீண்டும் கதவு தட்டப்பட்டது...

"அம்மா!... அப்பிள் 100/-, திராட்சை 180/-..."

"யார் உன்னட்ட சொல்லி விட்டது?"

"இல்...லை... கொண்ணந்தன்... இங்க பார்... நல்ல பழம் தான்." பழத்தை காட்டினாள்...

"நல்லதா? அழுகிப் போய் நாறுது கொண்டு போ"...

"உடம்பில ஒரு துணி இல்லை பிள்ளைக்கு, மூக்கு வேற வடியிது... ஐயோ... வேண்டாம் போ"... நீ இடத்தை விட்டு முதல்ல எழும்பு...

ஜூஸ் அடிக்க இப்பிடி தானம்மா கேப்பாங்க..."

-எங்களுக்கு வேண்டாம். முறைத்தாள் சிவகாமி

"ஓ!... நீங்க சிலோன் காரரா? புதுசா?... நிறைய பணம் இருக்குமே!..."

நீ என்ன தந்தா வைச்சிருக்கிறாய்? எழும்பி போ... காலங்காத்தால என்ன முழிவழமோ?...

"அம்மா!... பழைய சாதம் இருந்தா குடன்... போயிடுறன்."

"அம்மா!... குப்பைவண்டி!... குப்பை... பத்து, இருபது குடு தாயி..."

"எதுக்கு? எங்களிட்ட குப்பை இல்லை... நாங்க போடுற இடத்தில போட்டிடுவம்..."

"இனிமே நீ இங்க வைச்சிடு... வந்து எடுப்பம். 5/-, 10/- குடுத்தா போதும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பனே!... பிரபாகர்... இன்னும் ஒரு கிழமை கூட இருந்தால் எனக்கு கார்ட் அட்டாக் வந்திடும் போல... இதைவிட முள்ளிவாய்க்கால் பரவாயில்லை போல... தலையைப் பிய்த்தபடி கட்டிலில் அமர்ந்தாள் சிவகாமி.

ஹா... ஹ... ஹ... என்னம்மா உங்களின்ட பகிடி?...

பின்ன என்னடா? சீ... பழக்காரியையும், குப்பைக் காரனையும் முதல் அனுப்பி விடு... ம்... ம்...

"அம்மா!... யாரு இருக்கு?" கதவு தட்டப்பட்டது.

"யார்? என்ன வேணும்?"

காக்கி உடுப்புடன் கழுத்தில் விசில் கொழுவியவனாய் நின்றான். "நான் காவல் காக்கும்... விசில் ஊதும்... 5/-, 10/- குடு..."

என்ன பிரபாகர் இது? சலித்தாள் சிவகாமி.

"ஓ... அது... "குறுக்காஸ் மாமி." அவங்கள் இரவு முழுதும் விசில் ஊதிக் கொண்டு காவல் காப்பாங்களாம். வட இந்தியன். தமிழ் தெரியாது.... கேட்டால் காசு குடுக்க வேணும்..."

எனக்கு இதெல்லாம் சரிவராது தம்பி... நேற்றும் இன்டைக்கும் என்டால் பரவாயில்லை. வந்த நாளில இருந்து ஆளுக்கு ஆள்... இது என்ன நடக்கிது? தம்பி... நீ என்னத்தையும் செய். ரிக்கட்டை போடு நான் போய் அப்பாவோட இருந்திடுறன்.

சுயநலமாய் கதைக்காதீங்கம்மா... அவங்களுக்கும் எத்தினை பிரச்சனை இருக்கும்? எல்லாம் காசு தான்...

ம்... கடவுளே... பெருமூச்சு விட்டாள் சிவகாமி.

ட்றிங்... ட்றிங்...

"அம்மா கண்ணாடியில யார் என்டு பாத்திட்டு கதவை திறவுங்கோ... எடுத்த உடனே திறந்து ரென்சன் ஆக வேணாம்...

டேய் போலீசுடா...

"போலீஸா?... வாறன்... வாறன்... ஆ.... வாங்க சேர்... இருங்க..."

யார் கண்ணம்மா?

"யார் தெரியேலை சேர்... நாங்க வரும் போது அப்பிடி யாருமிருந்ததாக தெரியேலை...."

இங்க எத்தினை பேர்?

"நாங்கள் மூன்று பேரும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்... எந்த ஊர் சிலோனில?

"நந்தினி முள்ளிவாய்க்கால் நான் லண்டன்..."

ஒகே... ம்... சாயந்தரம் ஸ்ரேசன் வரணும்?...

"ஸ்ரேசனா? ஏன் சேர்? நான் இருபது வருசமாய் லண்டனில இருக்கிறன்... சேர்.... இப்பதான் இங்க வந்தன்..."

"இந்தாங்கோ கூல்றிங் குடியுங்கோ..." கதிரையில் அமர்ந்து கொண்டார் போலீஸ். நந்தினியை கண் சாடையிட்டு அழைத்தவன் போலீஸ் வந்ததன் அர்த்தத்தை புரிந்து கொண்டு அவளிடம் இருந்து ஆயிரம் ரூபா நோட்டை வாங்கி போலீஸின் கையினுள் திணித்தான்.

"ஆ... சாயந்தரம் நான் சில வேளை டியூட்டி மாறிடுவன். அப்புறம் நான் கூப்பிடுறன்." பிரபாகரின் தோள்களை தட்டிக் கொடுத்து விடை பெற்றான்.

இரண்டு நாட்களும் பட்ட அவஸ்தை மட்டுமல்ல வந்த நாளில் இருந்து பட்டுக் கொண்டிருக்கும் அவஸ்தைக்கு அளவு இல்லை... போதும் போதும் என்றாகிப் போனது சிவகாமிக்கு.

ஒவ்வொரு நாட்களின் நகர்வுகளும் நரகத்தையே அனுபவித்த நந்தினி நரகத்தில் இருந்து விடுதலை பெறவே துடித்தாள்... நேற்றுப் போல் இருக்கு.... மொத்தமாக மூன்று வருடத்தில் எத்தனை நகர்வுகள்...

பிரபாகர்...

என்ன?....

அவனை பரிதாபமாய் பார்க்க மட்டுமே முடிந்தது நந்தினியால்.

"என்னை.... கடைசி ஏஜன்சி ஊடாகவாவது கூப்பிடுங்களன்... என்ர பிள்ளை வளரப் போகிது... அதுக்கு முதல் நான் போனால் தான் பிள்ளையை எடுக்கலாம் பிரபாகர்... இல்லாட்டி என்ர பிள்ளை நிரந்தரமாய் அநாதையாகிடும்..." சொத்து, சுகம், வாழ்க்கை எல்லாம் அழிஞ்சு வீடு விடாய், நாடு விட்டும் வீட்டுக்கு படி ஏறிக் களைச்சுப் போனான். நீங்கள் ஸ்பென்ஸர் பண்ண ஏலாட்டி விடுங்க... ஏஜன்சியால வாறன்... சரி வந்ததும் சிறிலங்கா போய் பிள்ளையையும் கூட்டிக் கொண்டு ஏஜன்சியால வாறது தான் இனி வழி பிரபாகர்...

அவள் கனவுகளுக்கும் மனக் காயங்களுக்கும் ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தான் பிரபாகர். அவனின் தெய்வீக மனதில் வாழ குடுத்து வைத்த மகிழ்வில்; அவன் நெஞ்சில் முகம் புதைத்து அழுது களைத்துப் போனது அவள் மனம்... முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் பின்னான காயங்கள் கொண்ட கடந்த கால வாழ்வின் பாதிப்புகளில் இருந்து அவளை மீட்க போராடிக் கொண்டிருந்தான் பிரபாகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருவம்

அமைதியான இந்த
அந்திப் பொழுதை
அனுபவிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறேன்
நீலமாய் கருக் குடித்த மேகத்தை
எதிர்வீட்டு மொட்டைமாடியில்
ஏறிநின்ற தென்னைமரம்
கீற்றசைத்து
வளைக்கப் பார்க்குதே
ஓடிப்பறந்த காக்கை ரண்டு
இறக்கை விரித்துச் சூல்தின்ன
விதைந்த கருக்கள்
பன்னீர்க் குடமுடைக்க
மீண்டும் பருவமெய்த நிலம் நாணி
நீலப்பாய் விரிக்குதே
பால் வடிய விடிய.

## என்ன பதில்



ஒரு குயில்
கூவி அழைக்கிறதே
சிட்டுக்குருவி
தலைகால் புரியாமல் என்
தலைமேல் பறக்குதே
என்ன நடக்கிறதிங்கே
என் மயிர்க் காம்புகள்
மெல்லென விரிந்து
பறக்கப் பாதை தேடிநிற்க
மாலைக் கருக்கலில்
மயங்கித் தயங்கிய
தென்றல் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னம் தொட்டு விசையமைக்க
குயில் கூடவந்து
நாணி நின்றது
இனிமைக் குரலில்
இனம் மறந்து வந்தேன்
ஒரு தரம் கொஞ்சு
கெஞ்சி அழைக்க
தடுமாறிப் போகிறேன்
தலையசைத்துத் தவமாய்
முகவளை சிக்கிமுக்கி
தாகம் தீராது தவிக்கும்
தென்றலுக்கு
என்ன பதில் சொல்ல?

## கைரேகை படிந்த

காதல் இனி
இல்லை என்றாய்
கழன்று கொட்டும்
உணர்வுகளையும்
சதைப் பேச்சுக்களையும்
எதில் இட்டு நிரப்ப
ஆசை அறுபதிலும்
மோகம் முப்பதிலும்
முடிந்திருக்கலாம் இனி
வலியப் போகவிருக்கும் வாழ்நாட்களில்
தொண்ணூற்றில் எத்தனை துண்டங்களாய்
பிண்டங்களுக்குப் பிரிக்க
பிண்டம் கழிக்கவாவது
உன் கைரேகை படிந்த
பருக்கைகளை
கடனாகவேனும் அனுப்பிவை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாறிவிடுவாய்

எல்லாம் முடிந்துவிட்டது
மனசு மந்திரமாய்
மாறிமாறிக் குழறியபடி
தீர்ந்தபின் வெளிறியநிறமாய்
நின்றுலாவி யென்
எண்ண அன்பின் வெளிப்பாடுகள்
சுத்தமற்ற தென புகழ
தெய்வீகமன்ன செயல்
உன்னுடையதாய் உணர்த்துகிறாய்
ஆமோதிக்கப்படட்டும்
பிறிதொரு நேரத்தில்
கேவலம் பேசினால்
நாறிவிடுவய் நவின்றாய்
கைபட்ட பெண்மை
நாற்றம் தான்
சற்றுமுன்னுனக்குத் தெரியாதா
தெரிந்ததெனக்கு கொண்ட
தீராத பிரியம் தான்
தீர்து போன சுவடுகளைக்
கட்டியெழுப்புகிறாய்
பிறதொரு நாற்றமிசை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறைந்த கதை

ரகஸ்ய தூரத்
தொலைவுகளில் துடிப்புணர்த்த
நாட்கள்
இடையிட்டுக் கழிந்துகொண்டிருக்கிறது
கபாலநடுவில்
நினைவுகள் பிளந்தெழுகிறதே
தொலைய விட்டாயா
தொலைவுகளையும் நனைத்துச்செல்லும்
கண்ணீர் ஒரு கதை கேட்டது
இறுதியாயும்
எனைப்போக்கி விட்டாயா
அன்பு நிலை மாற்றி
நரம்புகளில் ஓலம் உருக்க
இறுக்கிக் தொண்டை கவ்வ
புகழும் எம்பு மச்சை யூடு
ஒரு துளி காமக்கனவுகட்காய்
அளைந்தளைந்து விற்றாயா
வார்த்தைகளை
எத்தனை நிமிச
நாழிகை களித்தாய்
துளி ஒரு குருதிகேள்
விசமாய்
உறைந்த தரம் சொல்லும்
உயிர்
இன்னும் சில ரகஸ்ய இடைவெளிகள்
இரஞ்சியபடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்திக்கடல் தந்த நம்பிக்கை

ரெங்கை ஆழியான்

முல்லைத்தீவு கடற்ரைக்குச் சமாந்தரமாக வடக்குத் தெற்காக நந்திக்கடல் அமைந்துள்ளது. இந்துசமுத்திரத்தின் உவர் நீர் ஓர் ஒடுங்கிய வாயின் ஊடாக நந்திக்கடலை நிரப்பியது. அது ஒரு கடனிரேரி. அக்கடனீரேரிக்குக் கிழக்குப்பகுதி இலங்கை இராணுவத்திடமும் மேற்குப்பகுதி விடுதலைப் புலிகளிடமும் இருந்தன. இடைப்பட்ட பகுதியில் இழுத்துவிடப்பட்ட இருதலைக் கொள்ளி எறும்புகளாக இடம்பெயர்ந்த அகதிகள். மூன்று இலட்சம் பேர் அகப்பட்டுக் கொண்டனர். வானத்தில் குண்டு வீச்சு விமானங்கள் படையெடுக்கும் போது சிதறிய நெல்லிக்கனிகளாக இந்த அகதி. மக்கள் அங்குமிங்கும் ஓடிப் பதறுவார்கள். ஒவ்வொரு தடவையும் உயிரிழந்தவர்களும் காயமடைந்தவர்களும் தீயில் கருகிய குளவிகளாக மண்ணில பொலபொலவென நூற்றுக்கணக்கில் சரிந்தனர்.

நந்திக்கடல் நீரில் கால்களை நனைத்தவாறு அம்பலவாணர் சிந்தனை வயப்பட்டவராக அமர்ந்திருந்தார். அவர் அருகில் மூவர் நின்றிருந்தனர். இரண்டு பெண்களும் ஓராணும்.

'அப்பு நாங்கள் மூன்று பேர் மட்டும் உயிரோடு இனி இருப்பதில் புண்ணியமில் லை. எல்லாரையும் இந்தப் பயணத்தில இழந்திட்டம். இனி இருந்தென்ன, நந்திக்கடலைக் கடந்து அவர்களிடம் போய் அடைக்கலம் புகுந்தென்ன? இரண்டும் ஒன்று தான்" என்றான் அவரின் ஒரு மருமகன் முறையான மதி. நான்கு நாட்களுக்கு முதல் மத்தியானம் கஞ்சி குடித்துக் கொண்டிருக்கும் போது இராணுவப் பக்கமிருந்து வானத்தைக் கிழித்துக் கொண்டு வந்த ஷெல் இவர்கள் மத்தியில் விழுந்தது, நால் வர் காணாமல் போயினர். தனது மனைவியையும் ஒரே மகனையும் ஷெல் வீச்சுக்கு ஒருங்கே இரை கொடுத்தவன். அவனை அம்பலவாணர் ஏறிட்டுப்பார்த்தார்.

'மகன் சொல்லுறது சரி தான். சுங்கன்குழியிலிருந்து எட்டுக் குடும்பங்களில் ஐம்பத்தாறு பேர் அகதிகளாக ஓடி வந்தம். இண்டைக்கு நாங்க மூவர் தான் எஞ்சியிருக்கிறம். இந்தப் பாழ்பட்ட யுத்தம் தந்த பரிசு. எதுக்கும் சோர்ந்து போகக் கூடாதடா. எல்லாம் மனிசருக்குத் தான் தலையில் சுமக்க வேணும். மலை சரிஞ்சாலும் நிலை சரியக்கூடாது... பாப்பம் இன்னும் எவ்வளவு துன்பம் வருகுது எண்டு..."

நந்திக்கடல் அமைதியாக இருந்தது, கரையை அமைதியாக நீர் தழுவியது. அம்பலவாணர் சிந்தனையில் ஆழ்ந்தார். ஒரு மாதத்துக்கு முன் ஐம்பத்தாறு பேர் அவர் தலைமையில் சுங்கன்குழிக்கிராமத்திலிருந்து குண்டு வீச்சுக்குப் பயந்து பூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நகரிப் பக்கமாகப் புறப்பட்டார்கள். அவ்வளவு பேரும் அவரது எட்டு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நான்கு குடும்பங்கள் அவர் பிள்ளைகள் பேரமக்கள். மற்றவர்கள் உறவினர்கள்.

மாந்தையில் முண்டைப்பிட்டிக்கும் வெள்ளாங்குளத்துக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் பாலியாற்றங்கரையில் அமைந்திருந்த அமைதியும் அழகும் நிறைந்த சிறியதொரு கிராமம் சுங்கன்குழியாகும். அக்கிராமத்தில் அவரும் அவர் உறவினர்களும் தான் மொத்தம் எட்டுக்குடும்பங்கள். அவர்களுக்கு அம்பலவாணர் தான் சகலதும். தலைவரும் அவர்தான். வழிகாட்டியும் அவர் தான். ஒரு மாத்திற்கு முன் அக்கிராமத்தின் அமைதி அழிந்தது. மன்னாரிலிருந்து எறிகணைகள் அக்கிராமத்தில் வந்து விழத்தொடங்கின. முதல் குண்டு வயல்வெளியில் வந்து விழுந்து வெடித்தபோது மேய்ந்து கொண்டிருந்த மாடு ஒன்று அதற்குப் பலியானது. அதற்குப் பரவாய் பண்ணாத அம்பலவாணர் மன்னார்ப் பக்கமிருந்து தொடர்ந்து வந்த ஷெல்வீச்சுகளுக்கும் மன்னாரிலிருந்த தரைமார்க்கமாக இராணுவம் முழங்கால் நோக்கிப்புறப்பட்டுவிட்டதாகவும் இடைப்பட்ட கிராமமக்கள் பூநகரிப்பக்கமாக ஓடித்தப்பு மாறும் செய்தி தெரிந்ததும் கலங்கிப் போனார். அவர் குடும்பத்தினர் அவரைச் சூழ்ந்து கொண்டனர். 'என்ன செய்வது அப்பு' என்று கேட்டனர்.

'குஞ்சு குருமானைக் காப்பாற்ற வேணும் சாப்பாட்டுக்குத் தேவையான சாமானைக் காவிக் கொண்டு புறப்படுங்கோ... வேறை வழியில்லை. பூநகரிப் பக்கம் போய் சிலநாட்கள் தங்குவம். வேற வழியில்லை.. அங்க தெரிஞ்சவை இருக்கினம், நம்மடை கந்தப்பு இருக்கிறான்..."

ஒருநாள் மழைபொழிந்து ஓய்ந்த மாலைப் பொழுதில் சுங்கன் குழிக் கிராமத்தை விட்டுப் புறப்பட்டனர். ஆடு மாடுகளைப் பட்டியிலிருந்து அவிழ்த்துத் துரத்திவிட்டு குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டனர். வளர்ப்பு நாய்கள் மூன்று அவர்களைப்பின் தொடர்ந்தன. அம்பலவாணர் எவ்வளவோ துரத்திப் பார்த்தார், கிராமப் பக்கமாகப் போவதும் வருவதுமாக இருந்தன, விட்டுவிட்டார். மன்னார்ப் பக்கமிருந்து ஏவுகணைகள் தொடர்ந்து கிராமப்புறமாக வரத் தொடங்கின, நல்ல வேளை, புறப்பட்டு விட்டார்கள். இல்லாவிடில் கிராமத்தின் மத்தியில் யார் தலைமீதோ விழுந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் கடைசி மகள் மகேஸ்வரி நிறைமாதக் கர்ப்பிணி, சாமான்களைத் தூக்கிக் கொண்டு அவர்களுடன் நடப்பது கஷ்டமாக இருந்தது. அவள் கணவன் ராகவன் சுமையை வாங்கிக் கொண்டான். அவர்கள் பூநகரிப் பிரதான வீதியில் ஏறியபோது அவர்களைப்போல பலர் வெளியேறி வருவது தெரிந்தது. வெள்ளாங் குளத்திலிருந்து பிரதான வீதி கடர்ந்து காணப்பட்டது, இருபக்கங்களும் ஒரே காடுகள். கட்டை மரங்கள், பற்றைகள் சூழ வளர்ந்திருந்தன.

சுண்ணாவில் கிராம முன்னேற்றச் சங்கத்துவெளியில் மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது. அம்பலவாணரும் அவர் கூட்டத்தினரும் அன்றிரவு அங்கு தங்குவதென முடிவு செய்தார்கள். கால்கள் சோர்ந்தன, கெஞ்சின, சில இளைஞர்கள் மண்டபத்தின் முன் அடுப்பு வைத்துக் கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தார்கள். அன்றிரவு குடித்த கஞ்சி அமிர்தமாகப்பட்டது. விடியல் வேளையில் இலங்கை இராணுவம் வெள்ளாங் குளத்துக்கு வந்துவிட்ட செய்தி பரவியது.

'பொடியல் வரவிட்டிட்டாங்களோ? வலு இலேசில் வந்திட்டாங்கள்," என்று அம்பலவாணர் கூறிக்கொண்டார். ஏனோ ஏமாற்றமாக இருந்தது, இராணுவம் முன்னேறும் என அவர் நினைக்கவில்லை.

நினைக்கும்போதே மல்ரிபரல் முழங்கத்தொடங்கியது, மல்ரி பரல்களை முன்னால் செலுத்திவிட்டு இடங்களைச் சுத்திகரித்த பின்னர் இராணுவம் முன்னேறுகிறது என அம்பலவாணர் எண்ணமிட்டார். மல்ரிபரல்களின் குண்டுகள் சுண்ணாவில் சந்தியில் விழத்தொடங்கின, மக்கள் தறிகெட்டு நாலாபக்கங்களிலும் ஓடத்தொடங்கினர். அவர்கள் பலர் குண்டடிபட்டு நிலத்தில் சாய்ந்தனர். பற்றாக் குறைக்கு வானத்தில் பொம்பர்கள் இரண்டு இரைச்சலுடன் தோன்றின. கலவரங்கள் ஓயச் சில நிமிசங்கள் சென்றன. மல்ரிபரல் ஓய்ந்து, குண்டு வீச்சு விமானங்கள் அகன்ற பின்னர் தான் அம்பலவாணருடன் வந்திருந்த பக்கத்து வீட்டு சின்னப்பரும் மகளும் வேறு நால்வரும் ஏற்கனவே அங்கு தங்கியிருந்த இருபதுக்கு மேற்பட்டோர் பலியானமை தெரிந்தது. அவரை நம்பிவந்த நக்கினம் ஐம்பத்தாறு பேரில் அறுவர் இருக்கினம் அவர்களது எஞ்சிய சடலப் பாகங்களை கூட்டி அள்ளி நிலத்தில் புதைத்தனர்.

சுண்ணாவில் கிராம மக்கள் தம் ஊரைவிட்டுப் புறப்பட்டுவிட்டனர். இனி அங்கிருப்பதில் பாதுகாப்பில்லை, அவர்களோடு சனம் அள்ளுப்பட்டது. அவர்களை முந்திக் கொண்டு இராணுவம் எறிகணைகளை வீசியது. பாதையெங்கும் சாரைசாரையாக அகதிகள் செல்கிறார்கள். பசிக்காக அகப்பட்ட காட்டுப் பழங்களைத் தின்று மயங்கிச்சோரும் பிள்ளைகள், மரத்தடியில் நோய்வாய்ப்பட்டு மருந்தின்றி முடங்கிக் கிடக்கும் வயோதிபர்கள், நடக்க முடியாத தந்தையைக் கரங்களில் ஏந்தி நடக்கும் மகன், குண்டுகள் சிதறிய பிரதேசத்தில் உதிர்ந்து கிடக்கும் மனித சடலங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவியல் குவியலாகக் கிடக்கும் மனித உடல்கள், மனித இறைச்சியை ருசி பாக்கும் பட்சிகள்... செத்து விழுந்து கிடக்கும் மாடுகள், மரக்கிளைகளில் தொங்கும் செத்த குரங்குகளின் சடலங்கள், சேலைகளை மறைப்பாக்கி வாழும் குடும்பம் ஒன்று... என அவரால் தான் தரிசித்தவற்றைத் தொடர்ந்து பார்க்க முடியவில்லை.

நடந்தார்கள். செம்மன்குன்றைக் கடந்தபோது மகேஸ்வரி குண்டொன்றை அம்பலவாணர் காதுகளில் போட்டாள். "பனையால் விழுந்தனை மாடேறி மிதித்த" மாதிரி இருந்தது, அவள் கணவன் ராகவன் கலங்கிப்போனான்.

'அப்பு வயிறு நோவுது போல இருக்குதனை... என்ன செய்யிறது...?"

"இந்த நடுக்காட்டில என்ன செய்யிறது?" மகேஸ்வரியால் மேற்கொண்டு நடக்க முடியவில்லை. அப்படியே பொத்தென நிலத்தில் இருந்துவிட்டாள்.

'ஆஸ்பத்திரி கிட்டடியில் இருக்கா?" என்று கேட்டான் ராகவன். அம்பலவாணர் கலங்கிப் போனார். என்ன செய்வது? அம்பலவாணரின் மூத்த பெண்பிள்ளைகள் உதவிக்கு ஓடிவந்தார்கள். செம்பன்குன்று காட்டோரம் சேலைகளால் மறைப்பு ஒன்று அமைக்கப்பட்டது. அவர்களோடு வந்த ஒரு மூதாட்டி உதவிக்கு வந்தாள்.

'பயப்பட வேண்டாம். நானிருக்கிறன்," நடுக்காட்டில் ஆண் மகவொன்றை மகேஸ்வரி பெற்றெடுத்தாள். அன்று மத்தியானம் அவ்விடத்தில் வைத்தே அடுப்பு மூட்டினார்கள். தூரத்தில் குண்டுச்சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

'நான் நடப்பன் அப்பு... பயப்பட வேண்டாம்" என்றாள் மகேஸ்வரி துணிச்சலுடன்.

'பூநரியில ஆஸ்பத்திரி இருக்கும், பார்ப்பம்..." பூநகரிச் சந்தை அகதிகளால் நிரம்பி வழிந்தது. அங்கும் ஆஸ்பத்திரி ஒன்றும் இருக்கவில்லை. பிள்ளை பெற்ற தாயைப் பராமரிக்க முடியவில்லை என அம்பலவாணர் கவலைப்பட்டார்.

அன்றிரவு அவர்கள் இருந்தவிடத்துக்கு போராளிகள் சிலர் வந்தார்கள். அவர்களில் அம்பலவாணரின் மூத்த பேரன் சசிகரன் இருந்தான். அவரின் மூத்த மகளின் மூத்தமகன். படிக்கிற காலத்திலேயே இயக்கத்தில சேர்ந்து சண்டைக்குச் சென்று விட்டான். மகனைக் கண்டதும் தாய்க்கு மகிழ்ச்சி. அம்பலவாணர் பேரனை அன்போடு பார்த்தார்.

'இப்படி இராணுவத்தை வர விடுவியள் எண்டு நினைக்கவில்லை. வீரமரணமடைந்தவர்களின் ஆத்மா சாந்தியடையாது... தமிழீழக் கனவுகளோட செத்துப்போனார்கள், இப்படிப் பின்வாங்கிவிட்டீர்களே?" என்று தன் கவலையை வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உங்களுக்கு எங்களின்ர இராஜதந்திரம் விளங்காது, நீங்கள் எல்லாரும் முல்லை த்தீவுக்குப் போங்கோ... அங்க பாருங்கோ... எங்கட சண்டைய... துண்டைக்காணோம் துணியக்காணோம் எண்டு இலங்கை இராணுவம் ஓடப் போகுது..." என்றான் பேரன்.

இராணுவம் ஆனையிறவையும் கைப்பற்றிவிட்ட செய்தி வந்தது. 'இப்படியே நேர பரந்தன் போய் ஒட்டிசுட்டான் போங்கோ..." என்றான் அவன்.

அவர்கள் அதிகாலையே புறப்பட்டு பரந்தன் சந்தியை அடைந்தார்கள். அந்தப் பெருந்துயரம் அச்சந்தியில் நடந்தது. அப்போது தான் பரந்தன் சந்தியில் கால்களைப் பதித்தார்கள். திடீரெனத் தென் வானத்தில் இரண்டு கிபீர் குண்டு வீச்சு விமானங்கள் தோன்றின. குண்டுகளை அவர்களிடையே கொத்துக்கொத்தாக வீசின. கண்மூடிக் கண் திறப்பதற்குள் சந்தியில் சடலங்கள் குவியலாக நிறைந்தன. அம்பலவாணர் பார்த்தபோது அவர்களிடையே மகேஸ்வரியும் கைக்குழந்தையும் சரிந்து கிடந்தனர். அவர்களுடன் சந்தியைக் கடந்த சுங்கன்குழிக்கிராமத்தவர்கள் பலர் மாண்டு கிடந்தனர், அம்பலவாணர் முகத்தில் அறைந்து கொண்டு அலறினார்.

ஏ9 வீதியில் வடக்கே ஆனையிறவுப்பக்கமாகத் துப்பாக்கிக் குண்டுச் சத்தங்கள் எழுந்தன. அவ்விடத்தில் சடலக் குவியலை அப்படியே விட்டு விட்டு இறந்தவர் இறவாதவர் யாரென்று தெரிவதற்கு முன்னரே சனக்கூட்டம் முல்லைத்தீவுப் பக்கமாக நகர ஆரம்பித்தது. அதே வேளை அவ் வீதியின் தெற்கிலிருந்தும் இராணுவம் சந்தியை நெருங்கிவருவது தெரிந்தது.

முரசுமோட்டைச் சந்திவரை அவர்கள் ஓட்டமும் நடையுமாக நகர்ந்தார்கள். அச்சந்தியில் ஓய்வெடுக்கவும் அச்சனத்தால் முடியவில்லை. கிளிநொச்சியைக் கைப்பற்றிய இராணுவம் வட்டக்கச்சி வழியாக முன்னேறி வருவதாகத் தகவல் தெரிந்தது. அதனால் அவ்விடத்திலும் நிற்காது நடந்தனர். புதுக்குடியிருப்பை அடையும் வரை நடை ஓயவில்லை. அவ்விடத்தில் பொத்பொத்தென அமர்ந்து கொண்டனர். சிலர், சிலர் அப்படியே நிலத்தில் சரிந்து படுத்துவிட்டனர். அம்பலவாணரும் அமர்ந்து கொண்டார். அவர் குடும்பத்தில் அவருடன் வந்தவர்களில் இருபத்திரண்டு பேர் அநியாயமாகப் பலியாகிவிட்டனர் எஞ்சியோர் சிலரே.

புதுக்குடியிருப்பிலிருந்து முல்லைத்தீவு நோக்கி நகருமாறு அறிவுறுத்தப் பட்டது. அவர்கள் தொடர்ந்து நடந்தனர். இரவிரவாக நடந்து நந்திக்கடலின் கரை கெப்பப்புலவு என்ற இடத்தில் வந்தடைந்தனர். இராணுவத்தின் ஓயாத குண்டு வீச்சுக்கள் தொடர்ந்தன. நந்திக்கடலின் கிழக்கே இருந்து பாய்ந்தன. வானத்தில் வட்டமிட்ட குண்டு வீச்சு விமானங்கள் தொடர்ந்து குண்டுகளைப் பொழிந்தன. இலட்சக் கணக்கான மக்களிடையே குண்டுகள் விழுந்தன. சிதறி ஓடிய மக்கள் கொத்துக்கொத்தாகப் பலியாகிச் சரிந்தனர். அகதி மக்களிடையே போராளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது குண்டுகளைப் பொருத்தி ஏவினர். குண்டுகள் ஏவப்பட்ட திசையில் பதிலடி நிகழ்ந்தது. தப்பி ஓட முடியாத மக்கள் பலியாக நேர்ந்தது. அம்பலவாணர் குடும்பத்தில் அப்போது அவருடன் நால்வரே எஞ்சியுள்ளனர்.

நந்திக்கடல் கரையில் அமர்ந்திருந்த அம்பலவாணர் எழுந்திருந்தார்.

'இந்த நந்திக்கடலைக்கடப்பம். அங்காலபோய் அடைக்கலம் புகுவம். அங்கிருந்து வவுனியா அகதி முகாமிற்குப் போவம்."

'நான்கு பேர் தான் எஞ்சியிருக்கிறம்.'

நான்கு பேர்... நால்வராவது சுண்டுக்குழி கிராமத்திற்குப் போவம். வாழ்க்கய ஆரம்பிப்பம்.'

கால்களை நந்திக்கடலில் பதித்தனர்.

## விலங்கு சாகும்!

குருதி வடிந்து குலைந்த உடம்பின்
குரலினைக் கேட்டேனே!
பருதி வெடித்துப் பகலும் பொடித்துப்
படுதுயர் பார்த்தேனே!
அழுது புலம்பி அவலம் விளம்பி
அழிந்தது கண்டேனே!
விழுது மடிந்து பொழுது மறைந்து
விழித்திட நின்றேனே!
கண்களைத் தோண்டிக் கழுத்தை அறுத்த
கயவனும் வாழ்ந்தானே!
பெண்களின் மேனி பிளந்து புகுந்தவன்
பேயினும் தாழ்ந்தானே!
மண்ணில் செருக்கால் மடமைக் கணக்கால்
விலங்கென ஆவானே!
விண்ணைத் தொடுமோர் வெறுப்பினை ஏற்பவன்
வீதியில் சாவானே!

**முத்தமிழ்க் கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் திருமணம்!

இலங்கைத் தமிழ்க் கலாச்சார முறையில்
தமிழகத்தின் சென்னை மாநகரில் உங்களின் திருமணம்
மற்றும் சுபநிகழ்ச்சிகளை சிறந்த முறையில் நிறைவேற்றிட
உங்களின் தேவைகள் எங்களின் சேவைகளாய்
ஓரிடத்திலேயே...!

## சிவகுகன் திருநாள் சேவை

## SHIVAKUGAN FESTIVE SERVICE

*(இது அன்பு இதயங்களின் சங்கமம்)*





உங்கள் திருநாள்

- திருமண விழா
- பூப்புனித நீராட்டு விழா
- பிறந்தநாள் விழா
- அரங்கேற்றம்







**OTHER SERVICES**

❖ DIGITAL VIDEO COVERAGE ❖ PHOTOGRAPHY
❖ TOURISM AND PILGRIMAGE ❖ REAL ESTATE ❖ GUEST HOUSE
❖ AD FILMS ❖ HIGH EDUCATION ❖ PUBLICATION
❖ CARGO AND COURIER

---

*K.N. KAMALAHARAN (KUGAN)*
*1069, HILLS MODELLING STUDIO (ANNEXE)*
*MUNUSAMY SALAI, KK NAGAR WEST, CHENNAI 600 078*
*PHONE : +9144 42617175 MOBILE : +91 9381000026*
*E.MAIL : arabi12arabi@yahoo.com*

*"Leave the rest - Enjoy the best"*

**Website : www.sangami.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுங்கப்பட்ட விதைகள்

## தி. திருக்குமரனின் கவிதை நூல் விமர்சனம்

அ. மயூரன். லண்டன்

**த**மிழ் மொழியினதும், தமிழ் இனத்தினத்தினதும் நீண்ட வரலாற்றுத் தொன்மையை தமிழில் எழுந்த இலக்கியங்களே வெளிப்படுத்தி நிற்கின்றன. இன்றைய நவீன வரலாற்று ஆய்வுகளுக்கு முந்திய காலகட்டத்தில் எந்தவொரு இனத்தினுடைய வரலாற்றையும் நோக்கவேண்டுமாயின் அவ்வின மக்களின் இலக்கியப் படைப்புக்களிலிருந்தே வரலாற்றைத் தேடவேண்டியிருக்கும். அந்த வகையில் வேறு எந்த மொழியிலும் இல்லாத அளவிற்கு தமிழில் மொழி இலக்கியங்கள் பெருகிக் கிடப்பதைக் காணமுடிகிறது. இவை படைப்பாளிகளின் உணர்வுகளையும், காலத்தையுமே வெளிப்படுத்தி நிற்கின்றன.


இதனால் தான் என்னவோ இலக்கியம் என்கின்ற போது இலக்கு - இயம் : அதாவது இலக்கைச் சொல்லுதல் என பொருள் படுகிறது.

இலக்கியம் காலத்தைக் காட்டும் கண்ணாடி, ஆகவே ஒரு காலத்தில் எழுந்த இலக்கியங்கள் அக்காலத்தின் சமகால நிகழ்வின் விம்பமாகவே காணமுடியும். தமிழ்மொழியில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுந்த இலக்கியங்களும் சரி இன்றைய சமகால இலக்கியங்களும் சரி அந்தந்த காலச்சூழலை மிகத்தெளிவாக சித்தரித்துக் காட்டுவதை நோக்கமுடிகிறது.

தமிழிலக்கிய வரலாற்றில் சோழர்காலத்தினை பொற்காலம் என்கிறோம். ஏனெனில் அக்காலத்தில் காதல், செல்வம், வீரம் மலிந்துகிடந்தது. அங்கே கொடுப்பாரும் இல்லை கொள்வாருமில்லை. நாம் ஒரு பெரும் பேரரசின் சொந்தக்காரர்கள் என்ற பெருமித உணர்வு மக்கள் மத்தியில் பதிந்து கிடந்தது. இத்தகைய சூழலில் எழுந்த இலக்கியங்களுக்கு சிறந்த கருப்பொருட்கள் கிடைத்தன. ஆகவே சோழர்காலப்படைப்பாளிகள் மிகக் கொடுத்து வைத்தவர்களே. ஆனால் அவர்களுக்குப் பின் ஓராயிரம் ஆண்டுகால இடைவெளிக்கு ஏற்ற கருப்பொருட்கள் தமிழ்ப்படைப்பாளிகளுக்கு கிடைக்காமல் போயிற்றோ... ஆனால் கடந்த கால் நூற்றாண்டு ஈழத்துக் கவிஞர்களுக்கு எந்தப் படைப்பாளிகளுக்கும் கிடைக்காத மிக அருமருந்தன்ன கருப்பொருட்கள், வர்ணிக்க முடியாத மன உணர்வுகள் ஈழத்துக் கவிஞர்களை ஆட்கொண்டதே அந்த உணர்வுகளின் கவிதையிலக்கியம், கடந்த கால தமிழீழ விடுதலைப் போராட்டக் காலச்சூழ்நிலையை மிகத் தத்துருபவமாகத் தனது கவிவரிகளினால் வடித்திருக்கிறார் தி. திருக்குமரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போரும் வாழ்வும் மனித இயங்கியல் விதியை உந்திச் செல்வதாயிற்றே. வரலாற்றை வாழவைப்பதற்கு வகுக்கப்பட்ட வழித்தடத்தைப் பின்பற்றி மனிதம் நகர்ந்து செல்கையில், மனித உணர்வுகளின் வெளிப் பாடுகள் கவிதைகளாக பொங்கிப் பிரவாகித்துப் பாய்வதை இந்த நூலில் காண்கிறேன்.

இக்கவிதைகள்... புதுவையின் சாயலை ஒத்திருப்பதுவும், அவருடைய கவித்துவ ஆளுமையின் வீச்சு இந்தக் கவிஞனை எந்த அளவிற்கு ஆட்கொண்டிருக்கின்றது என்பதும் நூலைப் படிக்கும்போது புலப்படுகின்றது.

படைப்புக்களால் தான் பாதைகள் மீண்டும் திறக்கப்படுகின்றன. படைப்புக்களால் தான் சமுதாய நீரோட்டம் வீச்சம் பெறுகின்றன. படைப்புக்களால் தான் என்னையும் உங்களை யும் இணைத்துக்கொள்ள முடியும் என்ற எண்ணக்கருவையும் எங்கிருந்தாலும் காலத்திற்கேற்ற கருத்துக்களைச் சொல்லிவிட வேண்டும் என்ற துடிப்பும், எழுதத்துடிக்கும் இளைய தலைமுறைக்கு இந்தக் கவிஞர் ஓர் எடுத்துக்காட்டு.

விழுங்கப்பட்ட விதைகள் சுதந்திரவிடியலுக்காக வீறுகொண்ட ஓர் இனத்தை, அகிலமே தன்னுடைய ஆயுத பலத்தினால், பூனையால் உருட்டப்பட்ட சுண்டெலியாக சுருட்டி வாயிலே போட்டு விழுங்கி விட்ட மறுபக்கத்தின் அங்கலாய்ப்பு...

"தன்னுடைய குழந்தைக்கு தான் யார் என்பதை உணர்த்த தவறிவிடும்போது அடுத்த தலைமுறை அடையாளம் தெரியாதவர்களாக ஆக்கப்பட்டுவிடுவார்களே..." என்ற ஆதங்கம் கவிதையில் பட்டுத்தெறிப்பதை படிக்கின்றவர்கள் உணர முடியும்.

சமுதாய மாற்றத்திற்கான வேரூன்றல்களிலே, மண்ணினுடைய நினைவுகளின் அசைவுகளாய்...! உறுதியான தளங்களை வேர்களுக்கூடாக பண்பாட்டு நீரைப் பாய்ச்சிவிட வேண்டும் என்ற கருத்துக்களாய்... அடிமைத்தளைகள் அறுப்பதற்கு இன்னமும் பரந்த வெளிகளைத் தாண்ட வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வைகளாய் விரிந்து செல்கின்றன...

தேங்கிக்கிடந்த நீர்த்தேக்கத்திலிருந்து
புதிய கிளைபரப்பி ஆறொன்று தானாக வழிசமைத்து ஓடுகிறது....
அந்த ஆற்றின் வழிகள் அடர்ந்த புதர்களைத் தாண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து ஓடுவதைக் காணமுடிகிறது
அந்த ஆற்றுக்குப் பாதையமைத்துக் கொடுத்தது யார்?

அதுபோலத்தான் அடியோடு போர்புயலால், வேரோடு சாய்க்கப்பட்டவர் களாய் இருந்தாலும், புதிய பாதையை அமைப்பதற்கு, தற்போது எதையும் இழக்கவும் தயாராக இருக்கவேண்டும் என்ற வழிகாட்டல்களைக் கவிதைகள் சுட்டிக்காட்டுகின்றன....

## வாழ்தலுக்கான ஆசை

இக்கவிதை என் நெஞ்சைத் தொட்டகவிதை. அந்தச் சூழலை நானும் என் கண்முன்னே கண்டுணர்ந்தவன் என்பதனாலென்னவோ என்னை ஆழமாகப் பாதித்தது.

கடந்த கால நூற்றாண்டில் பிறந்து வளர்ந்த ஒவ்வொரு ஈழத்தமிழனும் முன்னேற இருந்த தடைகளைச் சொல்ல.....

"வளர்தலுக்கென எமக்கு வழங்கப்பட்டிருந்த சூழல்
மெல்லிய காற்று மேனியை வருட
ஏகாந்தமாய் இசையை முனுமுனுத்தபடி
கை வீசிச் செல்லும் காலமாய் இருக்கவில்லை...?

அது எத்துணை கடினமான காலவாழ்வு என்பதனை வெளிப்படுத்துகிறது அதே கவிதையில் அடுத்த வரிகள் குழந்தை வளர்ப்பில் பெற்றோர் கவனம் எத்தகையது என்பதை

"கிரந்தி எண்ணை சளித்தொல்லை என
ஒவ்வொரு பகுப்பாய் பல்கலை வரைக்கும்... சும்மா அவனைக் கொண்டு வர முடிவதில்லை" என்று ஆதங்கப்படுகிறார். பிள்ளை வளர்ப்பில் ஏற்பட்ட இடரை சொல்ல

"ஆட்டாத தலை பார்த்தும் ஆட்கடத்தாத் தெரு பார்த்தும்
கோட்டைச் சமருள்ளும் கொடிய இடப்பெயர்வுக்குள்ளும்
மாட்டாது காப்பாற்றி வளர்த்து"

எனக் கொடிய போரியற் சூழலுக்குள் சமூகவாழ்வு எப்படியிருந்தது என கண்முன்னே படம்பிடித்துக் காட்டுகின்றார் கவிஞர். இறுதியாக இராணுவக் கொலைவலயத்தினுள் வாழ்ந்த மக்களின் உள்ளக்கொதிப்பை

"வாழ்தலுக்கான எங்கள் இத்துணை ஆசையிலும் மேலானதா

கொல்வதற்கான உங்களது தேவை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கேள்விக்குறியோடு முடிக்கின்ற பாங்கு சிறப்பானதே.

## பனிப்புகை மனசுக்குள் படர்கிறது 78

புலம்பெயர் வாழ்வில் அன்னிய கலாச்சாரச்சூழல் எத்தகைய பாதிப்புக்களை ஒவ்வொருவர் மனங்களிலும் ஏற்படுத்தவல்லது என்பதை கவிஞர்

மிகையாய் குளிரலையில்
மேனி பட்டு வெடுவெடுக்க
சதையைக் குறைக்கவென
சாலைப் பக்கமாய் சகித்தபடி மெதுவாக
நதிக்கரை ஓரத்தால் நான் நடந்து கொண்டிருந்தேன்....

அப்பப்பா
வெள்ளைக்காறியோட வெளிக்கிட்டான் என்று சொல்லி
என் உள்ளக்கமலத்தாள் ஒப்பாரி வைக்க முன்னம்
பனிப்பெண்ணே நீ பனியோடு பனியாகப்
படர்ந்து மறைந்திடடி.... இங்கே

வசிப்பவர்கள் விரசங்களைக்கண்டு, வழிதவறிவிடக்கூடாது என்ற படைப்பாள னுடைய ஏக்கம் இந்தக் கவிதைகளுக்குக் கடிவாளம் பூட்டுகிறது....

முற்றிய காதல் இரசம் தோய்ந்த வார்த்தைகளை வரிகளாக்கி, வாசிப்போர் நெஞ்சுகளை வருடிச்செல்லுகின்ற எண்ணத்தின் உராய்வுகளைக் கவிகளாக்கும் இக்கவிஞனின் கவித்துவம் சிறப்பானதே

விடுதலை என்பது

வலிகள் சுமந்த சிலுவையின் வரலாறு, ஆத்ம தாகங்களின் வீச்சும்... நசிக்கப்பட்டுப் விழிகள் பிதுங்கி, நார் நாராய் தசைகள் தொங்கவிடப்பட்டாலும் வெட்டியெறியப்பட்ட வேரறுந்த கதியால்களாயினும் மீண்டும் முளைவிடும் உணர்வுகளை உள்ளே உணர்த்திக்கொண்டிருப்பதை விழுங்கப்பட்ட விதைகள் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன...

## துயரப்பெருவெளி

வன்னிமண்ணின் ஒரு மூலையில்உலகம் பார்த்தபடி இருக்க நடந்த மிகப்பெரும் மனிதப் பேரவலம். ஆம் முள்ளிவாய்க்கால் மண்ணில் கொலைக்களத்தினுள் நடந்த ஊழித்தாண்டவத்தைத் தன் கவிகளால் வழிப்படுத்தி நெஞ்சமதைக் கனக்கவைக்கும் கவித்தொகுப்பு. வன்னி மக்களின் ஆன்ம ஒலி இங்கே கவிதையாக "காற்றும் உலகச் செவிகளிலே உரத்துப் பாடும் படியாய் எங்கள் அவலக்குரல்களை அள்ளிச் செல்ல வில்லை. வெடியின் அதிர்வில் காற்றுக்கும் வெடித்துச் செவிப்பறை கிழிந்தொழுகி குழந்தை கதறும் அழுகைஒலி வழுக்கிக் காதால் விழுந்ததுவோ" என்றும், "தேவையற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதின் போது தென்னையளவு கிளரும் கடலும், மூசிப் பேசும் வழக்கம் நிறுத்தி மூச்சை நிறுத்திக் கிடந்ததுஅலை. தன் கையால் சுற்றி எறிந்தால் அந்தக் கரையில் விழும் கல்லெறி தொலைவில் இருக்குமெங்கள் தொப்புள் கொடிகள் எத்தனை கோடியாயினும் குடிகாரன் மனைவிபோல எதுவும் பேசத்திரணியற்று அறைக்குள் அழுதுகொண்டு சுருண்டு படுப்பது போல, கடலும் அவர்களைப் போல தனக்குள் அழுதுகொண்டு கிடந்ததோ அறியேன்" என்றும், இறுதிக்கவியாக

"கொத்தாய் குலையாய் குடும்பமாய் இன்னும்
எத்தனை கொடுத்தும் விடியா மண்ணேஎன்னதான்
கேட்கிறாய் இன்னமும் ஆனால்
இறந்த வீரர்கள் ஆடையைக்கழற்றி
பிறந்த உறுப்பினைப் பார்த்து ரசிக்கிற
அறுந்த கேவலச் சாதியே நீங்களும்

எனும் கவிதையிலே வேதனையைச் சொல்லிப் பிதற்றுவது போல எனக்குள் ஓர் வலி உணரப்படுகிறது...

சுதந்திரத்திற்கான விடுதலைப்
போரிலே வீரர்களும்
விடுதலைத்தாகமுடைய நாட்டுப்பற்றாளர்களும்
இலட்சிய உணர்வு தியாகிகளும்
மண்ணிலே விதையாக வீழ்ந்துதான் போவார்கள்...

அவர்களுடைய சாதனைகளை
அவர்களுடைய அர்ப்பணங்களை
அவர்களுடைய இலட்சியங்களை
தேசப் பற்றுதலை போற்றி
வழிபாடு செய்கின்ற போதுதான்
அந்த இனத்தினுடைய சுதந்திரம் அர்த்தமுள்ளதாகும்.

என்பதை மறந்து விட்டாரா கவிஞர் என எண்ணத் தோன்றுகிறது. இருக்காது என நம்புவோம். இது அவருடைய உள்ளத்து உணர்வின் வெளிப்பாடு அவருடைய மனமும் எண்ணமும் தாங்கிய வலிகளின் துயரம் என்றே நான் கருதுகின்றேன். எமது விடியலுக்கான பதிவுகள், எமது மக்களுடைய அழிவுகள், பெற்றவர்கள், குழந்தைகள் கணவன் மனைவி அழிவுகளும் பிரிவுகளும் ஆட்கொள்ளும்போது கவிஞருடைய மனமும் உருகிவிடுவதை எழுதுகின்றபோது கவிஞர் சலித்துக் கொள்கின்றார்....

"தப்படா இந்தப் பிறப்பு" என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகத்தில் தமிழர் இறைமை முள்ளிவாய்க்காலில் முடிவிழந்த மக்களின் முனகல்கள் எத்தகையது. இந்த முனகல்களின் பின்னால் மூச்சிரைத்து முடங்கிப்போய் முடியும் என எதிர்பார்க்க முடியாதே ஆண்டதமிழினம் மீண்டும் ஆள் முனைவது தவிர்க்க முடியாததொன்றே.

"அடைக்கதவாய் இருந்து அர்ப்பணித்த தேனீக்கள்
விடைபெற்ற நாளிலிருந்து வீட்டிற் கதவில்லை.

வேண்டியவன் வந்துவிட்டும் போகின்றான். தேனீக்கள் கொடுக்கெடுத்து கொத்திக் கலைக்காது என்ற தடித்திமிர் வேடனுக்கு" என்றும் "குழந்தைத் தேனீக்கள் தூங்குகின்றன, அவர் வளர்ந்து தோற்றம் பெற்றவுடன் திறப்பார்..." என நிகழப்போகும் மறுமலர்ச்சியைத் தனது கவிவரிகளால் குறியீடாகக் காட்டுகிறார்.

**இது நடக்கும் என்ற கவிதையிலே,**

காலம் இடைவெளியை நிரப்பாமல் விட்டது கிடையாது. மானிட வாழ்வியல் ஓட்டம் எங்கேனும் தடைப்பட்டு நிற்கமாட்டா. அதன் வழித்தடம் முடிவின்றித் தொடர்ந்து செல்லும், அது எத்தகைய தடைகளையும், உடைத்தெறிந்து முன்னோக்கிச் செல்லும் இந்தக் கால ஓட்டத்தில் மிக அற்புதமான மனிதர்கள் வருவார்கள், போவார்கள். வரலாற்றுடன் சங்கமிப்பார்கள். சிலர் புதிய வரலாற்றைத் தொடக்கி வைப்பர். வரலாறு சிலரை தொடக்கிவைக்கும், இவ் மானிட இயங்கியல் வழித்தடத்தைப் பின்பற்றி ம னித சமூகம் எதிர்கால வாழ்வுக்காக வீறுநடை போடும். இவ் சமூக ஓட்டத்தை தன் கவிவரிகளினால்

"நீண்ட போராட்ட நெடுவழியில்
மண்ணுக்காய் மாண்ட வீரர்கள்
மனவலிமை தமிழினத்தின் ஓர்மத்தைத் தூண்ட
இடைவழியில் ஏற்படும் தடைகளெல்லாம்
சுக்கு நூறாகிக் காற்றோடு போக
வீரம் மிக்கதொரு புதிய படை தோன்றும்
விடுதலைக்கான பாதைகளை
விவேகமுடன் அமைக்கும்....

அன்று தான்
திறந்த வானில் இருந்து பிறந்து வருவதுபோல்
ஒருவன் இறங்கி வருவான் அவன் அடுத்த படை நடத்திச் செல்வான்"

எனத் தன் கவிவரிகளினால் புதிய தேசம் ஒன்றின் பிறப்பினை, அதன் இயக்கத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய கவிவரிகள் இலக்கியப்பார்வையில் பார்ப்பவர்கள் கவிச்சுவை மிகுந்த படைப்பாக பார்ப்பர். சாமானியர்கள் மனதை நெகிழவைக்கும் கவிதை என்பர்.... இலட்சியவாதிகள் இனத்தின் அரசியல் அபிலாசை என்பர். எல்லாவற்றிற்கும் மேலாக பொதுமை வாதிகள் வரலாற்றின் எதிர்வு கூறலென்பர். ஆனால் இக்கவிஞனோ தன் மனஉணர்வுகளையும், தான்பட்ட வலிகளையும், தன்சமூகத்தின் துன்ப துயரங் களையும் அந்தச் சமூகம் எதிர்நோக்கி இருக்கின்ற வாழ்வியல் இடர்பாடுகளையும் இவற்றிற்கான தன் உள்ளார்ந்த தீர்வுகளையும், தன் கவிவரிகளினால் கொட்டித் தீர்த்திருக்கின்றார் என்றே சொல்லலாம். ஆக மொத்தத்தில் அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டிய பொக்கிசமாகும்.

நூல் அறிமுகம்


## முத்ததாண்டவம்



யாழியின் முத்ததாண்டவத்தில் மொத்தம் 74 குறுங்கவிதைகள் இடம் பெற்றிருக்கிறது. இந்நூலில் காதல் காதல் காதல் மட்டுமே. இயற்கையோடு சேர்ந்து செயற்கையில் முத்தாடியிருக்கிறார் யாழி.

தகிதா பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இரண்டாவது கவிதை நூல். 2012ன் செப்டம்பர் மாதத்தில் வெளிவந்திருக்கிறது.

## கண்கள் எழுதிய கவிதையின் கடைசிச் சொட்டு



சாந்தி வவுனியன் எழுதியுள்ள இந்நூலில் தொடுத்துள்ள கவிதைகள் முற்றிலும் வேறுபட்டது. 33 கவிதைகள் இடம்பெற்றிருக்கிறது. மண்பற்றியவை, போர்க்கால நினைவுகள், வன்முறைகள், பிரிவுகள், போருக்குப் பின்னான சீரழிவுகள் போன்றவற்றை ஆக்ரோசமாகக் கூறியிருக்கிறார்.

வடலி வெளியீடாக வெளிவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் பதித்த ஆபிரிக்க இலக்கியம்

## கமரா லேய்-ன் கறுப்புக்குழந்தை, தமிழில் எஸ்.பொ.




உலகில் பல காலம் இருண்ட கண்டமாக இருந்தது இந்த ஆப்ரிக்க கண்டம். வாழ்ந்த மனித இனத்தை ஆப்பிக்கர்களின் வாழ்க்கை வழியாகப் பார்க்க நேர்வது என்பது ஒரு அனுபவமே. நம்மை நாமே ஆராய்ச்சிக் குட்படுத்துவது போல் என்பது என் அனுமானம். கலாசாரம் சார்ந்த மொழி, பின்னணி, என்பது எது? மூன்றாம் உலக நாடுகளின் தற்போதைய அரசியலா, இல்லை பிரான்ஸிலிருந்து வரும் இலக்கிய பூர்வ ஆக்கமா, இல்லை சமீபகாலமாக மன எழுச்சியின் உந்துதலால், அழகியலிலான படைப்புகளாகக் கருதப்படுகிற மேற்கத்திய நாடுகளின் இலக்கியமா?

திருவாளர் எஸ்.பொ. நீண்ட காலமாக எழுதி வரும் எழுத்துப் போராளி. மிகுந்த கல்வித்துறை அனுபவசாலி. புலம் பெயர்ந்த மனித இனத்தின் புது மொழியை கட்டாயமாக்கிற கட்டுமானக் கலைஞர்களில் முக்கியமானவர். நண்பர்களுடன் விவாதங்கள் அருகிப் போய்விட்ட நிலையில், எனக்குக் கிடைத்த இந்த மொழி பெயர்ப்பு நூல் மூலம் ஆப்ரிக்கப் பழங்குடி இலக்கியம் என்னை இழுத்துப் போனது. நம் இந்திய அரசியல் வாழ்க்கையும் இந்திய விவசாய மேலாண்மையும், அடிமை வாழ்க்கையிலிருந்து ஒரு காலனியத்திற்கு ஒரு தலைமுறை பழக்கப்படுத்தப் படுவது போன்ற மறு சிந்தனைக்கு நமக்கு ஆப்ரிக்க மொழியின் பல மானுடவியல் கதைகள் உதவி செய்கிறது.

எஸ்.பொ. வின் நீண்டகால உழைப்பும் புலம் பெயர் வாழ்வும் புரிகிறது நமக்கு. அவரின் இந்த மாதிரியான உலக இலக்கிய வாசல்களின் திறந்திருக்கும் பல்வேறு கதவுகளின் வழியாக தமிழின் மூச்சடைத்த வாசிப்பு உலகிற்கு புத்தம் புதிய காற்றையும், ஒளியையும் உள்ளே கொண்டு வருகிறது.

இருபதாண்டு கால வாசகியான எனக்கு இந்த கதைகள் முதன்முறையாக ஒரு அனுபவம். ஒரு குழந்தை, ஆண் குழந்தை எனில் அவன் ஒரு மகனாகத் தன் தந்தைக்கு பிறகும் குடும்ப அமைப்பை வலுவாக கொண்டு செல்ல ஒரு பயிற்சி பெறுபவனாக, கல்வி, தொழில் மற்றும் நிலம் வழியாக முழுமையா மனிதனாக மாறுகிறான் என்பதை இந்நாவல் அருமையான ஒரு குழந்தைமை மொழியில் நம்மை கடந்து செல்ல செல்கிறது. பல சமயங்களில் உலகமொழி பெயர்ப்புகளில் சிறந்த,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோன்ற பல பிரதிகளை முன்வைத்து நாம் பேசவும் வேண்டும்.

எஸ்.பொ. தனது மெல்லிய மனதுள் புதுத்தென்றல் வீசுவதைப் போன்ற மொழி பெயர்ப்பின் மூலம் தென் ஆப்ரிக்க இலக்கிய உலகின் நாவல்களைத் தமிழின் வாசகருக்குப் படிக்கத் தருகிறார்.

மனித மனத்தின் பதிந்திருக்கும் வலி; அதுதான் இலக்கியத்தின் ஆன்மா, உணர்வுபூர்வமான பிரதி நம் ஆன்மாவை எங்கோ தட்டி எழுப்புகிறது சங்கீதமாய். நீங்களும் அவ்வாறே படித்து ரசிக்க வேண்டும் கறுப்புக் குழந்தையை, அந்தக் கறுப்பு நிற கண்டத்தை இலக்கியத்தின் நிலமாக்க இன்று அந்த கறுப்பு இனத்தின் நிலம் எவ்வாறு மாறியுள்ளது என்பதை பல்வேறு அரசாங்கங்கள் மூலமாக கண்டு கொள்ள முடியும்.

பழங்குடிகளின் உணர்வை அவர் களிடமிருந்து பிடுங்கித் தின்னாத எந்தவித மான நாகரிக அரசாங்கமும் இன்று உலகில் இல்லை.

## நகிப் மவிர்ஃபூஸ்வின் மிரமார் – நாவல் எஸ்.பொ–தமிழில்

மிரமார் எனும் புத்தகம் தமிழில் எஸ்.பொ. அவர்களால் ஆப்ரிக்க இலக்கியத் திலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. தடம்பதித்த பலநூறு வகை ஆப்ரிக்க கதையாடல்களின் இன்னொரு புதிய கலாசார வடிவாக இது நமக்கு வாசிக்கக் கிடைக்கிறது. மறு வாசிப்புக்கு உகந்த



பல ரசனைக்குரிய பிரதேசமும், பல இடங்களும் நாவலில் வருகின்றது. இதுவே ஒரு புதிய வரலாறு.

உண்மை அழிதலின் திகைப்பை எஸ்.பொ. அவர்களின் மொழி நடை யாக மனவோட்டத்தில் அறியப்பட்டுள்ளது. நீண்டகால வாசிப்பு அனுபவம் இருப்பின் புதைபொருள் ஆராய்ச்சி போல தோன்றும் கதையோட்டம் எகிப்தின் கலாசார மாற்றங் களைப் படிக்க முடியும். புதிய புதிய அறிமுகத்துடன் பல அத்தியாயங்கள், கதாப்பாத்திரங்கள், வர்ணனைகள் உள்ள கதைக்கான இப்புதிய நாவல் உண்மையில் அறுபதுகளின் எகிப்திய மக்களின் வாழ்க்கையின் பரபரப்பை உணர்த்துகிறது.

பல்வேறு மனித உணர்வுகள், புரட்சிகள், மனிதனின் மீள் பார்வை யின் வழியாக காட்சிப்படுத்தப்படுகின்றன, குறையேது மில்லாத மர்ம நாவல் போல. பெண்களுக்கு எதிரான கொடுமைகளுக்கும், காதலின் முறிவுகளுக்கும் இந்த நாவலில் இடம் உள்ளதைப் படித்து அறிய முடிகிறது. காதலின் தீராப்பக்கங்களை மனித வாழ்வு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தபடியே முன்னகர்ந்து கொண்டிருக் கிறதான பல்வேறு நினைவுகளைக் கொண்டுள்ளது. புதிய தலைமுறையினரின் வாசிப்புக்கு ஒரு தேர்ந்த புத்தகம். புத்தாக்க முயற்சியாகவுள்ளன தடம்பதித்த ஆப்ரிக்க இலக்கிய படைப்புகள்.

மித்ர வெளியீடு

-கீதஞ்சலி பிரியதர்சினி

## அழியும் பேருயிர்




"கடாஅக் களிற்றின் மேல் கட்படாம் மாதர் படாஅ முலைமேல் துகில்"

திருவள்ளுவர் ஒப்புவமைகட்காக பயன்படுத்திய அவ்வாறு இடம்பெற்ற மூன்று குறள்களை அழியும் பேருயிர் யானைகள்" என்று இயற்கை வரலாறு அறக்கட்டளை வெளியிட்டுள்ள ச. முகமது அலி க. யோகனந்த் ஆகியோர் தொடுத்த இந்நூலில் இடம் பெற்றுள்ளது. என்ன ஒரு உவமேயம் இளம்மாதரின் நிமிர்ந்த முலைகளின் மேல் அணிந்த ஆடை, கட்டுப்படா ஆண்யானை மேல் இட்ட முகப்படாம் போன்றது என்கிறார். இவர்கள் புராண இதிகாச இலக்கியங்களில் யானைகள் பற்றிக் கூறப்பட்ட விடயங்களைத் தேடி திருவள்ளுவர் இவ்வாறு கூறியிருப்பதை மேற்கோள் காட்டியிருக்கிறார்கள்.

அறிமுகம் தொடங்கி, பண்பாட்டில் யானைகள், பாக்களில், யுத்தங்கள் சேனைகளில் பயன்பட்ட விதங்கள், பரிமாண வழற்சி, புவியியல் பரம்பலில் இனப்பெருக்கம், வாழ்வியல், சூழலியல் தாக்கங்களில் போன்றவற்றின் அடிப் படையில் ஆராயப்பட்டிருக்கிறது.

யானைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம். யானைகளினை வேட்டையாடாது எப்படி அவற்றைப் பேண வேண்டும், இயற்கை அழிவுகளை எப்படித் தடுக்கலாம், இதன் ஊடாக வனங்கள் துண்டாடப்படாமல் இருக்க வேண்டியதன் முக்கியம் என்பன விரிவான விளக்கங்களினூடாக செல்லப்படுகிறது.

இந்நூல் மிக முக்கியமான யானை கள் பற்றிய தகவல்களைக் கொண்டுள்ள மையால் அவசியம் படிக்க வேண்டியது.

யானைகளின் தன்மைகள் பரம்பல் கள் தெளிவாக ஒளிப்படங்கள் மூலம் காட்டப்பட்டிருக்கிறது.

அவுஸ்திரேலியா, அண்டார்டிகா தவிர உலகின் மற்ற எல்லாக் கண்டங் களிலும் யானை இனங்கள் பரவி இருந்தன. ஏறக்குறைய 10 ஆயிரம் ஆண்டுகளின் தனி எலும்புகள் மட்டுமல்ல ஓரிரு ஒட்டு மொத்த உடல்களே புதை படிவங்களாக அகழ்வாராட்சியில் கிடைத்த போதுதான் யானைகளுடைய பரிணாம வரலாறு தெளிவுற்றது என்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைகளின் பரிணாம மாற்றங்களை அகழ்வாராய்ச்சியில் கிடைத்த எலும்புகளைக் கொண்டு மேற்கத்திய வல்லுனர்களால் உருவகித்து வரையப்பட்ட அருமையான படங்கள் உண்மையிலேயே அதிசயிக்கத்தக்கவையே. இவற்றை பக் - 63ல் காணலாம். மேலும் யானைகள் வாழக்கூடிய நாடுகளின் அடர்காட்டு, புதர்காட்டு பகுதிகளையும் வரைபடங்கள் மூலம் மிகத் துல்லியமாக விளக்கியிருக்கிறது.

யானைகளின் இனப்பெருக்கம் தொடர்பான தெளிவான விளக்கங்களை சுவாரஸ்யமாக படிக்கலாம். மேலும் கடந்த 150 ஆண்டுகளாக நடைபெற்ற மேற்கத்திய அறிஞர்களின் அகழாய்வு முடிவுகளின் படி மத்திய ஆபிரிக்க கண்டத்தின் கிழக்குப் பகுதியே யானைகளின் தோற்றுவாய் என்று கூறியிருக்கிறார்கள். இது அமெரிக்கா, ஆபிரிக்கா, இந்தியா, ரஷ்யா, அலாஸ்கா, தென்னமரிக்கா ஆகிய பகுதிகளில் பரவியிருக்கிறது. இந்திய யானைகள் பரிணமித்து சுமார் 30 லட்சம் ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என அறிஞர்கள் கூறுவதாகக் கூறும் இவ்விடத்தில் சிறிது தடுமாற்றம் உள்ளது. யானைகள் பற்றிய பாதுகாப்புப் பணிகளை ஆராய்ச்சிகளை மேற்கொண்ட சிலரைப் பற்றிய அறிமுகக் குறிப்புகளும் இடம்பெற்றிருக்கிறது.

அழியும் பேருயிர் யானைகள் என்ற இந்நூல் யானைகள் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புபவற்கு ஓர் அரிய நூல். அதுமட்டுமின்றி இதை மற்றவர்களும் அறிந்துகொள்ளுதல் அவசியம். காடும் காட்டில் வாழும் விலங்குகளையும் பேண வேண்டியது ஒவ்வொரு தனி மனிதனுடைய கடமையுமாகும்.

-மரீனா


## பூவரசி சந்தா

| | |
|---|---|
| இரண்டு வருடம் (தமிழ்நாடு) | 500.00 |
| ஒரு வருடம் (தமிழ்நாடு) | 250.00 |
| இரண்டு வருடம் (வெளிநாடு) | 2,000.00 |
| ஒரு வருடம் (வெளிநாடு) | 1,000.00 |

காசோலை அனுப்ப வேண்டிய முகவரி
இல.6. முதலாவது மாடி, 27-வது தெரு,
பிள்ளையார் கோவில் முன்பாக,
கிருஷ்ணா நகர், மதுரவாயில்,
சென்னை-95. தமிழ்நாடு, இந்தியா
Phone: 0091 9600131346 / 91 44438 06382
Email. pouvarashi@gmail.com

காசோலை அனுப்ப வேண்டிய விபரம்
இந்தியன் வங்கி
A/c No. 604226514
K. KALACIYON SHANGARAMATHERAN




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலா கவிதைகள் (லண்டன்)



### சோதனைகளோடு சாதனைகள்

காலத்தின் பதிவு இலக்கியம் என்பதால் - மனக்
கோலத்தின் சாலத்தைப் பதிவு செய்யக் கவிதை
பாலத்தை பாவையிவள் தெரிவு செய்தாள் - மன
ஓலத்தைக் கொட்டினால் தெளிவு றுமோ மனம்?

யாரிவள் எனநீங்கள் அறிந்துகொள்ளத் துடிக்கக்கூடும்
காரிகையிவள் வாழ்வதிங்கு ஆண்டுகள் பதின்நான்கு
பேரளவில் கால்கள் கரங்கள் உண்டெனினும்
வாழ்வோ கட்டுப்பட்டது சக்கரநாற்காலியதில்!

எதிர்பாரா விதமாக ஏற்பட்ட உடல்த்தளர்வால்
பதின்மூன்று வயதளவில் படிப்படியாய் இவளிழந்த
அதிகூடிய இழப்பால் ஆகிவிட்டாள் அசைவதுகுறை
அதிசயப்பிறவி ஆனாலும் அவனியிலே வாழுகின்றாள்!

எத்தனையோ போராட்டம் இவள்வாழ்வில்
சத்தனைய தாய்தந்தை சகோதரர்கள் உறவினர்கள்
முத்தனைய நண்பர்கள் உள்ளபோதும் சித்திரத்தான்
சந்தித்த சம்பவங்கள் சரித்திரங்கள் சலிக்கவில்லை!



இடம்பெயர்வில் வீடிழந்து ஊரிழந்து நாடிழந்து
இங்கிலாந்தில் குடிபுகுந்து உதவிநாடி தாதிமனைபுகுந்து
மடந்தையிவள் மனம்பட்ட பாட்டை என்னவென்பது
அங்கிவள் பெற்றபட்டம் இளங்கலைப் பொறியியலன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிவிட இலகுதான் ஆனால் சொல்ல முடியா
அல்லல்கள் இவள்பாட்டில் ஆயினுந்தான் இவளின்று
வல்லபல அறிஞர்கள் மத்தியில் பேசுதிறன்கொண்டாள்
மெல்ல விலகாதோ இவள் பட்டதுயர் என்பீர்

இலக்கியத்தில் கொண்ட நாட்டம்
இலக்கியக் கூட்டமென்றெல்லாம் இனிதேவலம் வந்தாளே!
இதனால் கொண்டாள் உற்சாகம் - மட்டுமல்ல
இனியவர்கள் பலரின் இன்தொடர்பும்.

அசையமுடியா உறுப்புகள் கொண்டும் வாழ்வில்
அசைக்கா முடியா நம்பிக்கை கொண்டவள்
இசைந்த அங்கங்கள் கொண்டியக்கி தொழில்நுட்ப
இயந்திரக்கார் ஓட்டுகிறாள் இறக்கை கிடைத்தவளாய்!


Mithra Arts & Creation Pvt. Ltd.,

இருவது வருட காலமாய் ஈழத்தின்
புலம்பெயர்ந்த இலக்கியப்
படைப்புகளைத் தரமாகவும்,
சிறப்பாகவும் வெளியிட்டு, இலக்கிய
ஆளுமைகளை உன்னதப்படுத்திக்
கொண்டிருக்கிறது. மித்ரா ஆட்ஸ்,
உங்கள் தரமான படைப்புக்களை
சிறப்பான நூலக்க வாருங்கள்.

Design
&
Print

Book Publishing
Bharathanatya Invitations
Brochure and Flyers
Logo Designs
Banners & Posters

No. 20/2, Zackria Colony, 1st street, Choolaimedu, Chennai - 600 094.
Ph : +91 44 2372 3182 / 2473 5314.
Email: mithrabooks@gmail.com, www.mithra.co.in



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வாழ்த்துக்களுடன்...*

**தங்க.கதிரவன்** எம்.ஏ., எம்.எல்.,

வழக்கறிஞர், நாகப்பட்டினம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமவளவன் கனகசிங்கம்

# பின் மழைக்காலம்

அந்தி சாய்கிறது
யன்னலினோரம் வெளியை
வெறித்திருக்கிறேன்
இன்னும் மழை.
மரங்களில்
பறவைகள்விட்டுப் போன
வெறும்கூடுகள் மேல்
கருமை கவிகிறது
செம்பழுப்பூறிய இலையுதிர்கால
பறவைகள் போலவே
விடைபெற்றுப் போயிற்று
என்வாழ்வின் பெரும் பகுதி
தீர்ந்துபோன மதுக்குப்பிபோல
வெறுமை மண்டிக்கிடக்கிறேன்
கொடும் பனிக்காலத்து நெடிய இரவை
நான் கடந்தாகவேண்டும்
இருள்மண்டி
மனசு துயருறுமிக்கணத்தில்
விளக்கில் ஒளியூட்டி
தன் பிஞ்சு மகவை கைகளில் தருகிறாள்
என் மகள்
சிறு புலுனிக்குஞ்சென
மெல்லிதழ் நெளித்துப் பூக்கிறாள்
புன்னகை
நீளக் கொடிவிட்டு வீழ்கிறது
*மின்னல்*
என்னுள்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறை

நான் அந்த ஓவியத்தை வரையத் தொடங்கியபோது
வானம் கருகிக்கொண்டிருந்தது
மழை மேகவண்ணத்தால் பின்புலத்தை தீட்டினேன்

காற்று குதிரையில் பாயும் முகில்களுக்கிடையே
சின்னதோர் விரிசல்
ஒளி பாய்ந்தது

அதையே பிடித்து வாயில் சமைத்தேன்
கரிய பறவைகள் தென்திசை பார்த்து ஊடறுத்தன
கம்பிக்கிராதிகளால் கதவு சமைத்தேன்

வீழ்ந்தது இருள்
அதை தூரிகையில் தோய்த்து
பெரியதோர் பூட்டுடை தொங்கவிட்டேன்

கொடிய
சிறைக்கூடம் அமைந்தது திரையில்

ஓரிரு நட்சத்திரங்கள் மின்னத் தொடங்கின
இரண்டைப் பிடித்து கண்களில் பொருத்தி
வாயிலில் ஒருவனை காவல் நிறுத்தி
அவனது கைகளில் துவக்கை எழுதினேன்



இருந்தும்
வெறுமை உணர்த்த
தூரிகையை வைத்துவிட்டு
உள்ளே நுழைந்து அமர்ந்துகொண்டேன்

பார்ப்பவரெல்லாம்
தத்ரூபமாக இருக்கிறது ஓவியம் என்கிறார்கள்

திறவுகோலை தீட்டமறந்த நான்
இப்போ உள்ளேயிருந்து
தவிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறம்

இரட்டைக் கோபுரம் நொருங்கிப் பொடிபட
எழுந்தான் அரசன்
உலகதிர.

அவன் நடந்த காலடிக்குள்
நசுங்கிச்
சிதைந்தன பழம்பெரும் தேசங்கள்
இரண்டு.

மூச்சுக்காற்று
பட்ட இடமெல்லாம் பொசுங்கி
நாறிச்
சாம்பலாயிற்று.

மூலம் இவனே என்றுரைத்து
நடு இரவில்
ஒருவனைக் கொன்று வீசினான்
கடலில்

ஒரு தசாப்தப் பெருநினைவில் கூடிக்
கலைய
கடலிருந்தெழுந்து
'சாண்டி'ப் புயல்!

இம்மியளவும் பிசகாது குறிவைத்தடித்தது
மீள
அஃதே இரட்டைக் கோபுரப் பட்டணம் பொடிபட்டு
முடங்க.

அரசன்
அறம்
பிழைக்கின்
புதுப்புது படைக்கலன் இருந்தென்ன
முப்பது முக்கோடி சேனைகள் இருந்தென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கு. றஜீபன் கவிதைகள்

## ஒரு வெளிச்சமும் பல இருள்களும்

மிகவும் ஒளிமங்கிய
நாளொன்றிலிருந்து
காட்டின் வாசனை அற்றுப் போனது
ஒரு மிகப்பெரும்
புனித தேசத்தைக் கட்டி இழுத்து வந்தவர்களாகப்
பெருமைப்பட்டார்கள்
இனி
மழையில் பன்னீர் வாசம் வீசுமாம்
பூக்களில் இருந்து தேன்வழிந்து
தேசமெல்லாம்
தேன்சேறாகுமாம் என்றெல்லாம்
பெருமைப்படுத்தப்பட்டது.
இத்தனை
கர்வங்களுக்கும் பின்னால்
பல காயங்களும் கண்ணீரும்
இருப்பதை இன்னுமின்னும்
எவரும் அறியவில்லை





## பெருவேள்வி

மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட
பொழுதொன்றில்
நீயும் நானும்
அலங்காரம் செய்யப்பட்டிருக்கிறோம்
கோவணமும் கச்சையும் கிழித்தெறியப்பட்டு
எம்மீது நாகரீகம் போர்த்தப்பட்டதாய்
அழகாக விளம்பரம் செய்கிறார்கள்
நெருக்கி முறிக்கப்பட்ட
எம்புகளிலிருந்து இன்னமும்
வலிகுறையவில்லை
மிகப்பெரும் வெளிச்சத்தின்பின்னால்
பல யுகங்களின் இருள்
எம்மைப் பயமுறுத்துகிறது
நிறைகுடங்களோடு
தோரணவாயிலில் காத்திருந்தவர்கள்
தூக்கிலிடப்பட்டார்கள்
மிகவும் நேர்த்தியாக செய்துமுடிக்கப்பட்டது
வேள்வி
முப்பதாண்டுகாலப் பசியோடு இருந்த மிருகம்
பசியாறிய களைப்பில் தூங்குகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் வரிப்பணம் அகதிகட்கு உதவித்தொகையாக வழங்குவது ஏன்?

## ஆழமாகச் சிந்திக்க வேண்டும்

பத்திநாதன் பேட்டி



*தமிழ்நாட்டில் வாழக்கூடிய இலங்கை அகதியான நீங்கள் எப்படி எழுத்தாளரா ஆனீர்கள்?*

2008ம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரி எதிரில் உள்ள பள்ளி மைதானத்தில் புத்தகக்கண்காட்சிநடைபெற்றுக் கொண்டிருந்தது. ஜனவரி மாதம் பதின்மூன்றாம் தேதி மாலைப் பொழுதில் கண்காட்சி அரங்கிற்குள் செல்ல மனமில்லாமல் வெளியே கலையரங்கில் கதிரையில் உட்கார்ந்து இருக்கிறேன். தொலைபேசி வழியாக செய்தி வருகிறது. உங்கள் புத்தகம் தயாராகி கண்காட்சி அரங்கில் விற்பனைக்கு இருக்கிறது வந்து வாங்கிக் கொள்ளுங்கள்.

ஒரு நிமிடத்திற்குள்ளாக எனது புத்தகத்தை கண்ணால் பார்த்திருக்க முடியும். அதன் வண்ணத்தை வடிவமைப்பை பார்த்திருக்க முடியும். ஆனால் நான் ஒரு மணிநேரமாக அந்த இருக்கையைவிட்டு எழவில்லை. இந்தப்புத்தகம் வெளிவருவதற்காக அனுபவித்த சிரமங்கள் அவமானங்கள் என்னை வெறுப்பின் உச்சிக்கு கொண்டு சென்றிருந்தது. அப்போது யோசிக்கிறேன் "இந்தச் சனியன் பிடித்த புத்தகம் எழுதியதற்காக எனது கையை வெட்டிவிடலாமா" என்று. அவ்வளவு துன்பத்திற்குள்ளாக்கியது, நான் எழுதிய போரின் மறுபக்கம் என்ற புத்தகம்.

வாழ்க்கையின் வளர்ச்சியை, முயற்சியை அடிப்படை உரிமையை மட்டுமல்ல. ஐநா சபையில் உருவாக்கப்பட்ட அகதிகளுக்கான அடிப்படை உரிமைகளையும் தடுக்கக் கூடிய, மறுக்கக் கூடியது தான் அன்று முதல் இன்று வரையுள் தமிழ்நாட்டில் அகதி முகாம் வாழ்க்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சூழல் 1990 முதல் 1998 வரை உச்சப்பட்டி அகதிகள் முகாமில் வாழ்ந்த எனக்கு புரியவில்லை. புரியும் போதும் முகாமில் உள்ள நடைமுறைக்கு கட்டுப்பட்டு வாழும் மனநிலை எனக்கு இருக்க வில்லை. ஆரம்பம் முதல் இன்று வரை ஒவ்வொரு அகதியும் (முகாம்களில் கிட்டதட்ட 70 ஆயிரம், முகாமிற்கு வெளியே 30 ஆயிரம்) Q பிரிவின் கண்காணிப்பிற்கு உட்பட்டு வாழ்கிறார்கள். அதில் கூடுதலாக இன்று வரை நான் Q பிரிவால் தீவிர கண்காணிப்பிற்குட்பட்டு இருக்கிறேன். காரணம் அடங்க மறுப்பது.

இதனால் 1998 கடைசியில் எனது முகாம் வாழ்க்கை மட்டுமல்ல, எனது குடும்பத்தினருடனான தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு சென்னை சென்றேன். எந்தப் பதிவுமில்லை. சென்னையில் கூட வாழ்ந்த நண்பர்களுக்கும் தெரியாது நான் ஒரு ஈழத்தமிழ் அகதி என்று. இந்த சூழலில் ஐந்து நட்சத்திர ஓட்டலில் வேலைக்கு எப்படி சேர்ந்தேன் என்பதும் தனிக்கதை, புத்தகம் படித்தவர்களுக்கு தெரியும்.

என்னை எழுத்தாளனாக மாற்றியதில் சென்னையில் என்னுடன் வாழ்ந்த இரு நண்பர்களுக்கு முக்கிய பங்கிருக்கிறது. அப்போது எல்லாம் எனக்கு தூக்கம் வருவதில்லை. ஈழத்தமிழன் எப்படித் தூங்கமுடியும்? நண்பர் நூலகத்தில் இருந்து எடுத்து வரும் புத்தகத்தை படிப்பேன், தூக்கம் வரும் தூங்கி விடுவேன். இப்படித்தான் புத்தகம் படிக்கும் பழக்கத்திற்கு ஆளானேன். பின் பெட்டியில் இருக்கும் புத்தகத்தைக் கூட அவர் அனுமதியில்லாமல் திருடிப் படிக்கும் அளவுக்கு மாறியிருந்தேன்.

அதே நண்பருடன் புத்தகக் கண்காட்சி, புத்தகக் கடை, பின்பு தனியாக, இப்படி என்னிடம் சிறு நூலகம் ஆரம்பமாகிக் கொண்டிருந்தது.

கொஞ்சம் படிக்க ஆரம்பித்ததும் ஏதாவது எழுதலாமே என்று தோன்றியது என்ன எழுத? ஒரு நண்பர் படிக்கக் கூடியவர் மற்ற நண்பர் தினக்குறிப்பு எழுதக்கூடியவர். அவருடைய பேனாவை எடுத்து, அவருடைய டைரியில் இவ்வாறு கவிதை எழுதினேன்.

அடிமையாகப் பிறந்து
அகதியாக வாழ்ந்து
கஞ்சிக்கு அலைந்து
அஞ்சி அஞ்சி
கெஞ்சிக் கெஞ்சி
காலடியில் வீழ்வேன்
என்று நினைத்தாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பன் என் கண்முன்னாலேயே தினக்குறிப்பில் நான் எழுதிய பக்கத்தைக் கிழித்து கசக்கி குப்பையில் வீசிவிட்டார். இது ஒன்றும் கற்பனையோ, சினிமாவோ, கதையோ இல்லை. எனது நிஜமும் அப்படித்தான் அதன்பின்பு தான் காகிதம், பேனா எல்லாம் வாங்கினேன். என்ன எழுதுவது? எனக்கு என்ன தெரியும்? யோசிக்கும் போதுதான் என் கதையே சினிமாவை மிஞ்சியிருக்கும் போது அதை ஏன் எழுதக்கூடாது என்று ஆரம்பித்ததுதான் போரின் மறுபக்கம்.

**ஈழத்தமிழனுக்காக போரடினோம் என்று பத்திரிக்கையில் பக்கம் பக்கமமாக எழுதுபவர்கள் அத்தகைய அவர்கள் போராட்டத்தால் ஈழத்தமிழன் வாழ்வில் என்ன மாற்றம் ஏற்பட்டது என்பதை இதுவரை எழுதாதது ஏன்?**

மூன்றாண்டு எழுதி முடித்ததுடன் முடிந்துவிடவில்லை எனது போராட்டம். எழுதி முடித்த நேரம் வைகோ, பழ. நெடு மாறன் போன்றோர் பொடா சட்டத்தில் சிறையிலிருந்தார்கள். பொடா சட்டம் பெரும் சலசலப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்த நிலையில், ஒரு பதிப்பகத்தை அணுகி வெளியிடக் கேட்டேன். தம்பி இது கொஞ்சம் சிக்கலானது, சட்டரீதியான வீண் பிரச்சனைகளைச் சந்திக்க நேரிடும் என பேசி முடிக்கும் முன்பாகவே பதில் கூறுகிறார். ஐயா நான் சிறை செல்லவும் தயார் என்றேன். அவர் சிரித்துக் கொண்டே பதில் கூறினார். நீங்கள் சிறை செல்வீர்கள் உங்களுக்காக, ஒரு புத்தகத்திற்காக நான் பதிப்பகத்தை இழுத்து மூட வேண்டுமா?

இப்படி பல பதிப்பகங்கள். மூன்று வருடங் கள் முற்றாக முடிந்திருந்த போதும் புத்தகம் வெளி வரவில்லை. சென்னையில் நான் பார்த்த வேலையையும் ராஜினாமா செய்தேன். வேலை இல்லாமல் சென்னையில் வாழமுடியாததால், மறுபடியும் 2006ல் அகதி முகாமில். கஞ்சாக்குடிக்கி, பைத்தியக்காரன் என்றார்கள் ஒரு பக்கம். Q பிரிவில் பதிவுக்காக விரட்ட, கல்யாணம் செய் என்று உறவுகள் ஒரு பக்கம் விரட்ட, இப்படியான சூழலில் தான் எழுத்தாளர் ஆனேன். அடையாளம் பதிப்பகம் மூலமாக திரு. முருகேச பாண்டியன் அறிமுகமாகி காலச்சுவடு பதிப்பகத்தில் புத்தகம் வெளிவந்தது. வீட்டு வாசலில் Q பிரிவு போலீசும் வந்தது.

*போரின் மறுபக்கம் எதன் வெளிப்பாடு இந்நூலை எழுதுவதற்கு முன் இருந்த மனநிலைப்பாடும் பின் இருந்த மனநிலைப்பாடும் எப்படி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இருந்தது எதிர்வினைகளை எவ்வாறு எதிர் கொண்டீர்கள்?*

பல சிற்றிதழ்கள் இப்பிரச்சனை குறித்துப் பேச பயப்படுக்கின்றன, மறுக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் நான் எத்தகைய அச்சுறுத்தலை எதிர்கொண்டாலும் என்னை சுதந்திரமாகப் பேச அனுமதித்து வெளியிட்ட இதழ் ஆசியர் ஈழவாணி அவர்களுக்கு எனது முதற்கண் மிக்க நன்றி.

**வெளிநாட்டில் உள்ள பணக்கார அகதி கூப்பிட்டால் அரக்கப் பரக்க ஓடுபவர்கள், தமிழ்நாட்டு அகதிமுகாமிற்குள் கால்வைக்க முடியுமா?**

இதில் மூன்று கேள்விகள் அடங்கி உள்ளது. முதலில் போரின் மறுப்பக்கம் இதன் வெளிப்பாடும். போரின் மறுபக்கம் ஒரு தனிமனிதனின் கதை இல்லை. போரினால் அகதியாக்கப்பட்டு தமிழ்நாட்டில் அகதிகள் முகாமில் வாழ்ந்த ஒரு அகதியின் கதை.

1983ம் ஆண்டு தொட்டு இன்று வரை தமிழ்நாட்டு அகதிகள் முகாம் பற்றி பெரிதாக எந்தப் பதிவுகளும் இல்லை எனக்கு தெரிந்தவரை, என் அறிவுக்கு எட்டியவரை அகதி முகாம் வாழ்க்கை பற்றி, நடைமுறைகள் பற்றி, Q பிரிவின் அடக்குமுறை பற்றி, பதிவு செய்திருக்கிறேன். அகதி என்றால் என்ன ஒரு மனிதன் அவனுடைய அடிப்படை உரிமைகள் இழந்ததன் காரணமாக அகதியாக மாறுகிறான் அதனால் அவன் அவனுடைய நாட்டை விட்டு வேறு நாட்டிற்க்குச் செல்கிறான். அவன் இழந்த அடிப்படை உரிமைகள் மறுபடியும் கிடைக்கும் என்று எதிர்பார்த்து வருகிறான். இதை நான் கூறவில்லை UNHCR வரையறுத்தது. இவ்வாறு எதிர்பார்த்து வந்த அகதிகளுக்கு இங்கு 22 வருடங்களாக என்ன நடந்து கொண்டிருக்கிறது?

அகதிகளின் உரிமைகள், கடமைகள், உலக வாழ்க்கையின் அடிப்படையானவை, அகதிக்கும் அதுவே. அகதிக்கு அடிப்படை உரிமை இன்றியமையாதது என்று அகதிகள் சட்டம் கூறுகிறது. ஒரு அகதி எந்த நாட்டில் வாழ்கிறானோ, அந்த நாட்டின் சட்டத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டும். அந்த நாட்டின் பொதுமக்களின் இறையாண்மைக்கு குந்தகம் ஏற்படாமல் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு நடந்து கொள்வானாக இருந்தால் அகதிக்கும், அந்நாட்டு மக்களுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. என்கிறது அகதிகளுக்கான சட்டம். இதை நாம் பேச முற்பட்டால் ஒரே வார்த்தையில் அகதிகள் சட்டத்தில் இந்தியா கையெழுத்து இடவில்லை. அதனால் மத்திய அரசு எடுக்கும் முடிவே அகதிகளின் வாழ்க்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பால் வந்த அடிப்படை உரிமை மறுக்கப்படும் போது, வாழ்க்கை முடக்கப்படும் போது, இயல்பாக வரக்கூடிய எதிர்ப்புணர்வின் வெளிப்பாடு தான் எனது வெளிப்பாடும்.

அகதிகள் சட்டத்தில் பின்வருமாறு ஒரு கூற்று உள்ளது. அகதியின் கடமைகள் காலத்திற்கும், இருக்கிற நாட்டிற்கு தகுந்தமாதிரி அமைகிறது. நாங்கள் ஐரோப்பாவில் வாழும் அகதிகள் மாதிரி வாழ உரிமை கோரவில்லை. நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்றமாதிரி சுதந்திரமாக வாழவே கேட்கிறோம். அதுவும் இத்தனை ஆண்டுகள் தமிழகத்தில் தமிழன் அகதியாக, அடிமையாக வாழ்வது என்பது தான் கூடுதல் வேதனையைத் தருகிறது.

பொதுவாக ஒரு அகதியின் இன்னும் ஒரு பக்கம் என்று அகதிகள் சட்டம் இவ்வாறு கூறுகிறது. இதுதான் இங்குள்ள அகதிகள் முகாம்களிலும் நடைமுறையில் உள்ளது.

ஒரு அகதியின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுகிறது.

அகதிகளை அகதிகளாகவே வைத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் வாழ நிர்ப்பந்திக்கிறார்கள். கல்வி, தங்கும் வசதி, வேலை, ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்குச் செல்ல அனுமதி மறுப்பு போன்றவை தான் அகதிகளின் வாழ்வியல் முறையாக உள்ளது.

எனது வாழ்க்கை சுரண்டப்பட்டு விட்டது. முழுங்கடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் எனது அடுத்த சந்ததியும் இவ்வாறு வாழ வேண்டுமா?

நான் நினைந்திருந்தால் சென்னையில் வாழ்ந்த காலத்தில் தவறான வழியில் ஒரு குடும்ப அட்டையுடன் இந்தியக் குடிமகனாகச் சென்னையில் ஏதோ ஒரு மூலையில் முணங்கிக் கொண்டு வாழ்ந்திருக்க முடியும். எவ்வளவோ காரியம் செய்த எனக்கு அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. ஆனால் அது என் நாட்டிற்கும், இந்நாட்டிற்கும் செய்யும் துரோகம் இல்லையா?

இப்புத்தகம் எழுவதற்கு முன்பு எனக்கு இங்குள்ள அரசியல் சூழல் தெரியாது என்பதை வெளிப்படையாகவே ஒத்துக் கொள்கிறேன். அப்போது என்னை விரட்டியது அகதி என்ற பிரச்சனையும், Q பிராஞ் என்ற பூதமும் மட்டுமே. இவை இரண்டும் வாழ்வை, என் சுதந்திரத்தை, மனநிலையைக் கடுமையாகப் பாதித்திருந்தது. தனிமனிதனாக இந்தப் பிரச்சினையில் இருந்து உடைத்துக் கொண்டு வெளியேறும் சவால், என் முன்னால் பிரமாண்டமாக இருந்தது. அதனை எதிர்கொள்ள முடியாமல் பயத்திலும், பதற்றத்திலும் பதறிப் போயிருந்த காலம் அது.

அதுமட்டுமன்றி பொடா சட்டம் பெரும் அரசியல் தலைவர்களையே ஆட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எனது அடுத்த சந்ததியும் இவ்வாறு வாழ வேண்டுமா? நான் நினைந்திருந்தால் சென்னையில் வாழ்ந்த காலத்தில் தவறான வழியில் ஒரு குடும்ப அட்டையுடன் இந்தியக் குடிமகனாகச் சென்னையில் ஏதோ ஒரு மூலையில் முணங்கிக் கொண்டு வாழ்ந்திருக்க முடியும்.**

காண வைத்திருந்தது. அத்தகைய சூழலில் எந்த முகாமிலும் தமிழ்நாட்டில் எனக்குப் பதிவு இல்லாத கால கட்டத்தில் என்னை மறைத்துக் கொண்டு வாழ்ந்த சூழலில், நான் வாழ்க்கையைப் பணயம் வைத்துத் தான் அப்புத்தகம் எழுதினேன். அப்புத்தகம் படித்தவர்களுக்கு தெரியும். இப்புத்தகம் படித்துக் கொண்டிருக்கும் போது நான் ஒரு வேளை சிறையில் இருப்பேன், அல்லது சிறையிலிருந்து விடுபட்டு இருப்பேன் என்று அப்புத்தகத்தில் குறிப்பிட்டது அத்தகைய நெருக்கடியான சூழலை மனதில் கொண்டுதான்.

2003ல் இப்புத்தகம் எழுத ஆரம்பித்த காலத்தில் எனக்கு தெரிந்திருந்த அரசியல் புலிகளுக்கு எதிரா? ஆதரவா? என்பது மட்டுமே. இவை இரண்டு பக்கம் விமர்சனங்களுக்கும் சிக்கி விடக்கூடாது என்பதை மனதில் கொண்டு தான் எழுதினேன். தவிர வேறு எந்த அரசியல் போக்கும் எனக்கு அப்போது தெரியவில்லை.

தட்டுத்தடுமாறிப் புத்தகம் வெளிவந்தது. என்ன மர்மமோ தெரியாது. Q பிராஞ் மூன்று நாட்கள் கழித்துத் தான் வீட்டிற்குள் வந்தார்கள். அப்போது உச்சப்பட்டி அகதி முகாமில் தனியாகத்தான் ஓலைக்கொட்டிலில் வாழ்ந்தேன். புத்தகம் குறித்த தகவல் அனைத்தும் எழுதிக் கொண்டனர். புத்தகம் கேட்டார்கள் நான் மறுத்தேன். கடையில் விற்கிறது போய் வாங்கிக் கொள்ளுங்கள் என்றேன். மறுபடியும் அரைமணிநேரம் கழித்து வந்து உயர் அதிகாரி கேட்கிறார். கொடுங்கள் படித்துவிட்டுத் தருகிறேன் என்றார். நீங்கள் திருப்பித் தரமாட்டீர்கள் என்று தெரியும் கொண்டு போங்கள் என்று அனுப்பிவிட்டேன்.

மாலையில் என் வீட்டைச் சுற்றியுள்ள வீடுகளில் எல்லாம் தணிக்கை (செக்கிங்) நடைபெற்றது. நான் வீட்டில் தான் இருந்தேன். என்னை எதுவும் கேட்க வில்லை. நான் தப்பித்ததற்கு ஒரு முக்கிய காரணம் அப்புத்தகம் வெளியிட்ட பதிப்பகத்தின் பின்புலம். அது அத்துடன் முடிந்தாலும், நான் கூடுதல் கண்காணிப்பு வளையத்திற்கு இருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் உள்ள சில பத்திரிக்கைகள் அப்புத்தகம் பற்றிப் பேசியது. மலையாள பத்திரிக்கை, தொலைக்காட்சிகள் அப்புத்தகம் குறித்துப் பேசியது. I.P.C. வானொலி அது குறித்து பேசியது. அப்போது எல்லாம் எனக்கு தெரியவில்லை. அப்புத்தகம் வெளிவந்த இரண்டு வருடம் கழித்துத் தான் ஒரு நண்பர் கூறினார் நாங்கள் உங்கள் புத்தகத்தை புறக்கணித்துவிட்டோம். ஏன் என்றேன். நீங்கள் புலிகளுக்கு எதிராக எழுதியிருக்கிறீர்கள் என்றார். நீங்கள் அப்புத்தகம் படித்தீர்களா? இல்லை. படிக்காமலேயே புத்தகத்தை நிராகரிப்பது அறிவுடையோர் செயலா?

பின்புதான் எனக்குப் புரிந்தது, அப்புத்தகம் வெளியிட்ட பதிப்பகம் மேல் அவர்கள் என்ன மனநிலையில் இருந்தார்களோ அதே மனநிலை என்மேலும் இருந்தது. அப்புத்தகம் பேசிய கருத்தியல் பற்றி, பிரச்சனை பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை. "நாங்கள்தான் வாரிசு" என்று கொடிபிடிக்கும் இவர்கள். நான் அவர்கள் சார்ந்த பதிப்பகங்களில் அப்புத்தகம் வெளியிட முயற்சித்தபோது நிராகரித்ததும், பணம் கேட்டதும் ஏன்? ஆக இவர்கள் வைக்கோலில் கட்டிய நாய் மாதிரி தானும் தின்னாது. தின்பதையும் விடாது.

அன்று எனது பார்வையில் அவ்வாறு என்றால் இன்று நான் உட்பட என்னை பெத்த தாய் உட்பட இவ்வுலகில் உள்ள அனைத்தும் விமர்சனத்திற்குட்பட்டவை என்பதுதான் சரியாக இருக்கும்.

விமர்சனம் என்று வரும் போது எதிர்களத்தில் கொண்டு போய் நிறுத்துவது என்பது ஜனநாயகத்திற்கு எதிரான போக்கு, ஆபத்தானது. விமர்சனத்தை மறுக்கும்போது அங்கு சர்வதிகாரம் தானாக வந்துவிடும். எதிர்களத்தில் நின்று விமர்சிப்பது என்பது வேறு. என்னை நானே மறுபரிசீலனைக்கு உட்படுத்துவது வேறு நான் எப்போதும் எதிர்களத்தில் நிற்பவனில்லை நான் உட்பட எல்லாமே விமர்சனத்திற்கு உட்பட்டது என்பதில் எனக்கு மாற்றுக்கருத்தில்லை.

*குற்றங்களுக்கு எதிர்வாதம் செய்து சீறும் மனிதனாக உங்களை இனக்காட்டி இருக்கிறீர்களோ?*

குற்றங்களுக்கு எதிர்வாதம் என்பதை விட அடக்குமுறைக்கு எதிர்வாதம் என்பது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

கிட்டத்தட்ட எட்டு வருடம் சென்னை வாழ்க்கைக்கு பின்பு முகாம் வரும் போது ஒரு உண்மை எனக்கு தெரிந்தது. தமிழ்நாட்டு தமிழ் மகனுடைய வாழ்க்கை முறை எப்படியிருக்கிறது. இந்த அகதிகளின் வாழ்க்கை முறை, தரம் எப்படியிருக்கிறது என்ற உண்மை புரிந்தது... ஈடு செய்ய முடியாத பெரிய இடைவெளி. நான் சம உரிமை கோரவில்லை; மனிதனாக பிறந்ததனால் பிறப்பால் வந்த அடிப்படை உரிமை பற்றியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எதிராக எழுதியிருக்கிறீர்கள் என்றார். நீங்கள் அப்புத்தகம் படித்தீர்களா? இல்லை. படிக்காமலேயே புத்தகத்தை நிராகரிப்பது அறிவுடையோர் செயலா?**

பேசுகிறேன். நாம் அனைவரும் தமிழர்கள். ஆனால் வாழ்க்கைமுறை, பழக்கவழக்கம், பண்பாடு, கல்வி, பொருளதாரம், அடிப்படை உரிமை அனைத்தும் மறுக்கப்பட்ட தமிழ் சமூகம் (அகதி) தமிழ்நாட்டில் வாழும் போது அரசியல் ஆதாயத்திற்காக வாங்காமல் தொப்புள்கொடி உறவு என்கிறார்களே.

அன்று முதல் இன்றுவரை ஈழத்தமிழனுக்காக போரடினோம் என்று பத்திரிக்கையில் பக்கம் பக்கமமாக எழுதுபவர்கள் அத்தகைய அவர்கள் போராட்டத்தால் ஈழத்தமிழன் வாழ்வில் என்ன மாற்றம் ஏற்பட்டது என்பதை இதுவரை எழுதாதது ஏன்? ஏன் என்றால் அவர்கள் போராட்டத்தால் எந்த மாற்றமும் ஏற்பட்டதில்லை.

தமிழ் தேசியம் பேசுபவர்களாக இருக்கட்டும். திராவிடக் கட்சிகளாக இருக்கட்டும். ஏதாவது ஒரு அமைப்பு அகதி முகாமிற்குள் கால் வைக்க முடியுமா? ஒன்றை மட்டும் அழுத்தமாகப் பதிவு செய்கிறேன். தமிழ்நாட்டு தமிழர்கள் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்டதை விட ஈழத்தமிழர்கள் அதிகமாகப் பல தடவைகள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள அரசியல்வாதி, சினிமாக்காரன், ஊடகம், பத்திரிக்கை, புத்தகம் அனைத்தும் விற்பனையாக ஈழத்தமிழன் என்ற சரக்குத் தேவைப்படுகிறதே எத்தனை நாளைக்கு நான் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இதையேசிக்கும் போது எப்படி எதிர்வாதம் இல்லாமல் இருக்கமுடியும்?

எதிர்க்களத்தில் உள்ள சிங்களவன் இருக்கட்டும், அவனுக்கு துணைபோகும் மத்திய அரசு இருக்கட்டும், ஆனால் தமிழனை. தமிழனே அடிமைப்படுத்துவது வாழ்வைச் சுரண்டுவது என்பது ஏற்கக் கூடியதா? சிங்களவன் தமிழனை கருவறுத்து விட்டான். தமிழ்நாட்டில் உள்ள அகதிகளுக்கு தமிழ்நாட்டில் ஆண்ட அரசுகள் உளவியல் ரீதியாகக் கருவறுத்துவிட்டார்கள்.

தமிழ்நாட்டில் வாழக்கூடிய அகதிகள் என்னையும் சேர்த்து ஒருலட்சம் பேர். இலங்யையில் இருந்திருந்தால் கூடுதலாக பத்தாயிரமோ, இருபதாயிரமோ சிங்களவன் கொன்று விட்டான் என்று இங்குள்ள கட்சிகள் அரசியல் பேசியிருப்பார்கள். அதில் ஏதாவது ஒன்று, இரண்டு ஓட்டுப் பிச்சை கிடைத்து, பிழைப்பு நடத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்து சேர்த்திருக்கலாம். அல்லது வெளிநாட்டில் வாழ்ந்திருந்தால் சினிமா வியாபாரம் செய்து கல்லாப் பெட்டி நிரப்பியிருக்கலாம். அப்பப்ப அரசியல்வாதிகள் வெளிநாடும் கூடுதலாக பேய்வரலாம் தொப்புள் கொடி உறவு என்று கூறி, அதுவுமில்லை எதுக்கும் உதவாமல் மக்கள் வரிப்பணத்தை கரையான் போன்று இந்த அகதிகள் அரித்துக் கொண்டிருக்கிறார்களே என்று எந்த அரசியல்வாதியாவது எந்த IAS அதிகாரியாவது யோசிக்க வேண்டும். இவர்கள் வெறும் எண்ணிக்கைக்கு மட்டுமே வாழும் போது என்ன செய்ய? வெளிநாட்டில் உள்ள பணக்கார அகதி கூப்பிட்டால் அரக்கப் பரக்க ஓடுபவர்கள் தமிழ்நாட்டு அகதிமுகாமிற்குள் கால்வைக்க முடியுமா?

**இவர்கள் வைக்கோலில் கட்டிய நாய் மாதிரி தானும் தின்னாது. தின்பதையும் விடாது.**

இவர்கள் பயத்தை போக்குவதற்காக எனது புத்தகத்தை பரவலாக எல்லாம் முகாம் மட்டத்திலும் கொண்டு செல்ல வேண்டும் என்று ஒரு தொண்டு நிறுவனத்தை அணுகினேன். ஆனால் இந்த மக்கள் இப்படி இருப்பதைத்தான் விரும்புகிறார்கள் என்பது புரிந்தது. காரணம் அப்போது தான் அவர்கள் பிழைப்பு நடத்த முடியும்.

*கடலில் வள்ளம் மூலம் பயணித்து ஒரு அகதியாக ராமேஸ்வரத்தில் நுழையும் போது எப்படி உணர்ந்தீர்கள்?*

நேற்று நடந்தது போல் இருக்கிறது. இருபத்திரண்டு வருடங்களைத் தாண்டி அன்று ராமேஸ்வரத்தில் குத்தப்பட்ட அகதி முத்திரையுடன் தொடர்போராட்ட மாகவே வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கிறது.

1990ல் யாழ்ப்பாணம் குருநகரில் பாதிரியார் விடுதியிலிருந்து படித்துக் கொண்டிருந்தேன். யாழ்கோட்டையில் நடுராத்திரியில் யுத்தம் ஆரம்பமானது. காதைப் பிளக்கும் ஒரே வெடிச்சத்தம், கிறிஸ்துவ கோவிலில் அடைக்கல மாகியிருந்தோம். செல் அடியில் கோவில் முகப்பு உடைந்து போனது. ஒருவாரம் கழித்து மன்னார் வந்து சேர்ந்தேன். எனது ஊர் பதட்டமாக பரபரப்பாக இருந்தது. மாறுபட்ட தகவல்கள், ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு கதையாக வந்து கொண்டிருந்தது. எங்கள் ஊரைப் பொறுத்தவரை இளம் வயதினரையே தமிழ்நாட்டிற்கு அனுப்பினார்கள். 16 வயதில் அந்த பிரச்சனையின் அடியும் தெரியாது, தலையும் தெரியாது, 2 அண்ணன், 2 அக்காவுடன் அம்மா என்னை அனுப்பினார்கள். எனக்கு இந்தியாவைத் தமிழ்நாட்டை பார்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. 3 மாதம் தமிழ்நாட்டை சுற்றிவிட்டு அதற்குள் பிரச்சனை சரியாகிவிடும், பின்பு ஊருக்கு வந்துவிடலாம் என்ற எண்ணத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனவிலும் நினைக்கவில்லை. தமிழ்நாட்டில் அடிமை யாக்கப்பட்டு, நம் சுதந்திரம் பறிக்கப்பட்டு வாழ்க்கை தொலைந்து போகும் என்று.**

புறப்பட்டேன்.

தலை மன்னாரில் ராணுவ முகாமைக் கடந்து வர பல மயில் தூரம் ஒத்தையடிப் பாதையைக் கடக்க வேண்டியிருந்தது. ஒத்தையடிப் பாதையைத் தவிர்த்து எங்கும் கால் வைக்காதீர்கள், கன்னி வெடி இருக்கிறது என்றார்கள். முன் செல்பவரின் காலடித் தளத்தில் கவனமாக கால்வைத்து நடந்து கடற்கரை வந்து சேர்ந்தோம். கடற்கரையில் சிறிய கோவிலில் படகுக்காகக் காத்துக் கொண்டு இருக்கும் போது பாதிரியாரும், இன்னும் சிலரும் அவ்வழியாகக் கடந்து சென்றார்கள். கடலில் அழுகியநிலையில்மனிதஉடல்ஒதுங்கியுள்ளதாம். அதை அடக்கம் செய்ய செல்கிறார்கள் என்றார்கள். அய்யோ அப்போ நாம் போய் சேருவோமோ பயம் தொற்றிக் கொண்டது. சில மணி நேர காத்திருப்புக்குப் பின் கூறினார்கள். கடவில் நேவிக்காரன் வருகிறான். எல்லோரும் அப்படியே படுத்துக்கொள்ளுங்கள். வேண்டாத கடவுள் இல்லை. சிலர் அழவும் செய்தார்கள். சிறிது நேரத்தில் படகு பழுதாகிவிட்டது. சரி செல் லுங்கள் என்றார்கள். இருட்டு ஒரு பக்கம் பயத்தைக்கூட்டிக் கொண்டிருந்தது. நடு இரவில் படகு வந்தது. எல்லோரும் ஏறிக்கொண்டோம். அலை அடித்து அடித்து அவ்வப்போது. விடியும் போது இடுப்பளவு தண்ணீர், ராமேஸ்வரத்தில் இறக்கிவிட்டார்கள். தமிழ் சினிமாப் பாட்டு இதமாக வரவேற்றது. ஒரு சினிமா நடிகரையாவது பார்த்துவிட்டுத் தான் ஊருக்குத் திரும்ப வேண்டும் என்று அப்போது நினைத்தேன்.

நான் மன்னாரில் விவசாயப் பகுதியாக இருந்தாலும், தலைமன்னார் பரிட்சய மாகவே இருந்தது. அது போல் தான் ரமேஸ்வரமும் இருந்தது. தடுப்பூசி போட்டார் கள். சமைத்த உணவு கொடுத்தார்கள். அதன் மணம் இந்திய இராணுவத்தை நினைவுபடுத்தி எரிச்சல் கொள்ள வைத்தது மட்டுமன்றி வாந்தி எடுக்கவும் வைத்தது. பதற்றமான சூழ்நிலையில் பத்திரமாக ராமேஸ்வரம் வந்து இறங்கியது மிகுந்த சுதந்திரமாக உணர்ந்தேன். இனிமேல் எவரும் எம்மை எதுவும் செய்ய முடியாது என்ற மனநிலை இருந்தது.

அப்போது கனவிலும் நினைக்கவில்லை. தமிழ்நாட்டில் அடிமையாக்கப்பட்டு, நம் சுதந்திரம் பறிக்கப்பட்டு வாழ்க்கை தொலைந்து போகும் என்று. மண்டபம் முகாம் மணல் மேட்டில் மூன்று நாட்கள் தங்க வைக்கப்பட்டு வேறு முகாமுக்கு மாற்றப்பட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சீமான் ஈழத்தமிழர்களின் பிரதிநிதியாக உருவெடுத்திருக்கிறார் வைகோ பலமாகக் குரல் கொடுத்திருக்கிறார் இவை எல்லாம் ஆதரவு இல்லையா?*

தொடர்ந்து ஈழத்தமிழர்கள் ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறார்கள் அதன் தொடர்ச்சி தற்போது யாரை நம்புவது யார் உண்மையில் உணர்வுபூர்வமாகச் செயல்படுகிறார்கள் என்பது ஒரு கேள்வியாகவே இருக்கிறது. நாங்கள் தான் விடுதலைப்புலிகளின் வாரிசு, ஆயுதம் தூக்காத விடுதலைப்புலி என்று கூறியவர்கள் கூட ராஜபக்சேவிடம் பரிசு வாங்கிய வரலாறு உண்டு. இதை எல்லாம் பார்க்கும்போது இவர்கள் மலிவான அரசியல் ஆதாயத்திற்காக நாடகம் ஆடுகிறார்கள் என்றுதான் பொதுக்களத்தில் உள்ளவர்கள் நினைக்கிறார்கள். புதிது புதிதாகக் கட்சி ஆரம்பிப்பவர்களும், ஈழத்தமிழர்களுக்காக என்று ஆரம்பித்தவர்களும், அமைப்புகளை உருவாக்குபவர்களும் நாளை எப்படியிருப்பார்கள் அவர்கள் செயல்பாடு என்ன என்பதை காலம் தான் தீர்மானிக்கும்.

இவர்கள் எல்லாம் இங்கிருந்து மேடை போட்டு பேசியும் இன்னும் பொதுக்களத்தில் உள்ள சிலர் பிழைக்கப் போனவர்கள் ஏன் நாடு கேட்கிறார் கள் என்ற கேள்வி இன்னும் எழத்தான் செய்கிறது.

ஈழத்தமிழர்களை வைத்து இவர்கள் முன் எடுத்த அரசியல் நிலைப்பாடுகள் பெரிய மாற்றத்தைத் தேர்தல் களத்தில் பிரதிபலித்தாகவும் எனக்கு தெரியவில்லை.

நான் மட்டும் சிறுபிள்ளைத்தனமாக அப்படி கூறவில்லை பிரபல மேடைப் பேச்சாளர் ஒருவரிடம் பேசும்போது, அவரும் இவ்வாறு ஒற்றை வரியில் கூறுகிறார். இவர்கள் அரசியல் ஆதாயத்திற்காக மட்டுமே ஈழத்தமிழர் பற்றிப் பேசுகிறார்கள் என்று.

*“ஈழத்தமிழர் குறித்து நீங்கள் பேசக்கூடாது, இல்லை நாங்கள் ஏன் பேசக்கூடாது?” இப்படி குழாய் அடிச் சண்டை கூட நடக்கிறதே இதை எல்லாம் எந்த வகையில் எடுத்துக்கொள்வது?*

வைகோ, பழநெடுமாறன் போன்றவர்களுக்கு ஈழத்தமிழர்களுடன் அவர்கள் வாழ்க்கையில் நீண்ட பயணம் உண்டு. செங்கல்பட்டு சிறப்பு முகாம் முதல் கொண்டு, இன்றுவரை அவர்கள் நிலைப்பாட்டில் இரட்டை நிலையில்லை. சுய லாபம் தாண்டி, அவர்கள் தியாகம் ஆண்டுக்கணக்கான சிறை வாசம், இதனை மறைப்பதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநலமற்ற இன உணர்வாளர்கள் இங்கு இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள்.

புலம் பெயர்ந்த வெளிநாட்டு வாழ்தமிழர்கள் மத்தியிலும், இங்கும் கூட, அரசியல் சாட்சிகளில் ஒரு சிலரை கதாநாயர்களாகக் கருதுகிறார்கள். அவர்கள் செயற்பாடுகள் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதா என்பது ஒரு கேள்வி. அவர்கள் ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வார்களா? அதற்குத் தகுதியானவர்களா? என்பது காலம் தான் பதில் சொல்லும்.

*அகதி முகாம்கள் எங்களுடைய மக்கள் தான் ஆனால் அவர்கள் தம்நிலை மறந்து சீரழிவுகளோடு இணங்கியிருக்கிறார்கள். இது பற்றிய ஆட்சேபனை இல்லையா உங்களுக்கு?*

நிறையவே உண்டு. தமிழ்நாடு வாழ் அகதிகளின் அடிப்படையை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். 90களில் கிட்டத்தட்ட ஒரு லட்சத்தி எழுபதாயிரம் பேர் அகதியாக தமிழ்நாடு வந்தார்கள். அதன் பின்பு ஈழத்திற்கு கணிசமானவர்கள் திரும்பினார்கள். மறுபடியும் 2006ம் ஆண்டு மறுபடியும் அகதியாக வந்தார்கள். 2009ம் ஆண்டுக்குப் பின்பு கிட்டத்தட்ட 65 ஆயிரம் பேர் மட்டுமே முகாமிற்கு வெளியே முப்பதாயிரம் பேர் இருக்கிறார்கள் அவர்கள் கதை வேறு. முகாமில் தற்போது வசிக்க கூடியவர்கள் சமூக அமைப்பில் கீழ்தட்டு மக்கள் அதிலும் மூன்றில் ஒரு பகுதி (புள்ளி விபரம் இல்லை இது எனது கணிப்பு) இந்திய வம்சாவழித் தமிழர்கள். இவ்வாறு பூர்வீக ஈழத்தமிழர் இந்திய வம்சாவழித்தமிழர் என்று முகாமில் வெளிப்படையாக பிரித்து பார்ப்பதில்லை.

இத்தகைய மக்களை இலகுவாக Q பிரிவின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு இரையாகி விடுகிறார்கள். உணர்வற்றவர்களாக இருக்கிறார்கள். இந்த முகாம் மக்களின் போக்கு, வளர்ச்சி ஆரோக்கியமானதாக இல்லை. இவர்கள் மனநிலை ஈழம் கிடைக்கக்கூடும், நாம் அங்கு போவோம். ஈழம் கிடைக்கிறதுக்கு நம்மால் இங்கிருந்து ஜனநாயக ரீதியாக ஏதாவது செய்ய முடியுமா என்றால் அதற்கு அவர்களிடம் பதில் இல்லை. ஈழத்தில் என்ன நடந்தது என்பது கூட அறியாத இளைய தலைமுறையுமிருக்கிறது.

ஒருமுறை ஒரு தொலைக்காட்சியை அரசுக்கும், Q பிரிவுக்கும் தெரியாமல் முகாமிற்குள் கூட்டி வந்து இம்மக்களை பேசச் சொன்னேன்.

தொலைக்காட்சி நிருபர் ஒரு பெண்மணியிடம் நீங்கள் இங்கு வாழ்வதில் என்ன பிரச்சனைகள் இருக்கிறது என்றார்.

அதற்கு அந்தப் பெண் எங்களுக்கு ஒரு பிரச்சனையுமில்லை, நாங்கள் நல்லா யிருக்கிறோம் என்றார். இவர்கள் ஓலைக் கொட்டிலில் பல ஆண்டுகள் வாழ்வது பிரச்சனையுமில்லை, அது ஒரு பக்கமாக மழைக்கு ஒழுகுவது பிரச்சனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில்லை, பள்ளிக்கூடம் போகும் பையன் வேலைக்குப் போவது பிரச்சனையில்லை, பக்கத்து மாவட்டத்திற்கு போவதற்கு அலையலை என்று அலைஞ்சு லஞ்சம் கொடுத்து, காத்துக்கிடந்து அனுமதி வாங்கிச் செல்வது எல்லாம் பிரச்சனையில்லை என்றால் இவர்கள் எப்படிப்பட்ட மக்களாகயிருப்பார்கள். இலவசத்தைத் திம்போம், இருக்கும்வரை இப்படியே வாழ்வோம் என்ற நிலை தான் இங்கு இருப்பது வேதனையாக இருக்கிறது. 2006ம் ஆண்டு மறுபடியும் நான் முகாம் வந்ததும் படித்த இளைஞர்களை எல்லாம் ஒன்று சேர்த்து ஈழவர் கல்வி மேம்பாட்டு மையம் என்ற ஒரு அமைப்பை முகாம் வாழ் இளைஞர்கள் ஒரு சிலர் ஒத்துழைப்புடன் ஆரம்பித்தேன். ஆயிரம் முட்டுக்கட்டை, ஒத்துழைப்பு இன்மையில் ஆரம்பித்த சில மாதங்களில் அது நின்று போனது. Q பிராஞ்சுக் காரன் மிக்க மகிழ்ச்சியடைந்திருப்பான். அவனுக்கு ஒரு தலைவலி குறைந்தது மேலதிகாரிகளுக்கு அறிக்கை அளிக்கும் வேலை குறைந்திருக்கும்.

அது மட்டுமல்ல முகாமிற்கு வெளியே இருக்கும் முப்பதாயிரம் பேரையும் ஒன்றிணைத்து குடியிருப்போர் நலச்சங்கம் ஆரம்பிக்கலாம் என்ற எண்ணத்தில் சிலரிடம் பேசினேன். என்னைத் தவிர யாரும் அது பற்றி பேசத் தயாராகவே யில்லை. எல்லாருக்கும் முதலில் வாயிலிருந்து வரும் வார்த்தை Q பிரிவுக்காரன் விடமாட்டான்.

இம்மக்களை இவ்வாறு உணர்ச்சியற்றவர்களாக ஆக்கியதற்கு முக்கிய காரணம் இங்குள்ள அரசும், அரசு உத்தரவை செம்மையாகத் திறம்படச் செயல்படுத்தும் Q பிரிவும் தான் என்பதை அழுத்தமாகப் பல தடவை பதிவு செய்திருக்கிறேன்.

முகாம்களில் சீட்டாட்டம் பற்றி போரின் மறுபக்கத்தில் பதிவு செய்திருக்கிறேன். குழந்தைத் திருமணம் பற்றிப் பதிவு செய்திருக்கிறேன். ஆனால் இவர்களை மாற்றுவதற்கான வழிதான் தெரியவில்லை. அதற்கு ஒரு காரணமும் உண்டு. இம்முகாம் மக்கள் ஈழத்தில் பல பகுதியை சேர்ந்த பல சமூகத்தை சேர்ந்தவர்கள். இவர்களை ஒன்றிணைக்கக் கூடியபுள்ளி ஈழத்தமிழர்கள் என்பது மட்டுமே. ஆனால் இவர்கள் ஈழம் என்ற வார்த்தையைக் கூட பயன்படுத்தத் தயங்குகிறார்கள். அதுமட்டுமின்றி 65 ஆயிரம் பேரும் தமிழ்நாடு முழுவதும் பிரிந்து கிடக்கிறார்கள். இவர்களை ஒன்றிணைப்பது மிகவும் சிரமமான விஷயம். முகாமிற்கு வெளியே உள்ள தனிநபரோ அமைப்போ உள்ளே வர அனுமதியில்லை. தொண்டு நிறுவனத்தைக் கூட சில காலம் அரசு அனுமதிக்கவில்லை. ஆனால் தற்போது பிரதானமாக மூன்று தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு தொண்டு நிறுவனம் எப்படி எல்லாம் இருக்கக்கூடாதோ அப்படித்தான் அன்று முதல் இன்று வரை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இவர்களுக்கு தமிழ்நாட்டு முன்னாள் அரசுடன் நெருங்கிய பாரம்பரிய உறவுண்டு, அவர்களை ஏன் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டதற்கு ஆளில்லை. அவர்கள் பண்ணை வீடு கட்டிக்கொண்டால் பரவா யில்லை. அவர்கள் விடுதலைப்புலிகளுக்கு எதிரான மனநிலையை இம்மக்கள் மத்தியில் திணித்தார்கள். அவர்களுக்கு சாதகமானவர்களுக்குச் சலுகைகள் காட்டப்பட்டது.

*வெறுமனே அரசையே குற்றம் கூறிக்கொண்டிருப்பதில் உடன்பாடா? அவர்கள் கொடுப்பதை முகாமில் உள்ளவர்கள் விற்பதாகவும் தகவல்கள் வெளியாகிறதே?*

அரசை மட்டும் குற்றம் கூறுவது நியாயமானது இல்லை. ஆனால் அகதிகள் பற்றியும் விமர்சனம் உண்டு. அதையும் வாய்ப்புக் கிடைக்கும் போது பதிவு செய்திருக்கிறேன். என்னையும் உள்ளடக்கியிருக்கிறேன். ஆனால் அதிகமாக அரசைக் குற்றம் சாட்டியிருக்கிறேன் என்பதே உண்மை.

காரணம் அடிப்படையே எனக்குப் பிரச்சனையாக உள்ளது. எங்களை சுயமாகச் சிந்திக்கவும் அனுமதிக்கவில்லை. சுதந்திரமாகச் செயல்படவும் அனுமதிக்க வில்லை. என்னைச் சுயமான சிந்தனையுடன் சுதந்திரமாகச் செயல்பட அனுமதித்தால் தானே நான் அரசை எதிர்பார்க்காமல் எனது வாழ்க்கைக்கான மாற்று வழியை நோக்கிச் சிந்திக்க முடியும். திறந்த வெளியில் என்னை அடைத்து வைத்தால் என்னை திறந்து விடுங்கள் என்று அடைத்து வைத்திருப்பவர்களிடம் தான் நான் கேட்க முடியும்.

அகதிகளுக்கு என்ன தேவையோ அதைச் செய்ய வேண்டும். போன ஆட்சியில் முக்கியமாகத் தொலைக்காட்சிப் பெட்டி கொடுத்தவர்கள் அதை ஏன் கொடுத்தார்கள், ஆட்சியைப் பிடிப்பதற்கு மட்டுமன்றி அவர் வாரிசுகளின் வியாபாரத்தையும் பெருக்கிக் கொள்ள. அதையே அகதிகளுக்குச் செய்கிறோம் என்று செய்ததையும் விட கூடுதலாக விளம்பரமும் செய்து கொண்டார்கள். அதைத்தான் இந்த அரசும் செய்கிறது.

*இளைஞர்கள் முகாம்களில் எவ்வாறாக இருக்கிறார்கள்?*

ஜீவன் முகாமில் வாழக்கூடிய எனது நண்பர். அவர் முகாமில் ரத்ததான முகாம் நடத்த அரசிடம் அனுமதிக்காக எவ்வளவு அலைந்தார் என்பது எனக்குத் தெரியும். மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர், வருவாய்த்துறை அதிகாரி, Q பிரிவு. எல்லா இடத்திலும் அலட்சியம். அவர் வேலையைக்கூட விட்டுவிட்டு பிடிவாத மாக மாதக் கணக்கில் அலைந்து அந்த ரத்ததான முகாமை நடத்தினார்.

அவர் பெயரைப் போன்றே அவர் செயல்பாடுகளும். கோவில்பட்டியில் படிக்க வசதியில்லாத ஒரு பெண்ணுக்கு பொறியியல் படிப்பிற்கு உதவியதாகவும் அந்த உதவி எத்தகையது எனவும் கூறினார். இவர் லயன்ஸ் கிளப்பில் இணைந்து இது போல பல கல்விக்கான உதவிகள் செய்வது எனக்குத் தெரியும். அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடம் கேட்டேன் இந்த மாதிரியான உதவிகளை ஏன் முகாமிற்குள் செய்வதில்லை? அவர் கூறினார்.

பசித்தவர்களுக்குத் தான் உணவு தேவைப்படும், இவர்கள் எவருக்கும் பசியில்லை. படிக்கணும் சாதிக்கணும் என்ற தீவிரமான நிலையிலிருந்து வாய்ப்பில்லையே என்றவர்கட்கு உதவலாம் என்றார். இப்படித்தான் முகாம் இளைஞர்கள் இருக்கிறார்கள்.

முகாம்களில் தற்போது கல்லூரி படிப்பவர்கள் குறைந்து கொண்டு வருகிறதற்குக் காரணம் படித்துவிட்டு கூலிவேலை செய்வதை விட, படிக்காமலேயே கூலி வேலைக்குப் போகலாம். படிக்கச் செலவு செய்வது செய்யாமலிருப்பது லாபம் என்ற மன நிலையில் இருக்கிறார்கள்.

**எங்களுக்கு இலவசமோ, உதவித்தொகையோ தேவையில்லை, எங்களுக்கு தேவை சுதந்திரமான வாழ்க்கை இங்கு வாழும் வரை.**

*எப்போதாவது தோன்றியதுண்டா ஊரைவிட்டு இப்படி வந்துவிட்டோமே? உறவுகளுக்கும் ஊருக்கும் அங்கிருந்து பங்களிப்புச் செய்யவில்லை என. இலங்கையில் வாழ்ந்த நினைவுகளை எப்படி உணர முடிகிறது?*

போரின் மறுபக்கத்தில் எனது வீட்டை அழகாக வர்ணித்திருப்பதாகப் பலர் கூறினார்கள். அந்தளவு திறமையானவனில்லை நான், ஆனால் அடிமனத்தில் அவ்வாறு பதிவாகியிருந்தது வெளிப்பட்டிருக்கிறது. ஊரைப்பற்றிய ஏக்கம் அடிவயிற்றிலிருந்து தொண்டைக் குழிவரை அவ்வப்போது வந்து முட்டி முட்டிச் செல்கிறது.

நான் இந்திய அகதியாக (1990) வரும் போது குழந்தைகளாக இருந்த அக்கா பிள்ளைகள் எல்லாம் போராட்டத்தில் போராளிகளாக இறந்திருக்கிறார்கள். அதன் பின்பு பிறந்த குழந்தைகள் (எனக்குத் தெரியாது) கூட குமரியாகி கல்யாணம் ஆகி குழந்தையும் பெற்றிருக்கிறார்கள். நான் ஈழத்தில் வாழ்ந்ததை விட வாழ்நாளில் அதிகமாக (22 ஆண்டுகள்) அகதியாகவே தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

என் அம்மாவுக்கு காது கேட்காது, கண் தெரியாது. நான் பேசினால் (தொலைபேசியில்) அவரால் கேட்க முடியாது. நேரில் போனாலும் அவரால் என்னைப் பார்க்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து உறவுகளுடன் செத்திருந்தாலும் பரவாயில்லை என்று பல தடவைகளில் நினைத்ததுண்டு. வீட்டில் நான் பன்னிரண்டாவது பிள்ளை என்பதால் வீட்டுக்கு உறவுகளுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற சூழல் நெருக்கடி எனக்கில்லை. ஆனால் என் நாட்டிற்காக ஒரு துரும்பைக் கூட நகர்த்தவில்லை என்ற வருத்தம் வாழ்நாள் முழுவதும் இருக்கும்.

அன்றைய சூழல் அறியாப் பருவத்தில் அகதியாக விரட்டிவிட்டது. வாழ்க்கையில் அழியாத வடுவாக மாறியுள்ளது. குற்ற உணர்வு இருக்கவே செய்கிறது.

*கவிதை தவிர வேறு துறைகளில் ஆர்வம் உண்டா? சிறுகதைகள் ஏதாவது எழுதியதுண்டா? பத்திரிக்கை இதழ்களில் தொடர்ந்து எழுதுவதில்லையா? போரின் மறுபக்கத்திற்கு பிறகு எந்த நூலும் வெளிவந்ததாகத் தெரிய வில்லையே?*

வெளிப்படையாக ஒன்றை நான் ஒத்துக் கொள்கிறேன். நான் இலக்கியவாதி யில்லை. எனது நண்பர் மூலமாக 2001ல் தான் புத்தகம் படிக்கவே ஆரம்பித்தேன்.

புத்தகம் எழுதி அதை வெளியிடுவதற்கான போராட்டமே எனக்கு மிகுந்த மனஉளைச்சலை ஏற்படுத்தியிருந்தது. எல்லாப் பத்திரிகைகளுக்கும் ஒரு அரசியல் இருக்கிறது. கதை, கவிதை, சிறுகதை இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒரு வர முறையிருக்கிறது. இப்படி எதற்கும் கட்டுப்பட்டு என்னால் எழுத முடியாது. அகதி முகாம் குறித்து ஒரு பதிவைக் கொண்டு வர வேண்டும் என்பது எனது கனவு.

*முகாம்களில் கவிஞர்கள் எழுத்தாளர்கள் கலைஞர்கள் திறமை வாய்ந்த வர்கள் இருப்பதாக அறிந்திருக்கிறேன். இவர்கள் பற்றி கூறமுடியுமா? இவர்களை முன்னேற்றுவதில் தங்கள் பங்களிப்பு ஏதாவது இருக்கிறதா?*

எனக்குத் தெரிந்த முகாம்களில் கவிஞர்கள் இருந்ததாகத் தெரிய வில்லை. இரண்டு நண்பர்களைத் தெரியும். ஒருவர் இலங்கையில் கவிதைகள் எழுதியவர், ஆனால் இங்கு அவர் எழுதவில்லை. மற்றொரு நண்பரும் அவ்வாறு முன்பு எழுதியவர் தற்போது எழுதுவதில்லை. அப்படியும் எழுதுபவர்களாக இருந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ளத் தயக்கம்.

தமிழ்நாட்டில் வாழக்கூடிய ஈழத்தமிழ் அகதிகள் குறித்து நிறையப் பதிவுகள் வரவேண்டும் என்பது எனது ஆசை. நானும் பலரை ஊக்கப்படுத்தியிருக்கிறேன். எழுதி மட்டும் கொடுங்கள் நானே வெளியிட ஏற்பாடு செய்கிறேன் என்றும் கூறியிருக்கிறேன். ஆனால் எந்தப்பதிவும் அகதிகள் மத்தியிலிருந்து வந்ததாக எனக்கு தகவல் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஒரு எழுத்தாளனாக தாங்கள் இந்தப்பத்திரிக்கை மூலம் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

அகதியாகத் தொடர்ந்து நாங்கள் இப்படியே வாழ விரும்பவில்லை. தொடர்ந்து தற்காலிகமாக 22 வருட வாழ்க்கையில் இழந்தது அதிகம். இந்த ஒட்டு மொத்த ஈழ அகதிகளின் எதிர்காலம் தொடர்ந்து கேள்விக்குறியாகவே இருக்கிறது. அதுவே அவர்களுக்கு சலிப்பையும், வெறுப்பையும் ஏற்படுத்தி யிருக்கிறது. தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த பயம், கவலை இருக்கிறது. அதே வேளை இங்கு நிரந்தரமாக வாழ வேண்டும் என்றும் அவர்கள் நினைக்கவில்லை.

அரசுக்கு இத்தனை ஆண்டுகளாக இவர்கள் சுமையாகவே இருக்கிறார்கள். மக்களின் வரிப்பணம் இவர்களுக்கு உதவித்தொகையாக வழங்கப்பட்டுக் கொண்டிருப்பது ஏன்? என்பதை ஆழமாக யோசிக்க வேண்டும் உதவித் தொகையும், ரேசனும் கொடுக்கும் வரை அரசு இவர்களை அடிமையாகத் தான் வைத்திருக்கும்.

ஆகவே உதவித்தொகை வழங்குவதை நிறுத்த வேண்டும். அதற்கு முன்பாக அவர்களுக்கான கட்டுப்பாடுகள்அனைத்தையும் நீக்கிவிட்டு எங்களுக்கு சமூக பொருளாதார கல்வி மேம்பாட்டிற்கான வாய்ப்புகளை கூடுதலாக ஏற்படுத்த வேண்டும்.

சுருக்கமாக, அழுத்தமாக பதிவு செய்வது ஒன்றே ஒன்று தான். எங்களுக்கு இலவசமோ, உதவித்தொகையோ தேவையில்லை, எங்களுக்கு தேவை சுதந்திரமான வாழ்க்கை இங்கு வாழும் வரை.

உங்கள் படைப்புக்களையும், விமர்சனங்களையும்
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.
தரமான படைப்புகளை பிரசுரிக்கப்படும்.

<u>அனுப்ப வேண்டிய முகவரி</u>

நெ.6. முதலாவது மாடி, 27-வது தெரு,
பிள்ளையார் கோவில் முன்பாக, கிருஷ்ணா நகர்,
மதுரவாயில், சென்னை-95. தமிழ்நாடு
Phone: 0091 9600131346,
Email. pouvarashi@gmail.com


(படைப்பிற்கும் அதில் இடம் பெறும் கருத்துக்களுக்கும் படைப்பாளிகளே பொறுப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் அகரமுதல்வன் கவிதை

# என் ஜீவிதம் மறுபடியும் நிமிரும்



கடியிருளில் இன்னுயிரைக் காவுகொள்ளும்
பெரும் விகார உருவமொன்று
என்னை மிரட்டி மிரட்டியே தோற்கிறது
சுயமிழந்த கனவுகளிலும்
விடுதலைக்காய் திரிந்த காலங்களில்
களங்கள் தோறும் நான் பதிந்த
தடயங்களை கண்வீசித் தேடுகிறேன்

ஒரு சகாப்தத்தின்
தேச இருளகற்றிய விளக்குகளாய்
எனது கரங்களுமென
எண்ணியபடியிருக்க
வாழ்வைக் குடிக்கிறது விரையும் காலம்

தோற்றுப்போன வலியோடு
கூற்றெனவே வரும் பகையை
கொன்றபடி நான் வெல்வேன்...

செத்துவிடமாட்டேனெனச் சூளுரைத்து
உறுதியாக உருளும்
அகதி வாழ்விலும்
அமைதியாக நான் மீள வளர்கிறேன்
வரிகளோடும் புது நகங்களோடும்
இறுதிப் பாய்ச்சலுக்காய்

சுதந்திரப் பண்
பாடியபடி வீதியுலா வந்தளம்
வசந்த வாழ்வு
விதவையானது காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிப்பொறுத்தல் இழிவு
சுயமாகி வருகிறேன்
அன்னை மண்ணுக்கு

உன் வீட்டுத் திண்ணையில்
“அட்டணக்கால்” போட்டபடி
அமெரிக்காவைத் திட்டி என்ன பயன்

கொட்டாவி விட்டபடி மானமிழக்காதே
முட்டாள் தமிழா
உன் வீட்டு உரிமை மீட்க ஒபாமா
ஏன் வர வேண்டும்

எரியுமெம் தேசத்தை
மனதில் பொறித்தபடி
பகையின் உடல் மீதே
வரியோடு எம் நகம் கீறி
பழையபடி பயணம் போவேன்

எனக்கு நன்றாய் தெரியும்
பெற்ற மண்ணுக்காய் தந்த விலை
வீணாய்ப் போகாது
முற்றுப் பெறும் வரை முயற்சி
தோற்றுப் போகாது

கண்ணீரால் கரையும் வாழ்வு
காணாமல் போவதற்கு
கயவன் உயிர் குடித்து
கந்தகமாய் உயிரைக் காற்றோடு
கலப்பது தான் வழியோ

தொடர்ந்து போகும் அவல வாழ்வால்
அடம்பன் கொடியாய்
ஆயுதம் முளைத்திட
என் ஜீவிதம் மறுபடியும் நிமிரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம் பெயர் படைப்புகள்

# மீதான விவாதங்கள்

-அக்கினி 77

ஈழத்தின் போர்க்கால அவலங்கள், ஈழக் கனவுகளை, பேச்சுச் சுதந்திரத்தை, கருத்துச் சுதந்திரத்தை மறுக்கத் தொடங்கிய வேளைகளிலும், படைப்புகளும் படைப்பாளிகளும் ஒடுக்கப்பட்ட வேளைகளிலும், புலம் பெயர் சூழலில் ஈழத்து இலக்கியங்கள் படைப்புகள் புலம் பெயர் நாடுகளில் வளரத் தொடங்கியது. புலம் பெயர் இலக்கியங்களைப் போன்று புலம் பெயர் ஊடகங்களும் முக்கிய வளர்ச்சி கண்டன. அந்த வேளையில் ஈழத்துத் தமிழ் புலம் பெயர் படைப்பாளிகள், இலக்கியவாதிகள் தங்கள் செயற்பாடுகள், தங்கள் வெளிப்பாடுகள் பற்றிப் பதிவு செய்யும் வகையில் இப்பகுதி களம் அமைத்துத் தருகின்றது. எனவே, "புலம் பெயர் படைப்புகள் மீதான விவாதங்கள்" என்ற சிறப்பு பகுதியில்.......

இம்மாத இதழில் பங்கு கொள்கின்றவர்கள் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த நாடகக் கலைஞர் எனெஸ்ட் தளையசிங்கம் மக்கின்ரயர், ஈழத்தின் மிகப்பெரும் இலக்கியப் படைப்பாளி எஸ். பொ, கவிஞர் ஈழவாணி, யாழ் தர்மினி பத்மநாதன் ஆகியோர்.


தாசீசியஸ் மீது எனக்கு கேள்வி உண்டு...
விவாத சூடேற்றத்தில் எஸ். பொ.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் கோண்டாவில்லைச் சேர்ந்தவரும், சென்பற்றீக்ஸ் கல்லூரியின் முன்னாள் மாணவனுமான எனெஸ்ட் தளையசிங்கம் மக்கின்ரயர் 1973ல் புலம் பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வசித்து வருகின்றார். புலம்பெயர் நாடுகளில் பெரிதும் பேசப்படும் நாடகக்கலைஞர் இவர். அண்மையில் சென்னைக்கு வந்திருந்தபோது மித்ரா பதிப்பக அலுவலகத்தில் சந்திக்க முடிந்தது.




மக்கின்ரயரால் 2009ல் அவுஸ்திரேலியாவில் அரங் கேற்றப்பட்ட ஐராங்கனி என்கின்ற சிறிலாங்காவின் அன்றிகனி நாடகம் மிகவும் முக்கியத் துவம் வாய்ந்தது. 2009ல் ஈழப் போராட்ட கால கட்டத்தில் இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமான போராட்டம், அரசின் தாக்கங்கள், பாதிப்புகள் குறித்தும், அவலம் குறித்தும் பேசப்பட்ட துன்பியல் நாடகம் ஐராங்கனி. இந்த நாடகம் பற்றிய சந்திப்பு, கலந்துரையாடல், வினாக்கள் என ஒருபுறம் நகர. இன்னொரு புறமாக புலம் பெயர் படைப்பாளிகள் மீதான குற்றச்சாட்டுகளும், கேள்விகளும் அதிருப்திகளும் முன்வைக்கப்பட்டது.



**ஐராங்கனி நாடகத்தில் சில காட்சிகள்**

ஈழத்தில் பேசப்பட்ட நாடகக் கலைஞன் தாசீசியஸ் புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் பின்னான காலப்பகுதியில், நீண்ட கால இடைவெளியின் பின் லண்டனில் இருந்து ஈழத்திற்கு வருகை தந்த போது பல்கலைக்கழகத்தவர்கள், மற்றும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத் துறை சார்ந்த இலக்கிய நிறுவனம் ஆகியவற்றில், நாடகத் துறைப் பயிற்சி போன்றவற்றையும் நடத்தியிருந்தார். அதே போன்று புலம் பெயர் நாடுகளிலும் அவரது நாடகங்கள், பயிற்சிகள் இயங்கி வருவதும் கலைஞர்கள் அறிந்த விடயம். அது அவ்வாறிருக்க "தாசீசியஸ்" என்ற நாடகக் கலைஞன் வெறும் உடல் மொழியை மட்டுமே முன்வைக்கின்றார். அவரது நாடகங்களில் பாவங்கள் இல்லை, நயங்கள் குறைவு. எமக்குத் தேவை வெறும் உடல் மொழி மட்டுமல்ல. அதே நேரம் ஒரு நாடகம் மேடை ஏறும் போது, அந்த மேடை ஏற்றத்திற்கு முன் நாடகப் பயிற்சி செய்தபின் மேடையேற்றுகின்றாரா? நாடகங்களை மேடையேற்றும் தாசீசியஸ் ஏன் நாடக நூல் நாடக இலக்கியங்களை உருவாக்கவில்லை? நாளைய சந்ததிக்கு நாடக இலக்கியம் ஏது? மீண்டும் மீண்டும் சேக்ஸ்பியர் நாடகம் பற்றித் தான் நாடக இலக்கியத்தில் பேசப் போகின்றோமா? சிவத்தம்பி நாடகத்திற்கு என்ன செய்தார்? எதற்காக அவரை நாடகத்தில் பெரியளவில் பேச வேண்டி உள்ளது? என்பது எஸ்.பொ.வின் வாதம்.

ஆயினும் ஈழத்தில் அரங்க வரலாறு எனும் போது பல்வேறுபட்ட தளத்தில் அதன் இலங்கு நிலை உள்ளது. சில நாடகங்களுக்கு உடன் நாடகப்பிரதி எழுத முடியாது. நாடக பிரதியே இங்கு இலக்கியமாகின்றது. உதாரணமாக க. சிதம்பரநாதன், S. விந்தன் ஆகியோரது நாடகங்கள் தன்னெழுச்சியானவை. நிகழ்களத்தில் உணர்வெழுச்சி கொண்டு அவை களமாடும். இவ்வாறான நாடகங்கள் பார்வையாளரையும் பங்கு கொள்ள வைக்கின்றது. பார்வையாளரும் பங்கு கொள்ளும் நாடகங்கள் நாடக ஆற்றுகையின் பின்பே முழு இலக்கியத்திற்கான வடிவத்தைப் பெறுகின்றன. ஆரம்பத்தில் ஆற்றுகைக்கான குறிப்புகளையே இந்தவகை உருவாக்க முடியும்.

உண்மையில் எதிர்கால சந்ததியினருக்கும் நாடகக் கலைஞர்கள் தங்களின் ஒவ்வொரு அசைவுகளையும் ஆவணப்படுத்த வேண்டியது அவசிய மானது. அந்த அவசியப்படுத்தல் புலம் பெயர்ந்த நாடுகளிலும், ஏனைய நாட்டின் கற்பிதங்களுக்கானவையாக அமையுமென்பதில் மிகையல்ல.



எனவே ஈழத்து புலம் பெயர் படைப்பாளிகள் நாடகம் மட்டுமன்றித் தங்களின் ஒவ்வொரு படைப்புகளையும் பதிவு செய்ய வேண்டும் என்பது ஈழவரலாற்றின் தேவையும் கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழவாணியின் நூல்கள்



தலைப்பு இழந்தவை (கவிதை நூல்)
தகிதா பதிப்பகம்
விலை : 40/-
2010



ஈழத்து நாட்டார் பாடல்கள் (தொகுப்பு)
உயிர்மைப் பதிப்பகம்
விலை : 180/-
2012



ஒரு மழைநாளும் நிசியும்தாண்டிய ராத்திரியும் (கவிதை நூல்)
உயிர்மைப் பதிப்பகம்
விலை : 65/-
2012




நிர்வாண முக்தி (சிறுகதைத் தொகுப்பு)
சூரியன் வெளியீடு
விலை : 100/-
2013

## தொடர்புக்கு :

போன் : 919600131346
Email ID: eezhavani@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் இலக்கியத்தில் முத்தமிழ்க் கவிஞர் முனைவர் ஆலந்தூர் மோகனரங்கன் அணிவகுப்பு

**பரிதிமாற் கலைஞர் படைத்த இலக்கியங்கள்**
முதல் தொகுப்பு 110.00
இரண்டாம் தொகுப்பு 85.00
மூன்றாம் தொகுப்பு (ரூபாவதி) 60.00
நான்காம் தொகுப்பு (கலாவதி) 85.00

**சபாபதி நாவலர்**
திராவிடப் பிரகாசிகை 160.00
ஈழத்துப் பெரும்புலவர் அ. சதாசிவம்பிள்ளை
சரித்திர தீபகம் முதல் தொகுப்பு 100.00
ரா. ராகவையங்கார்
தமிழ் வரலாறு 125.00

**வ.வே.சு. ஐயர்**
மங்கையர்க்கரசியின் காதல் 60.00

**வித்துவான் க. வெள்ளைவாரணனார்**
தமிழ் இலக்கிய வரலாறு தொல்காப்பியம் முதல் பகுதி 85.00
தமிழ் இலக்கிய வரலாறு தொல்காப்பியம் 130.00

**டாக்டர் வ. சுப. மாணிக்கனார்**
சிந்தனைக் களங்கள் 160.00
**ந. சுப்புரெட்டியார்**
கவிதையனுபவம் 185.00

**யாழ்ப்பாணத்து நல்லூர் த. கைலாசபிள்ளை**
ஆறுமுகநாவலர் சரித்திரம் 55.00

**யாழ்ப்பாணத்து மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை**
அபிதான கோசம் - முதல் தொகுப்பு 85.00
இரண்டாம் தொகுப்பு 100.00

**யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர்**
பிழையில்லாமல் எழுத இலக்கணச் சுருக்கம் 90.00
பாலபாடம் (நான்கு பகுதிகள்) தொகுப்பு 120.00
சூடாமணி நிகண்டு 125.00
முப்பெரும் இலக்கண நூல்கள் 90.00
(தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி, இலக்கணக் கொத்து)

**மாயூரம் முன்சீப் வேதநாயகம்**
பிரதாப முதலியார் சரித்திரம் 140.00
கருண சுந்தரி 40.00

**மனோன்மணீயம் சுந்தரனார்**
சரித்திர சங்கிரகம் என்னும் நூற்றொகை விளக்கம் 60.00
(நூறாண்டுகளுக்கு முன்பு வெளிவந்த நூல்)

**மாகறல் கார்த்திகேயனார்**
மொழி நூல் 110.00

**யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர்**
யாப்பாருங்கலக் காரிகைப் புத்துரை உரிச்சொல் நிகண்டு இணைந்தது 110.00

**ஈழத்துப் பேரறிஞர் மு. கனகசபை**
1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் (தமிழாக்கம் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்) 125.00

**யாழ்ப்பாணம் க. மயில்வாகனனார்**
வினோத விசித்திரக் கவிப் பூங்கொத்து 40.00

**திருமணம் செல்வக் கேசவராயர்**
தமிழிலக்கியத் திறனாய்வுகள் 100.00
பழமொழி நானூறு 130.00
செல்வக்கேசவராயர் கதைக்களஞ்சியம் 90.00
செல்வக்கேசவராயர் கட்டுரைகள் 140.00

**நாவலர், பண்டித ந.மு. வேங்கடசாமி**
நாவலர், பண்டித ந.மு. வேங்கடசாமி நற்றமிழ் நூல்கள்
முதல் தொகுப்பு 120.00
இரண்டாம் தொகுப்பு 80.00
மூன்றாம் தொகுப்பு 75.00
பழைய தமிழ் அகராதி பிங்கல நிகண்டு 110.00

**கா. நமச்சிவாயர்**
நீதி நூல்கள் முதல் தொகுப்பு 80.00
இரண்டாம் தொகுப்பு 75.00
மூன்றாம் தொகுப்பு 60.00
நான்காம் தொகுப்பு 90.00
தஞ்சைவாணன் கோவை - மூலமும் உரையும் 130.00
நன்னூல் எழுத்ததிகாரம் 100.00
நன்னூல் சொல்லதிகாரம் 85.00

**மறைமலையடிகள்**
மனிதவசியம் அல்லது மனக்கவர்ச்சி 90.00
தமிழின் தனிச்சிறப்பு 50.00
தமிழர் மதம் 100.00
அறிவுரைக்கொத்து 60.00

**பேராசிரியர் கே. என். சிவராஜபிள்ளை**
மேகமலை 80.00
புறநானூற்றின் பழைமை 120.00

மற்றும் தமிழறிஞர்களின் மணி மணியான நூல்கள் நூற்றுக்கணக்கில் வெளியிட்டுள்ளோம்
தொடர்புக்கு : முனைவர் மோ. பாட்டழகன்

**வசந்தா பதிப்பகம்**
புதிய எண் : 26, குறுக்குத் தெரு, சோசப் குடியிருப்பு, ஆதம்பாக்கம், சென்னை - 600 088.
☎: 044-22530954, 22533667, 9380417307. மின்னஞ்சல் : vasantha399@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூவரசி இதழுக்கு வாழ்த்துகள். முதல் நூலை வாங்கிப் படிக்க சந்தர்ப்பம் கிடைத்தது, கட்டமைப்பு அருமை பாலு மகேந்திராவின் நேர்காணல், S. Po ஐயாவின் நேர்காணல் போன்றவற்றை ரசித்துப் படித்தேன். அரையாண்டு இதழ் என்பதால் இன்னும் நிறையத் தகவல்களை உள்வாங்கலாம் என்பது என்னுடைய கருத்து. எழுத்துப் பிழைகளையும் தவிர்த்துக கொண்டால் நல்லது.

வாசகன்
றெஜினோல்ட்
சிங்கபூர்

கனகராசு
நீர்வேலி
இலங்கை



பூவரசி 2-வது இதழ் பார்த்தேன் வித்தியாச மான முயற்சி பல சஞ்சிகைகள் வரும் காலத்திலும் பூவரசியின் வருகை அற்புதம் வாழ்த்துகள்.
படைப்புகளில் கட்டுரைகள் பேட்டிகள் சிறப்பாக இருக்கிறது. ஆர்த்மார்தியின் கண்களின் நடனம் அபாரம்.
ஒரு விமர்சனம் உண்டு 125/- விலையே இங்கு 35.5வரை ஆகிறது. பத்திரிகையின் விலையை சிறிது குறைத்தால் வாசகர்களுக்கு வசதியாக இருக்கும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
26.08.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org